KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 07 பெப்ரவரி 2025 இதழ்:- 06

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## பிரிந்திருந்த திருடர்கள் ஒன்று கூடி விட்டனர்! வல்வெட்டித்துறையில் ஜனாதிபதியின் உரை!



யாழிற்கு விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி வல்வெட்டித்துறை பிரதேச த்தில் 31 ஜனவரி 2025 வெள்ளிக் கிழமை நண்பகல் சிநேகபூர்வ சந்திப்புக் களில் பங்கேற்றார் மக்களை பிரிப்பதற்கு பதிலாக மக்களை இணைக்கும் அரசியலை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தமது அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் வல்வெட்டித்துறை (20ம் பக்கம் ார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham M.A.Sc. (Eng.), P.Eng.
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கலந்துரையாடல்! தமிழர் தரப்பும் கலந்து கொண்டது! தமிழ் பொதுமக்கள் விசனம்!

# புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது! கௌரவிப்பு விழாவில் நீதிபதி இளஞ்செழியன் ஆதங்கம்!

புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது என வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ் செழியன் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார். வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப்பெரிய குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் கடந்த 01 பெப்ரவரி 2025 சனிக்கிழமை ஓய்வு பெற்ற மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் வவுனியாவில் நீதவானாக 9 ஆண்டுகள், வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 3 ஆண்டுகள் கடமை புரிந்துள்ளேன். திருகோணமலையில் 2008– 2010 (9ம் பக்கம் பார்க்க)



## அரகலய போராட்டத்தில் எரிக்கப்பட்ட வீடுகளுக்காக எம்.பி.க்கள் பெற்ற இழப்பீட்டுத் தொகை என்ன தெரியுமா?


உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங் கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENT!
## PREMIER RESULTS !!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com
**Bus: 416-289-3333**

22 Years Real Estate Experience


RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch


**Scarborough** $449,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


### Eglinton/Markham

**Scarborough** $475,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Renovated throughout the years


### Westney Rd / Kingston Rd

**Ajax** $489,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Closer to Highway 401

### Markham / Ellesmere

**Scarborough** $529,990
1+1 Beds • 2 Baths • 4 Rooms
Brand New Penthouse unit

### Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Corner unit offers a prime location


### Markham & 14th Avenue

**Markham** $649,000
2+1 Beds • 2 Baths • 5 Rooms
Open-concept living and dining

### Cornell Meadows / 9th Line

**Markham** $668,000
2 Beds • 3 Baths • 7 Rooms
Upgraded floor, Newly renovated

### Markham & Sheppard

**Scarborough** $679,900
3+1 Beds • 1 Baths • 6 Rooms
New Laminate Floors Throughout

### Altona & Finch

**Pickering** $789,900
3 Beds • 4 Baths • 8+2 Rooms
Freehold Townhouses

### Guildwood Village

**Scarborough** $999,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Basement with separate entrance

### Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol


**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### Simcoe / Winchester

**Oshawa** $1,149,000
4 Beds • 4 Baths • 8 Rooms
Easy access to the new 407

### Glen Dhu Dr/Flint Cres

**Whitby** $1,188,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Over $130k on Renovations

### 9th Line/Hoover Park

**Stouffville** $1,339,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Beautifully Landscaped Exterior

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அரகலய போராட்டத்தில் எரிக்கப்பட்ட வீடுகளுக்காக எம்.பி.க்கள் பெற்ற இழப்பீட்டுத் தொகை என்ன தெரியுமா?

2022ஆம் ஆண்டு இடம் பெற்ற அரகலய போராட்டத்தின் போது எரிக்கப்பட்ட வீடுகளுக்காக பாராளு மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திட மிருந்து பெற்ற இழப்பீட்டுப் பட்டி யலை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

அதற்கமைய பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை 122.41 கோடி ரூபாவாகும் என அவர் மேலும் தெரி வித்தார்.

இவர்களில், கெஹெலிய ரம்புக்வெல்ல 959 மில்லியன் ரூபா இழப்பீட்டைப் பெற்றுள்ளதோடு, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ 934 மில்லியன் ரூபாவும், காமினி லொக்குகே 749 மில்லியன் ரூபாவும், அலி சப்ரி ரஹீம் 709 மில்லியன் ரூபா மற்றும் நிமல் லன்சா 692 மில்லியன் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக பெற்றுள் ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கபில நுவன் அத்துகோரள ரூபா. 504,000. விமலவீர திசாநாயக்க ரூபா. 550,000 கீதா குமாரசிங்க ரூ.பா 972,000 ஜனக திஸ்ஸகுட்டிஆராச்சி ரூபா 1,143,000 குணபால ரத்னசேகர ரூபா 1,412,780 பிரேம்நாத் சி. தொலவத்த 23 இலட்சம் ரூபா பிரியங்கர ஜயரத்ன ரூபா 2,348,000 சம்பத் அத்துகோரள ரூபா. 2,540,610

ஜயந்த கெடகொட ரூபா 2,814,800 விமல் வீரவன்ச ரூபா 2,954,000 பேராசிரியர் சன்ன ஜயசுமன ரூபா. 3,334,000 அகில எல்லாவல ரூபா. 3,554,250 சமல் ராஜபக்ஷ ரூபா. 6,539,374 சந்திம வீரக்கொடி ரூபா. 6,948,800 அஷோக பிரியந்த ரூபா. 7,295,000 சமன் பிரிய ஹேரத் 105.2 இலட்சம் ரூபா ஜனக பண்டார தென்னகோன் 105.5 இலட்சம் ரூபா ரோஹித அபேகுணவர்தன 116.4 இலட்சம் ரூபா விசேட வைத்தியர் கீதா அம்பேபொல 137.8 இலட்சம் ரூபா சஹன் பிரதீப் 171.3 இலட்சம் ரூபா செஹான் சேமசிங்க 185.1 இலட்சம் ரூபா இந்திக்க அநுருத்த 195.5 இலட்சம் ரூபா மிலான் ஜயதிலக 223 இலட்சம் ரூபா வைத்தியர் ரமேஷ் பத்திரன 281 இலட்சம் ரூபா துமிந்த திசாநாயக்க 288 இலட்சம் ரூபா கனக ஹேரத் 292 இலட்சம் ரூபா டீ.பி.ஹேரத் 321 இலட்சம் ரூபா பிரசன்ன ரணவீர 327 இலட்சம் ரூபா டபிள்யு டீ.வீர சிங்க 372 இலட்சம் ரூபா ஷாந்த பண்டார 391 இலட்சம் ரூபா எஸ்.எம்.சந்திரசேன 438 இலட்சம் ரூபா சனத் நிஷாந்த 427 இலட்சம் ரூபா சிரிபால கம்லத் 509 இலட்சம் ரூபா அருந்திக்க பெர்னாண்டோ 552 இலட்சம் ரூபா சுமித் உடுக்கும்புர 559 இலட்சம் ரூபா

பிரசன்ன ரணதுங்க 561 இலட்சம் ரூபா கோகிலா குணவர்தன 587 இலட்சம் ரூபா மொஹான் பீ டி சில்வா 601 இலட்சம் ரூபா நிமல் லன்சா 692 இலட்சம் ரூபா அலி சப்ரி ரஹீம் 709 இலட்சம் ரூபா காமினி லொக்குகே 749 இலட்சம் ரூபா ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ 934 இலட்சம் ரூபா கெஹெலிய ரம்புக் வெல்ல 959 இலட்சம் ரூபா

# எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கலந்துரையாடல்! தமிழர் தரப்பும் கலந்து கொண்டது! தமிழ் பொதுமக்கள் விசனம்!

பாராளுமன்ற விவகாரங்கள் உட்பட எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கிய கலந்துரையாட லொன்று எதிர்க்கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 05 பெப்ரவரி 2025 புதன் கிழமை பாராளுமன்றத்தில் அமைந்து ள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக த்தில் நடைபெற்றது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிர-திநிதித்துவப்படுத்தும் கட்சிகளி டையே இணக்கப்பாட்டை ஏற்படுத் திக் கொள்வது இக்கலந்துரையாட லின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலம் பலமான பாராளுமன்ற நடவடிக்கைகளை கொண்டமைந்த பாராளுமன்றத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு ஆதரவளிப் பது போலவே, நாட்டு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடி க்கைகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் பக்கம் நாம் முன்நிற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு தெரிவித்தார்.

பாராளுமன்ற குழுக்களில் கவனம் செலுத்தி அடுத்தகட்ட நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என இங்கு சகல கட்சித் தலைவர்களும் தமது கருத்துக்களை எடுத்துரைத்து சுட்டி க்காட்டினர்.



கடந்த ஜனவரி 29ஆம் திகதியும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படு த்தும் கட்சித் தலைவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கூடி இதேபோன்ற கலந்துரையாடலொன்றை நடத்திய தோடு நடைபெற்ற கலந்துரையாட லும் இதன் தொடர்ச்சியாகும்.

இக்கலந்துரையாடலில், எதிர்க்கட்சி யைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக்க (எதிர்க்கட்சி யின் பிரதம கொறடா), ஜே.சி. அலவ துவல (எதிர்க்கட்சியின் பிரதி அமை ப்பாளர்), அஜித் பி. பெரேரா (எதிர்க் கட்சியின் பிரதி அமைப்பாளர்), ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், சிவஞானம் ஸ்ரீதரன், பி. சத்தியலிங்கம், அமிர்தநாதன் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரவூ ப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், வீ.எஸ். இராதாகிருஷ்ணன், அனுராத ஜயரத்ன, டி.வீ.சானக மற்றும் காதர் மஸ்தான் முதலானோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தமிழர் தரப்புப் பிரதி நிதிகள் கலந்து கொண்டது குறித்துப் தமிழ்ப் பொதுமக்கள் பலரும் பொது அமைப்புக்களும் விசனம் தெரிவித்து ள்ளன. 75 ஆண்டுகளாக தமிழினத்தை அழித்து அரசியல் உரிமைகளை மறுத்து வந்ததுடன் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி ஊழல் பெருஞ்சாலிகளாக மாறி மக்களால் துரத்தியடிக்கப்பட்ட கும்பல்கள் மீண்டும் ஒன்று சேர்வதற்கு நடத்திய கூட்டத்தில் ஏன் இவர்கள் கலந்து கொள்ள வேண்டும்?

எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்த இவ் வேளையில் இனப்பிரச்சனை தொடர் பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் படி வற்புறுத்தினார்களா என்றால் அதுவும் இல்லை.

வடக்கு கிழக்கில் தமது பிடி படிப்படி யாக தளர்ந்து அநுராவின் ஆதரவு பெருகும் நிலையில் அதனைச் சரி செய்து தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்காது தமது நவனுக் காகவே இவர்கள் கலந்து கொண்டு ள்ளனர். இவர்களது இந்தச் செயற்பாடு தமிழ் மக்களை இன்னும் இன்னும் அநுரவின் பக்கம் செல்வதற்கு வழி தேடுமே தவிர வேறு ஒன்றும் நடக்கப் போவதில்லை. அதிகாரத்தில் இருப்ப வனை பகைத்து என்ன பலனை இவர்கள் காணப் போகின்றனர்? என மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# கனடா, மெக்ஸிகோ மீதான வரி விதிப்பை இடை நிறுத்தினார் ட்ரம்ப்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திங்களன்று (03) மெக்சிகோ மற்றும் கனடா மீதான தனது கடுமையான கட்டண அச்சுறுத்தலை இடைநிறுத்தினார்.

இரு அண்டை நாடுகளுடனான எல்லை மற்றும் குற்ற அமலாக்கத்திற்கான சலுகைகளுக்கு ஈடாக வரி விதிப்பினை 30 நாட்களுக்கு இடைநிறுத்துவதற்கு அவர் ஒப்புக்கொண்டார். எனினும் சீனா மீதான அமெரிக்க வரிகள் அமலுக்கு வர உள்ளன.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் இருவரும் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க ட்ரம்பின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் எல்லை அமுலாக்க முயற்சிகளை வலுப்படுத்த ஒப்புக்கொண்டதாக தெரிவித்தனர்.

இதனால், 04 பெப்ரவரி 2025 செவ்வாய்கிழமை முதல் நடைமுறைக்கு வரவிருந்த 25வீத வரி விதிப்பானது அடுத்த 30 நாட்களுக்கு ட்ரம்பின் உத்தரவுக்கு அமைவாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான அதன் எல்லையில் புதிய தொழில்நுட்பம் மற்றும் பணியாளர்களை நிலைநிறுத்தவும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பணமோசடி ஆகியவற்றை எதிர்த்து கூட்டு முயற்சிகளைத் தொடங்கவும் கனடா ஒப்புக்கொண்டது.

மெக்ஸிகோ தனது வடக்கு எல்லையை 10,000 தேசிய காவலர் உறுப்பினர்களுடன் வலுப்படுத்த ஒப்புக் கொண்டது. இது சட்டவிரோத இடம் பெயர்வு மற்றும் போதைப்பொருள் ஓட்டத்தைத் தடுக்கிறது.

எவ்வாறெனினும் செவ்வாய்க் கிழமை இல் தொடங்குவதற்கு தயாராக இருக்கும் 10வீத முழுவதுமான கட்டணங்களை எதிர் கொள்ளும் சீனாவிற்கு அத்தகைய சலுகைகள் எதனையும் அமெரிக்க அரசாங்கம் அறிவிக்கவில்லை.

இந்த வாரம் வரை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் ட்ரம்ப் பேசமாட்டார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். அதேநேரம், பீஜிங் மீதான வரியை மேலும் அதிகரிக்கலாம் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

மேலும், வரி விதிப்பில் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தனது அடுத்த இலக்காக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 02 பெப் 2025 ஞாயிற்றுக்கிழமை கூறினார். ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் மீதான வரி விதிப்பு எப்போது என்று அவர் கூறவில்லை.

2020 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறிய பிரிட்டன், கட்டணங்களைத் தவிர்க்கலாம் என்றும் ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.

திங்களன்று பிரஸ்ஸல்ஸில் நடந்த முறைசாரா உச்சிமாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள், அமெரிக்கா கட்டணங்களை விதித்தால், ஐரோப்பா எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கும் என்று கூறினர். எனினும், அவர்கள் ட்ரம்புடனான பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுத்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் முதலீட்டு பங்காளியாக அமெரிக்கா உள்ளது. இதனிடையே ட்ரம்ப் வார இறுதியில் வெள்ளை மாளிகையில் ஆற்றி உரையில், தனது கட்டணங்கள் அமெரிக்க நுகர்வோருக்கு சில குறுகிய கால வலியை ஏற்படுத்தக்



கூடும் என்று ஒப்புக்கொண்டார். ஆனால் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தவும் உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவும் அவை தேவை என்றும் வலியுறுத்தினார்.

ஏனைய ஆய்வாளர்கள் இந்த கட்டணங்கள் கனடா மற்றும் மெக்சிகோவை மந்த நிலையில் தள்ளலாம் மற்றும் தேக்கநிலையை தூண்டலாம் அதிக பணவீக்கம், தேக்கமான வளர்ச்சி மற்றும் உயர்ந்த வேலையின்மையை ஏற்படுத்தலாம் என்று எச்சரித்தும் உள்ளனர்.

சீன நிதித்துறை என்ன கூறுகிறது?

அமெரிக்காவின் வரி விதிப்பை கண்டித்து சீன நிதித்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் சர்வதேச வர்த்தக விதிகளை அமெரிக்கா மீறியுள்ளதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் ஒரு தலைபட்சமான வரி திணிப்புகள் உலக வர்த்தக அமைப்பின் விதிகளை கடுமையாக மீறுகின்றன. தனது நாட்டின் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள இந்த நடவடிக்கை உதவாது. அது மட்டுமல்லாமல் அமெரிக்கா-சீனா இடையிலான பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பையும் இது பாதிக்கும்' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பதிலுக்கு பதில் என்ற அணுகுமுறையை சீனா மேற்கொள்ள தயாராக இருக்கிறது என்பது தெரிகிறது. இது பல நிபுணர்களையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது. எனினும், அமெரிக்கா விதித்த வரி, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் பொருந்தும். ஆனால் சீனாவின் வரி விதிப்பு குறிப்பிட்ட சில சரக்குகளுக்கு மட்டுமே பொருந்தும்.

சீனா மீதான வரிகள் மேலும் உயர்த்தப்படலாம் என்றும் டிரம்ப் ஏற்கெனவே எச்சரித்துள்ளார். சீனா ஃபென்டனில் அனுப்பாது என்று நம்புகிறோம். அப்படி செய்தால் வரிகள் மேலும் அதிகரிக்கப்படும்' என்று டிரம்ப் கூறியிருந்தார். ஃபென்டனில் போதை மருந்து அமெரிக்காவின் பிரச்னை என்று சீனா கூறுகிறது. அதே நேரம் பேச்சுவார்த்தைகளுக்கு தனது கதவுகளை திறந்து வைத்திருப்பதாகவும் சீனா சொல்கிறது.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# வடக்கு கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டம்! சுதந்திர தினம் கரிநாளாக அனுஷ்டிப்பு!

இலங்கையில் 77ஆவது சுதந்திர தினம் வடக்கு, கிழக்கில் கரி நாளாக பிரகடனம் செய்யப்பட்டு 04 பெப் 2025 செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டதோடு பாரிய கவனயீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, இனப்படுகொலைக்கு நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.




போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

### யாழ்.பல்கலைக்கழகத்தில் போராட்டம்

முதலில் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான கொடி கம்பத்தில் பறந்த இலங்கைத் தேசியக் கொடி பல்கலைக்கழ மாணவர்களால் இறக்கப்பட்டு பின்னர் கறுப்புக் கொடியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தின் பல பாகங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட நிலையில் பிரதான வாயிலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முற்பகல் 11.00 மணியளவில் போராட்டத்தினை ஆரம்பித்த மாணவர்கள், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்து, இலங்கையை குற்றவியல் கூண்டில் நிறுத்து, இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் எங்கே, ஓலம் நிறைந்த தமிழர் வாழ்வுக்கு எப்போது விடிவு, உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பினார்கள்.



போராட்டத்தின் இறுதியில் 'எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்' என்ற தலைப்பிலான பிரகடனத்தையும் வெளியிட்டனர்.

### நல்லூரில் போராட்டம்

இதேவேளை, நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கறுப்புக்கொடி ஏந்திய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட இளையோர் பங்கேற்றிருந்தனர்.

### கிளிநொச்சியில் போராட்டம்

வழிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகிய போராட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறிதரன், முன்னாள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும், இலங்கையை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும், ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? உட்பட பல கோசங்களை எழுப்பினர்.

### மட்டக்களப்பில் போராட்டம்

கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மட்டக்களப்பு – செங்கலடி பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

செங்கலடி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி கொம்மாதுறை பிள்ளையார் ஆலய முன்றலைச் சென்றடைந்து, அங்கு போராட்டம் தொடர்ந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பாராளுமன்றக் குழு பேச்சாளருமான ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்களென பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள்', 'நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும் போது நாங்கள் ஒடுக்கப்படுவதா', 'உங்களுக்கு சுதந்திர நாள் எங்களுக்கு திண்டாட்ட நாள்', 'காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?', 'எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும்', 'நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு?', 'சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?', 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?' போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு ஈடுபட்டனர்.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை வட,கிழக்கு தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டிக்கும் வகையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு நகரில் முன்னதாக போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டம் செங்கலடியில் முன்னெடுக்கப்பட்டதோடு, போராட்டத்தின் இறுதியில் சர்வதேச சமூகத்துக்கு அனுப்புவதற்கான மகஜரொன்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி செல்வராணியினால் வாசிக்கப்பட்டது.

## கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம் பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந் தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன. மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

## காசாவை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும்

காசாவை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவுள்ளதாக அதிர்ச்சி அறிவிப்பொன்றை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வெளியிட்டுள்ளார்.

பாலஸ்தீனியர்கள் காசாவிற்கு வெளியே மீள்குடியேற்றப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய பிரதமருடனான சந்திப்பின் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காசாவை அமெரிக்கா பொறுப்பேற்று அங்குள்ள வெடிபொருட்கள் போன்றவற்றை அகற்றுவதுடன் அதனை அபிவிருத்தி செய்யும் என தெரிவித்துள்ள டிரம்ப் காசா அபிவிருத்தி செய்யப்படும் காலப்பகுதியில் பாலஸ்தீனியர்கள் வேறு பகுதிகளில் மீள் குடியேற்றப்படுவார்கள் என தெரிவித்துள்ளார்.



இதேவேளை இது குறித்து பதிலளித்துள்ள பெஞ்சமின் நெட்டன்யாகு இந்த யோசனை ஆராயப்படுவதற்கு தகுதியான ஒன்று என குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா.மனித உரிமைக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க விஜித ஹேராத் தலைமையிலான குழு ஜெனிவா செல்கிறது



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக் கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதில ளிக்கும் வகையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத் தலை மையிலான இராஜதந்திர சிறப்பு குழு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்று க்கிழமை ஜெனிவாவுக்கு விஜயம் செய்கிறது.

இலங்கைக்கு எதிரான போர் குற்றச் சாட்டுகள் குறித்து விசேட அறிக் கையை இலங்கை தரப்பு சமர்பிக்க உள்ளதுடன், சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாக்க புதிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை கள் தொடர்பான நீண்ட தெளிவுப் படுத்தலை முன்வைக்கவும் தீர்மானி க்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில் மனித உரிமை பேரவையின் அமர் வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51–1 நகல்வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கவும், இலங்கையில் இடம் பெற்றதாக கூறப் படுகின்ற போர் குற்றங்கள் குறித்து ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் தீர்மானத்தை நிராகரிக்கவும் ஜனாதிபதி அநுர குமார திசாநயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானி த்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதி பதி அநுரகுமார திசாநாயக்க தலை மையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி கூடிய அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப் பட்டது.

இதேவேளை உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப் புடன் செயல்படுவதாக உறுதியளித் துள்ளது. ஆனால் ஜெனிவா தீர்மான த்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், இறுதி க்கட்ட போரில் இடம் பெற்றதாக கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களு க்கு பதிலளிக்கும் வகையிலான நேர்மையான அறிக்கையை கூடிய விரைவில் அரசாங்கம் முன்வைக்க உள்ளதாக தெரிவித்திருந்தது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்கு பதிலளிப்பதாக அல்லாது எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவ தாகவே அமையும் என அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது.

புதிய அரசாங்கத்தின் முன்னெடுப்பு களுக்கு சர்தேசத்தின் ஒத்துழைப்பு களை ஜெனிவாவில் கோரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறிப் பாக தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்தின் வெளிப் படைத்தன்மையை பிரதிபலிக்கும் வகையிலேயே சிறப்பறிக்கை அமைய உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத் குறிப்பிட்டிருந்தார்.

விசேட இராஜதந்திர குழு ஊடாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பறிக் கையானது தற்போது நிறைவுப்படு த்தப்பட்டுள்ளதுடன், அந்த அறிக் கையுடனேயே அமைச்சர் விஜித ஹேராத் தலைமையிலான குழு ஜெனிவா செல்கின்றமை குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்காவின் நியாயமற்ற வரிகளுக்குப் பதிலாக கனடா 155 பில்லியன் டொலர் வரித் திட்டத்தை அறிவித்தது!



ஐக்கிய அமெரிக்கா கனேடிய பொருட் கள் மீது விதித்த நியாயப்படுத்த முடியாததும், நியாயமற்றதுமான வரிகளுக்குப் பதில் நடவடிக்கையாக 155 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் மீது கனேடிய அரசு வரி களை விதிக்குமென நிதியமைச்சரும், பல்மட்ட அரசுகளுக்கு இடையிலான விவகாரங்களுக்கான அமைச்சருமான கௌரவ டொமினிக் லெப்ளாங்க்கும் (Dominic LeBlanc), வெளியுறவு அமைச்சர் கௌரவ மெலனி ஜொலியும் 02 பெப் 2025 அறிவித்தார்கள்.

கனடாவின் நலன்களையும், நுகர் வோரையும், பணியாளர்களையும் வணிக நிறுவனங்களையும் பாதுகாப்ப தும், தற்காப்பதுமே இந்தப் பதில் நடவடிக்கைகளின் ஒரே நோக்கமாகும். எமது பதில் நடவடிக்கையின் முதல் கட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 30 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் மீதான வரிவிதிப்பு உள்ளடங்குகிறது. ஐக்கிய அமெரிக்க வரிகள் நடைமுறைக்கு வரும் ஃபெப்ர வரி 4, 2025 அன்றே இந்த வரிகளும் நடைமுறைக்கு வரும். தோடம்பழச் சாறு, கச்சான் பட்டர் (peanut butter), வைன், மதுபானங்கள், பியர், கோப்பி, வீட்டு உபகரணப் பொருட்கள், ஆடைகள், பாதணிகள், மோட்டார் சைக்கிள்கள், அழகுசாதனப் பொருட் கள், கடதாசிக் கூழும் கடதாசியும் போன்றன வரிவிதிப்புப் பட்டியலில் அடங்கியிருக்கும். இந்தப் பொருட் களின் விரிவான பட்டியல் விரைவில் வெளியிடப்படும்.

ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 125 பில்லியன் டொலர் பெறுமதியான மேலதிக பொருட்களுக்கும் வரிகளை விதிக்க அரசு உத்தேசித்துள்ளதாக அமைச்சர் லெப்ளாங்க் மேலும் அறிவித்தார். வரி நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன் பாக முழுமையான பட்டியல் பகிரங்க ப்படுத்தப்பட்டு, மக்கள் கருத்து வெளியிடுவதற்கு 21 நாட்கள் வழங்கப் படும். மின்சார வாகனங்கள் உட்படப் பயணிகள் வாகனங்களும் பாரஊர்தி களும், உருக்கு மற்றும் அலுமினம் பொருட்கள், குறிப்பட்ட பழங்களும் மரக்கறிகளும், மாட்டிறைச்சி, பன்றி யிறைச்சி, பாற்பொருட்கள், பார ஊர்தி கள்,பேருந்துகள், பொழுதுபோக்கு வாகனங்கள், பொழுதுபோக்குப் படகு கள் போன்றனவும் இந்தப் பட்டியலில் அடங்கியிருக்கும்.


நியாயப்படுத்த முடியாத வரிகளைக் கனடா மீது ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்து நடைமுறைப்படுத்தினால், முதல் கட்டப் பதில் நடவடிக்கைக்கு மேலதிகமான நடவடிக்கைகளை ஆராயும்போது வரி அல்லாத நடவடி க்கைகள் உட்பட அனைத்துத் தெரிவு களையும் அரசு கருத்திற் கொள்ளு மென அமைச்சர்கள் லெப்ளாங்கும் ஜொலியும் வலியுறுத்தினார்கள்.

ஐக்கிய அமெரிக்காவிற்குள் கொண்டு செல்லப்படும் ஃபென்ரனிலிலும், சட்ட விரோதமாக எல்லை கடந்து ஐக்கிய அமெரிக்காவுக்குள் செல்வோரிலும் ஒரு சதவீதத்திலும் குறைவான அளவு க்கே கனடா காரணமாகவிருக்கிறது.

தேவையற்றும், நியாயமின்றியும் எமது தேசம் இலக்கு வைக்கப்படும் போது நாம் எதுவும் செய்யாது பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. கனே டிய நலன்களையும், வேலைவாய்ப்பு களையும் அரசு பாதுகாக்கும். பாதிக் கப்படும் பணியாளர்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் உதவியளிக்க நாம் தயாராகவிருக்கிறோம்.

வரிகளை விதிக்கும் ஐக்கிய அமெ ரிக்க அரசின் முடிவு, அமெரிக்க பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் பேரழிவான விளைவுகளை ஏற்படுத் தும். வரிகள் ஐக்கிய அமெரிக்க மோட்டார்க் கார்த் தொழிற்சாலை களிலும், எண்ணை சுத்திகரிப்பு நிலை யங்களிலும் உற்பத்தியைச் சீர் குலைத்து, எரிபொருள் நிரப்பு நிலை யங்களிலும், குறொசரி விற்பனை நிலையங்களிலும் அமெரிக்க நுகர் வோரின் செலவினத்தை அதிகரித்து, அமெரிக்க செல்வச்செழிப்பை ஆபத்து க்குள்ளாக்கும்.

உடனடிப் பதில் நடவடிக்கையாகக் கனடா விதித்த வரிகளாலும் எதிர் காலத்தில் விதிக்கக் கூடிய வரிகளாலும் கனேடிய தொழிலாளர்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைப்பதற்கு விதிவிலக் கான நிவாரணத்தை வழங்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு வரி நிவாரணப் பொறிமுறை ஒன்றை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கிறது. இந்தக் கட்டமைப்பு மற்றும் நடை முறை குறித்த விபரங்கள் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும்.




கனடாவின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும் பலப்படுத்தவும், ரீம் கனடாவாக (Team Canada) உறுதி யான பதில் நடவடிக்கையை முன்னெ டுப்பதற்கும், ஐக்கிய அமெரிக்காவில் முடிவெடுப்போரிடம் அனைத்துக் கனேடியர்களின் சார்பாகவும் வாதிட வும், மாகாண, பிராந்திய அரசுகளு டனும், வணிகத்துறை மற்றும் தொழிலாளர் தலைவர்களுடனும் அரசு தொடர்ந்தும் நெருக்கமாக இணை ந்து செயலாற்றி வருகிறது.

# அர்ச்சுனா அரசின் இரகசிய முகவராம்! சட்டத்தரணி சுகாஸ் கண்டு பிடிப்பு!

யாழில் இடம் பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான முரணான நிறைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் கடுமையாக சாடியுள்ளார்.

யாழ் மாவட்ட மக்களின் வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவான சில உறுப்பினர்கள், தமிழ் மக்களுக்கு எதிராக மிகவும் மோசமான செயலை முன்னெடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் மற்றும் தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்கு பதிலாக மக்களுக்கு மாற்று காணிகளை வழங்க வேண்டும் எனவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.





இந்த நிலையில் இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் அத்தோடு, இவர்கள் அரசின் இரகசிய முகவர்களாக செயற்பட்டு எஞ்சியுள்ள தமிழ் தேசியத்தையும், தமிழனத்தின் நலன்களையும் அழிக்க முற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் வரலாறு தெரியவில்லை என்றால் அமைதியாக இருங்கள், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமே தவிர்த்து நட்ட ஈடு அல்ல என்பதை நாங்கள் தெரிவித்து கொள்ள விரும்புகின்றோம் எனவும் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

சுயேட்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவே நட்டஈடு பற்றி பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பின் நிதியுதவி முடக்க அறிவிப்பால் இலங்கையில் 1000க்கணக்கானோர் பாதிப்பு!




USAID (சர்வதேச வளர்ச்சிக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி) நிதியுதவியை முடக்குவதற்கான அமெரிக்க அரசாங்கத்தின் முடிவு, இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனத் துறையை நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது.

மேலும், இது ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களின் தொழிலை பாதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் நிர்வாகத்தில் கவனம் செலுத்தும் பல நிறுவனங்கள் நிதியுதவி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தங்கள் திட்டங்களைத் தக்க வைக்க போராடுகின்றன.

மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் பெண்கள் மற்றும் LGBTQ உரிமைகள் ஆகியவற்றில் பணி புரியும் கணிசமான எண்ணிக்கையிலான இலங்கை அரச சார்பற்ற நிறுவனங்கள் USAID ஆதரவுடன் இயங்குகின்றன.

இந்த நடவடிக்கை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது அமெரிக்கா முதல் கொள்கையின் கீழ் வெளிநாட்டு உதவியை குறைக்கும் உந்துதலுடன் ஒத்துப்போகிறது.

இது குறித்து பாதிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவன அதிகாரி ஒருவர், இந்த முடிவு எங்களை கடுமையாக பாதிப்படையச் செய்துள்ளது, இதனால் நாங்கள் ஊழியர்களை விடுவித்தோம், முடக்கம் தொடர்ந்தால், பல திட்டங்கள் சரிந்து விடும் என்று கூறினார். அரசாங்கத் திறன் துறைக்கு (DOGE) தலைமை தாங்க ட்ரம்ப்பால் நியமிக்கப்பட்ட பில்லியனர் எலோன் மஸ்க் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்கு மத்தியில் நிதியுதவி நிறுத்தப்பட்டது.

2023இல் அமெரிக்கா கிட்டத்தட்ட 180 நாடுகளுக்கு விநியோகித்த 72 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவியில் பாதிக்கு மேல் USAID நிர்வகிக்கிறது.

ட்ரம்ப் நிர்வாகம் அமெரிக்க வெளிநாட்டு உதவியை மொத்தமாக முடக்கிய ஒரு வாரத்திற்குப் பின்னர், சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க முகவர் நிலையத்தின் எதிர்காலம் வெளிநாடுகளில் அமெரிக்காவின் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளின் மையத்தில் உள்ள நிறுவனம் நிச்சயமற்றதாகவே உள்ளது.

ட்ரம்ப் நிர்வாக அதிகாரிகள் USAID ஐ வெளியுறவுத் துறையின் அதிகாரத்தின் கீழ் வைப்பது குறித்து தீவிரமாக விவாதித்து வருகின்றனர்.

கடந்த வாரத்தில், நூற்றுக்கணக்கான USAID ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர், முகவர் நிலையத்தில் பணிபுரியும் 60 மூத்த தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டனர் மற்றும் அமெரிக்க வெளிநாட்டுப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ஆயிரக்கணக்கான தொடர்புடைய வேலைகள் வரவிருக்கும் நாட்களில் பணியிடை நீக்கம் அல்லது பணி நீக்கம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.**

**இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார்.**

**கலைமாமணி டாக்டர் நித்தியஹ்ரீ மகாதேவன் அவர் களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள் ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600**

## தமிழர் அரசியலிலும் ஒரு முறைமை மாற்றம் தேவை

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரப்போவதாகக் கூறும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனை மூன்று வருடங்களின் பின்னரே செய்யப் போவதாக அறிவித்திருந்தது. அதாவது அரசாங்கம் அதில் அவசரம் காட்டவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளோ தமிழ் மக்களிடம் காட்டுவதற்கு தமது தட்டில் ஒன்றுமே இல்லையென்பதால் புதிய அரசியலமைப்புப் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளன. இது உண்மையிலேயே தமிழ் மக்களின் காதில் தமிழ்த் தேசியக் கட்சிகளே பூச்சுற்றுகிற விளையாட்டு.

முன்பு தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த முன்மொழிவுகளின் அடிப்படையில் யோசனைகளை முன்வைக்கப் போவதாக முந்திரிக்கொட்டை அறிவிப்பைச் செய்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது பற்றி தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (ரெலோ) பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனையும் தனித்தனியே சந்தித்துப் பேசிச் 'சோக்' காட்டினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியோ புதிய அரசியலமைப்புக்கான தமிழ் மக்களின் யோசனைகள் குறித்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கும் பின்னர் அரசாங்கத்திடம் முன்மொழிவுகளை முன் வைப்பதற்குமென ஏழு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

இப்போது என்னவென்றால் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் அவர்களோ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது கட்சிக்கு முறையாக அழைப்பு விடுத்தால் அதுபற்றி கட்சி பரிசீலிக்கும் என விடுத்துள்ள அறிவிப்பு வேறு. இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது இவர்களெல்லாம் எந்த உலகத்தில் இருந்துகொண்டு இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்று புரியவில்லை.

சரி பிழைகளுக்கு அப்பால் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் இராணுவ அழுத்தத்தின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தபோதும் இத்தலைவர்கள் எனப்படுவோர் எதனைச் சாதித்தார்கள்? ஒன்றுமேயில்லை.

குறைந்தபட்சம் போரின் இறுதி கட்டத்திலாவது அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கேனும் போர் நிறுத்தத்தையாவது இவர்களால் ஏற்படுத்த முடிந்ததா? இல்லை.

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கொணர்ந்த அரசியல் தீர்வுப் பொதி ஒஸ்லோ உடன்படிக்கை என வந்த அருமையான சந்தர்ப்பங்களையெல்லாம் தூக்கி எறிந்த தமிழர்களுடைய அரசியல் தரப்பு இப்போது உத்தேச புதிய அரசியல் அமைப்பின் ஊடாக ஒற்றை ஆட்சியை நீக்கி 'சமஷ்டி'யைக் கொணரப் போவதாகப் படம் காட்டுவதை என்னவென்று அழைப்பது?

எத்தனை காலம்தான் தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றுவார்களோ தெரியாது. இலங்கைத் தமிழ் மக்களின் நேச சக்தியாக விளங்கக்கூடிய ஒரே அயல் நாடான இந்தியாவோ அல்லது உலக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்காவோ அல்லது ஐ.நா. அமைப்போ இதுவரை எந்தக் கட்டத்திலுமே இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் விளைவான 13 ஆவது திருத்தத்தைத் தவிர வேறு எந்த வகையான தீர்வைப் பற்றியும் பிரஸ்தாபித்தது கிடையாது. இந்த யதார்த்தத்தைக் கடந்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் தரப்பானது பதிமூன்றாவது திருத்தத்திற்கு மேலதிகமாக எதனையும் கோருவது, நியாயமானதாக இருந்தாலும் கூட அது நடைமுறைச் சாத்தியமாகாது. அவ்வாறான கோரிக்கைகள் எப்போதும் 'ஏட்டுச் சுரக்காய்' யாகவே இருக்கும்.

எனவே இலங்கைத் தமிழர்கள் இன்றைய தென்னிலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியப் பூகோள அரசியல் களநிலையில் ஏட்டுச் சுரக்காய் அரசியலைக் கைவிட்டு நடைமுறைச் சாத்தியமான அதிகாரப் பகிர்வு பொறிமுறையான 13ஆவது திருத்தத்தின் ஊடான மாகாண சபை முறைமையினை வலுப்படுத்துவதற்கான அரசியல் செயல்பாடுகளைப் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே முடுக்கி விடுவதற்கான முன்னெடுப்புகளில் விரைந்து ஈடுபட வேண்டும்.

ஏனெனில், தற்போது பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களோ (22ம் பக்கம் பார்க்க)

# தையிட்டி திஸ்ஸ விகாரை காணி உரிமையாளர்கள் என்னிடம் மாற்றுக் காணி கேட்டார்கள் - வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு!



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்க வேண்டும் என தன்னிடம் கோரியிருந்தனர் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தையிட்டியில் தற்போது திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது விகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர்.

திஸ்ஸவிகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்கவேண்டும் எனக் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும் நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்தி வருகின்றார்.

அத்துடன் இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி நடைபெற்ற யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் திஸ்ஸ விகாரையை அகற்றிஅந்த காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்த போது ஆளுநர் குறித்த காணி உரிமையாளர்கள் மாற்று காணியை கேட்டுள்ளதாக குறிப்பிட்டார். குறித்த விடயம் சமூக வலைத் தளங்களில் விமர்சனத்திற்கு உள்ளான நிலையில் , அதனை தெளிவு படுத்தும் முகமாக ஆளுநர் குறித்த செய்தி குறிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடா - மெக்சிக்கோ - சீனா நாடுகளுக்கு எதிரான புதிய வரிகளை உத்தியோகபூர்வமாக அறிவித்தார் ட்ரம்ப்



அமெரிக்காவின் மூன்று மிகப்பெரிய வர்த்தகபங்காளி நாடுகளான சீனா கனடா மெக்சிக்கோ ஆகியவற்றிற்கு எதிராக புதிய வரிகளை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

சீனா மெக்சிக்கோ கனடா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அனைத்திற்கும் புதிய வரிகளை டிரம்ப் அறிவித்துள்ளார்.

04 பெப் 2025 செவ்வாய்க்கிழமை முதல் கனடாவிலிருந்தும் மெக்சிக்கோவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களிற்கும் எதிராக 25 வீத வரியை விதிக்கப் போவதாக அறிவித்துள்ள டொனால்ட் டிரம்ப் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களிற்கு எதிராக 10 வீத வரியை விதிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லேவிட் வரிவிதிப்பு காலக்கெடுவில் எந்த மாற்றமும் இல்லை. டொனால்ட் ட்ரம்ப் பல வாரங்களுக்கு முன்பு அறிவித்த வரிவிதிப்பு பிப்ரவரி 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று நான் உறுதிப்படுத்த முடியும். வரி விதிப்புகள் எவ்வாறு அமல்படுத்தப்படும் என்ற விவரங்கள் அடுத்த 24 மணி நேரத்தில் மக்களின் பார்வைக்கு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

பிப்ரவரி 1-ம் தேதி முதல் வரிவிதிப்பு அமல்படுத்தப்படும் என்ற காலக்கெடுவுக்கு இன்னும் சில மணி நேரங்களே இருக்கும் நிலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்மொழியப்பட்ட வரி விதிப்பை அமெரிக்கா முன்னெடுக்குமானால் வலுவாகவும் உடனடியாகவும் பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் பக்கத்தில் அவர் எல்லையின் இருபுறமும் உள்ள மக்களும் கனடா பொருள்களுக்கு அமெரிக்கா வரி விதிப்பதை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

கனடா அமெரிக்கா இடையேயான உறவுகள் குறித்த ஆலோசனை கூட்டத்துக்கு பின்பு பேசிய ட்ரூடோ 'இந்த வரி விதிப்புகளைத் தடுக்க நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம். ஆனால் அமெரிக்கா தனது முடிவினை முன்னெடுக்குமானால் நாங்கள் வலுவான உடனடியான பதிலடி கொடுக்க தயாராக உள்ளோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோரை மீண்டும் பூமிக்கு அழைத்து வரும் பணியில் ஸ்பேஸ் எக்ஸ் இறங்கியுள்ளது.

அமெரிக்க அதிபராக பதவியேற்ற டிரம்ப், உலகின் பணக்காரரான எலன் மஸ்க் உடன் நல் உறவை பேணி வருகிறார். அதன்படி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் மூலம் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோரை பூமிக்கு திரும்பி அழைத்து வர எலன் மஸ்கிடம் டிரம்ப் கேட்டுக் கொண்டார்.

# கண்டித் தமிழ் மன்னன் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கன் வழித்தோன்றல்களினால் கண்டியில் விசேட நிகழ்வு

கண்டி இராச்சியத்தின் இறுதி அரசனான ஸ்ரீவிக்ரம இராஜசிங்கனின் 193 ஆவது நினைவு தினம் அவரது வழித் தோன்றல்களினால் 02 பெப் 2025 ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நினைவு கூறப்பட்டது.

இந்த நிகழ்வு கண்டியிலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்ரீநாத தேவாலய வளாகத்தில் சமய நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்வைபவத்தில் அரசனின் மனைவியான தங்கம்மா அரசியின் நெருங்கிய உறவினர்கள் கலந்து கொண்டதுடன் பல்வேறு பூஜைகளையும் மேற்கொண்டனர்.

அதனை அடுத்து ஸ்ரீதலதா மாளிகையை அடுத்துள்ள இராஜமாளிகைக்கும் சென்று ஸ்ரீவிக்கரம இராஜசிங்கனின் உருவச்சிலை மற்றும் புகைப்படங்களையும் பார்வையிட்டனர்.



இராஜசிங்க மன்னனின் உறவினர்களின் ஒருவர் எனக் கூறப்படும் கண்டியைச் சேர்ந்த அருள் செல்வராஜ் இது பற்றித் தெரிவிக்கையில்,

வருடா வருடம் தமது உறவினர்கள் மேற்படி நினைவேந்தல் மற்றும் சமய நிகழ்வுகளை மேற்கொள்வதாகக் கூறினார்.

மேற்படி ஸ்ரீவிக்ரம இராஜசிங்கனது அரச மாளிகையை புனரமைத்துத் தந்த அமெரிக்க அரசிற்கும் அதன் தூதுவர் ஜீலி சங்கிற்கும் நன்றி தெரிவித்தார்.

# புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது! கௌரவிப்பு விழாவில் நீதிபதி இளஞ்செழியன் ஆதங்கம்!

புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது என வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப்பெரிய குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் கடந்த 01 பெப்ரவரி 2025 சனிக்கிழமை ஒய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் நீதவானாக 9 ஆண்டுகள், வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 3 ஆண்டுகள் கடமை புரிந்துள்ளேன். திருகோணமலையில் 2008– 2010 இல் மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், மீண்டும் 2012 – 2014இல் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், 2018–2022 மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் 8 ஆண்டுகள் திருகோணமலையில் கடமை புரிந்துள்ளேன். கல்முனையில் ஒன்றரை ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாகவும், ஒன்றரை ஆண்டுகள் மேல் நீதமன்ற நீதிபதியாகவும் என 3 ஆண்டுகள் கல்முனையில் கடமையாற்றியுள்ளேன்.

நான் பிறந்த மண் யாழ்ப்பாணத்தில் 2015–2018 வரை மூன்றரை ஆண்டுகள் மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றியுள்ளேன். மட்டக்களப்பில் சிவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஒராண்டு கடமை புரிந்துள்ளேன்.

எனது முதல் நியமனம் வவுனியா நீதவான் நீதிமன்றம். வவுனியாவில் மேல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட நீதிச்சேவை ஆணைக்குழுவால் 40 நாட்கள் நியமிக்கபட்டு, அதன் பின் மன்னார் மாவட்ட நிரந்த நீதவானாக சென்று 1997–2000 ஆண்டு வரை 3 ஆண்டுகள் கடமையாற்றி மீண்டும் வவுனியாவிற்கு நீதவானாக வந்தேன்.

தீர்ப்புக்கள் பற்றி நான் பேச விரும்பவில்லை. அது என்னுடைய கடமை. இருப்பினும் வருகின்ற 05.02.2025 இல் எனது 28 ஆண்டுகள் நீதிச்சேவை சேவைகள் முடிவுறுத்தப்படவுள்ளது. முதல் நிலை நீதிமன்ற நீதிபதியாக எனது நீதிச் சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் மேல நீதிமன்ற நீதிபதிகள் 90 பேர் இருக்கிறார்கள். அதில் முதலாவது இலக்கத்தில் நான் இருக்கின்றேன். 12.12.2024 இல் உயர் நீதிமன்ற தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அனைத்து தடைகளும்விலக்கப்பட்டன. 12.01.2025 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து 4 நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திற்காக பதிவி உயர்தப்பட்டார்கள். மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்கள் உள்ளன.

12.01.2025இல் இருந்து அதற்கு தகமையானவன் நான். நான் தகமையாலும், இலக்கம் 1 றில் இருப்பதாலும் நான் தகுதியானவன். எனது பிறந்த தினம் 20.01 ஆகும். மேல் நீதிமன்றம் 61 வயதை அடையும் போது முதல் நிலை நீதின்றம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

காலத்தின் சோதனை, முடிவு இறுதிப்படுத்தப்படவில்லை எனவும் கூறுகிறார்கள். இறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறுகிறார்கள். 28 ஆண்டுகள் கடமை புரிந்தேன். புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுகிறது.

வேதனையா, சோதனையா, சாதனையா எதுவும் புரியவில்லை. அனைத்தும் நல்லதிற்கே என மனதை திருப்திப்படுத்தக் கூட முடியவில்லை. ஆனால் இன்று பெருவிழாவை வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் ஒழுங்கமைத்து வடக்கு – கிழக்கு நீதிபதிகள், சட்டத்தரணிகள் இங்கு வருகை தந்ததையிட்டு உங்கள் நன்றி உணர்வை மதிக்கிறேன். நீங்கள் அருகில் நிற்கும் போது எனக்கு புத்துணர்வு வருகிறது. இன்னும் சாதிக்க வேண்டும். சாதனைகள் புரிய வேண்டு என்ற உணர்வு உள்ளுணர்வாக கிளம்புகின்றது.



இருப்பினும், சந்தோசமாக போவதற்கு நான் தயார். ஆனால் 2024 மே மாதம் 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிபதியாக நான் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்குகள், தடையுத்தரவுகள் காரணமாக பின்னுக்கு சென்று வீடு செல்வதற்கு 8 நாட்கள் இருக்கின்ற நிலையில், நமது தலைவர் சீனா புறப்பட்டார். ஞாயிறுக்கிழமை உயர் நீதிமன்ற சத்திய பிரமாணம் இடம் பெறுகிறது.

12.01.2025 ஞாயிற்றுக்கிழமை. 13 ஆம் திகதி திங்கள் போயா. 14 ஆம் திகதி செவ்வாய் பொங்கல். திங்கள் இரவு ஜனாதிபதி சீனா பயணம். வெள்ளிக்கிழமை இரவு சீனாவில் இருந்து திரும்பி வந்தார். 18,19 விடுமுறை நாள். 19.01.2025 அன்று எனது இறுதி நாள். காலதாமதத்திற்கு நான் காரணமல்ல. காலதாமதம் என்னை ஒய்வு எடுக்க அனுப்பியது. காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி என்று நான பல இடங்களில் பேசினேன். அந்த நீதி என் மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. எதையும் ஏற்றும் கொள்ளும் மன பாவம் வர வேண்டும்.

எனக்கு என்னை பற்றி பெரிதாக கவலையில்லை. எனது இரு குழந்தைகள், குடும்பத்தினர், உறவினர்கள், அவர்கள் வேதனைப்படுவது தான் கவலை. வீடு வேதனைப்படுகிறது. கண்முன்னே அனைத்தும் நடைபெறுவதை அனைவரும் பார்க்கிறார்கள். நீதி கேட்டு எங்கும் செல்ல முடியாத நிலைமை.

நீதிவான், மாவட்ட நீதிபதி, மேல் நீதிமன்ற நீதிபதி தலைவணங்காத ஒரு தொழில். அதற்கு மேல் செல்ல வேண்டுமானால் தலைகளும் ஒரு கணம் வணங்கும். அவைகளால் தான் இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. இதுவரை என்னுடன் ஒரு பாராளுன்ற உறுர்பினர்களோ, அமைச்சரோ கதைத்ததில்லை. இப்பொழுதும் அனைவரும் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கிறார்கள் இது தான் நிலமை. எனவே, இந்த நிகழ்வுக்கு வருகை தந்த நீதிபதிகள், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்ட அனைத்து சட்டத்தரணிகளும் எனது நன்றிகனை தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# நாட்டில் இருக்கும் ஜனாதிபதி மாளிகைகளை கமலஹாசனின் தசாவதாரப் படத்துக்கு ஒப்பிட்ட அநுர!



நடிகர் கமலஹாசனின் தசாவதாரம் படத்தில் போன்று எமது நாட்டு ஜனாதிபதிகள் ஒவ்வொரு உருவத்தில் இருப்பதற்கு தேவையான முறையில் ஜனாதிபதி மாளிகைகள் இருக்கின்றன. அதனை நாங்கள் மாற்றியமைப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்.வல்வெட்டித்துறையில் கடந்த 31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

நடிகர் கமலஹாசனின் தசாவதாரம் படத்தில் போன்று எமது நாட்டு ஜனாதிபதிகள் ஒவ்வொரு உருவத்தில் இருப்பதற்கு தேவையான முறையில் ஜனாதிபதி மாளிகைகள் இருக்கின்றன. அதனை நாங்கள் மாற்றியமைப்போம்.

அதனால் காங்கேசன்துறையின் மயிலிட்டி துறையில் இருக்கும் ஜனாதிபதி மாளிகை எனக்கு தேவையில்லை. அதனை பயன்படுத்த பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை தெரிவிக்குமறு ஆளுநர் மற்றும் மாவட்ட செயலாளருக்கு தெரிவித்திருக்கிறேன்.

அந்த ஜனாதிபதி மாளிகையை பல்கவைக்கழகம், கலாசார நிலையம் அமைப்பதற்கு பொருத்தம் என்றால் அதற்கு அதனை பயன்படுத்த வழங்குவதற்கு நான் தயார்.

அதேபோன்று நுவரெலியா, அனுராதபுரம், கதிர்காமம் மஹியங்கனை ஆகிய இடங்களில் இருக்கும் ஜனாதிபதி மாளிகைகளையும் வழங்க தயாராக இருக்கிறேன். ஏனெனில் நாங்கள் வறுமையான நாட்டில் இருக்கிறோம். மக்களும் வறுமையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கையில் நாட்டின் தலைவர் தசாவதாரமாக செயற்படுகிறார். அவ்வாறு இருக்க முடியாது. அந்த அரசியல் மாறவேண்டும். அந்த அரசியலை நாங்கள் மாற்றி இருக்கின்றோம்.

இவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தண்டனைக் கிடைக்கும். பிரிந்திருந்த திருடர்கள் அனைவரும் நேற்று ஒரு கூட்டத்தை நடத்தி, ஒன்றிணைவது தொடர்பாக ஆராய்ந்துள்ளார்கள்

இந்தக் கூட்டத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் தெரியுமா? ஒருவர் மத்திய வங்கியை கொள்ளையடித்தவர். இன்னொருவர் அவுஸ்ரேலியாவில் வெள்ளையர் ஒருவரை ஏமாற்றியவர். இன்னொருவர் எரிபொருளில் ஊழல் செய்தவர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தப்பித்துக் கொள்ள முற்படுகிறார்கள்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 பெப்ரவரி 2025 - 07 பெப்ரவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா கணேசமூர்த்தி

நாவலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்தி க்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செங்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். **“நல்லதை நினை நடப்பது நடக்கும்”**

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது மூன்றாவது ஆண்டுத் திதி நினைவு நாள் 10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.. செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 பெப்ரவரி 2025 சனிக்கிழமை கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி பரமலிங்கம் பராசக்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி பரமலிங்கம் பராசக்தி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை நவாலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை யாழ்.இணுவிலைச் சேர்ந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



05 பெப்ரவரி 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அகத்தியன் தனது பெற்றோர், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தபேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை அனலைதீவு – கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி டனிதா விக்கினேஸ்வரபாலன் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை அனலைதீவு – கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி டனிதா விக்கினேஸ்வரபாலன் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 பெப்ரவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வர்ஷிகா சோமாஸ்கந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



07 பெப் 2025 வெள்ளிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சுப்பிரமணியம் சரோஜினி இணையர்களது 56வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



# கனடா - சீனா நாடுகளுக்கு எதிரான டிரம்பின் முடிவால் அமெரிக்காவுக்கு என்ன இழப்பு? நிபுணர்கள் கருத்து என்ன?



கனடா மெக்ஸிகோ சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்ததையடுத்து வர்த்தகப் போர் தொடங்கியுள்ளது.

கனடா மற்றும் மெக்ஸிகோ மீது 25 சதவீத வரியும், சீனா மீது 10 சதவீத வரியும் விதிக்கப்படும் என்ற அறிவிப்பில், கடந்த சனிக்கிழமையன்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார். இந்த வரிக் கட்டுப்பாடுகள் முதல் அமலுக்கு வந்துள்ளது.

இதற்கு பதிலடியாக கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் அமெரிக்க பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பதாக அறிவித்துள்ள நிலையில் மெக்ஸிகோ மற்றும் சீனாவும் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளன.

வட அமெரிக்க நாடுகளாகிய கனடா மற்றும் மெக்ஸிகோ அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளன. கனடாவும் மெக்ஸிகோவும் அமெரிக்காவுடன் நீண்ட எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரு நாடுகளும் (கனடா மற்றும் மெக்ஸிகோ) தங்கள் எல்லைகளை வலுப்படுத்தவில்லை என்றும், சட்ட விரோதமாக குடியேறிகளை அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதிக்கின்றன என்றும் டிரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார். அது மட்டுமன்றி, ஃபென்டனில் போதை மருந்து, கனடா மற்றும் மெக்ஸிகோ எல்லையில் இருந்து அமெரிக்காவிற்கு வருவதாகவும் டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார்.

அதனையடுத்து, அமெரிக்க மக்களின் பாதுகாப்பிற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, ட்ரூத் சோசியலில் கடந்த சனிக்கிழமையன்று டிரம்ப் பதிவிட்டுள்ளார்.

### என்ன வகையான அச்சுறுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது?

அமெரிக்காவின் இந்த வரி அறிவிப்புக்குப் பிறகு, சாமானிய அமெரிக்க மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பணவீக்கத்தை அதிகரிக்க வழிவகுக்கும் என்றும் நம்பப்படுகிறது.

மறுபுறம், அத்தியாவசிய பொருட்கள், எரிவாயு, பெட்ரோல், வீடுகள், கார்கள் மற்றும் பிற பொருட்களின் விலைகளை குறைக்கும் வாக்குறுதியுடன் டிரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளார். இந்த வட அமெரிக்க நாடுகளுக்கிடையிலான வரிப் போர் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதில் அமெரிக்கா மிகவும் பாதிக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

யேல் பல்கலைக்கழகத்தின் பட்ஜெட் ஆய்வகத்தின் புதிய பகுப்பாய்வின் படி, வரிகளால் அமெரிக்க பொருளாதாரத்திற்கு தீங்கு ஏற்படலாம். இந்த வரிகள், சராசரி அமெரிக்க குடும்பத்திற்கு ஆண்டுக்கு 1,170 டாலர் கூடுதல் செலவை ஏற்படுத்தும் என்று இந்த பகுப்பாய்வு மதிப்பிடுகிறது.

அதே போல், மற்ற நாடுகள் பதிலடி கொடுக்கத் தொடங்கினால், பொருளாதார வளர்ச்சி குறையும் என்றும், பணவீக்கம் மோசமாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறம், ஜஸ்டின் ட்ரூடோ ஏற்கனவே 25 சதவீத வரியை அறிவித்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை இரவு நாட்டு மக்களிடம் உரையாற்றிய அவர், கனடா நாட்டு மக்களை உள்ளூர் தயாரிப்புகளை வாங்குமாறு வலியுறுத்தினார்.

கனடாவில் தயாரிக்கப்படும் பொருட்களைத் தேர்வு செய்வதற்கான நேரம் இது. எனவே பொருட்களை வாங்கும் போது, அது எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது என்பதை சரி பார்க்க வேண்டும். நமது பங்கை நாம் செய்ய வேண்டும். அதனால் முடிந்தவரை கனடாவைத் தேர்ந்தெடுப்போம்' என்று தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டார்.

ஐந்து முதல் ஆறு மாதங்களில் இந்த வரி நீக்கப்படா விட்டால், கனடாவின் பொருளாதாரம் மந்தநிலைக்குச் செல்லக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர். ஏனெனில் கனடாவின் ஏற்றுமதியில் 75 சதவீதம் நேரடியாக அமெரிக்காவிற்கு செல்கிறது.

மறுபுறம், டிரம்பின் அரசியல் எதிரியான ஜனநாயகக் கட்சியும் டிரம்பின் முடிவுக்கு எதிராக தீவிரமாக உள்ளது. மளிகைப் பொருட்களின் விலைகளைப் பற்றி நீங்கள் கவலைப் படுகிறீர்கள். டிரம்ப் தனது வரிகளால் விலைகளை உயர்த்துகிறார்' என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சக் மர், தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், `தக்காளி விலையைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? மெக்ஸிகோ மீது டிரம்ப் விதிக்கப்போகும் வரிகளுக்காகக் காத்திருங்கள் இது உங்கள் தக்காளி விலையையும் உயர்த்தும். கார் விலைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? கனடா மீது டிரம்ப் விதிக்கப் போகும் வரிகளுக்காகக் காத்திருங்கள். அது உங்களின் கார் விலையையும் உயர்த்தும்' என தனது மற்ற பதிவு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார் சக் ஷுமர்.

### நிராகரித்த டிரம்ப்

வரிகளை அதிகரிப்பதற்கான ஆவணங்களில் அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்ட பிறகு, வரிகள் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்ற கருத்தைச் சுற்றி எழுந்துள்ள கவலைகள் குறித்து, அவரிடம் கேட்கப்பட்டது.

ஆனால் டிரம்ப் அவற்றை நிராகரித்தார். வரிகளை அதிகரிப்பதற்கான ஆவணங்களில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கையெழுத்திட்ட பிறகு, வரிகள் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்ற கவலைகள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. ஆனால் டிரம்ப் அவற்றை நிராகரித்தார்.

நீங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைகளைக் குறைப்பதாக உறுதியளித்தீர்கள். ஆனால் வரிகள் விலைகளை அதிகரிக்கும். இப்போது விலைகளைக் குறைக்க உங்கள் திட்டம் என்ன? என ஒரு பத்திரிகையாளர் டிரம்பிடம் கேட்டார்.

இதற்கு பதிலளித்த டிரம்ப், `எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் பணவீக்கம் இல்லாததால், இந்த முறை நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பல நாடுகளில் நூற்றுக்கணக்கான பில்லியன் டாலர் வரி விதித்தேன். அதனால் மற்ற நாடுகளில் இருந்து 600 பில்லியன் டாலர்கள் சம்பாதித்தோம் என்றார்.


தொடர்ந்து பேசிய டிரம்ப், `பணவீக்கத்திற்கு வரி காரணம் அல்ல. மாறாக வரியே வெற்றிக்கு காரணம். சிறிது காலத்திற்கு தற்காலிக இடையூறுகள் ஏற்படலாம். அதனை மக்கள் புரிந்துகொள்வார்கள்' என்றார்.

எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆபத்தானது என்று கூறுகிறார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் அவர் ஒரு நீண்ட பதிவை எழுதியுள்ளார். இந்த வரிகளால் முதலில் ஆட்டோமொபைல், எரிவாயு பெட்ரோல் மற்றும் சாமானிய மக்கள் பயன்படுத்தும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயரும் என்று கூறியுள்ளார்.

மேலும் `நுகர்வோர் மற்றும் நிறுவனங்களுக்கு இந்த வரிகளின் தாக்கம் செல்லும் போது அவர்கள் தங்கள் போட்டியாளர்களின் விலைக்கு ஏற்றவாறு தங்களுடைய பொருட்களின் விலையை அதிகரிப்பார்கள். இது அமெரிக்க நிறுவனங்களுக்கு இடையேயான போட்டியைக் குறைத்து, அமெரிக்காவில் வேலைவாய்ப்புகள் உருவாவதற்கு எதிராக அமையும்' என்று விளக்கினார்.

`கூட்டாளிகள் பதிலடி கொடுக்கும் போது, அவர்கள் தகுந்த முன்னேற்பாடோடு பதிலளிப்பார்கள், அது நமது பொருளாதாரச் சிக்கல்களை அதிகரிக்கும் என்றும் அவர் பகிர்ந்துள்ளார். மேலும், `புதிய நிர்வாகத்தின் தொடக்க கால வெளியுறவுக் கொள்கை நெருங்கிய கூட்டாளிகளை தண்டிப்பதும், எதிரிகளுக்கு வெகுமதி அளிப்பதுமாக உள்ளது. ஆனால் ராஜ்ஜீய உத்தியென்பது, கூட்டாளிகளை ஒன்றிணைத்து எதிரிகளை பிளவுபடுத்துவதாகும். நாம் ஏன் இதற்கு நேர்மாறாக செயல்படுகிறோம்?' என்று லாரன்ஸ் சம்மர்ஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.




ஆனால், செனட் சபை உறுப்பினரும் மூத்த அரசியல்வாதியுமான பெர்னி சாண்டர்ஸ், டிரம்பின் முடிவு தீங்கானது என்று கூறியுள்ளார். அவர் தனது எக்ஸ் பக்கத்தில், `கனடா மற்றும் மெக்ஸிகோ மீது 25 சதவீத வரி விதிக்கும் டிரம்பின் ஒருதலைப் பட்சமான முடிவு சட்டவிரோதமானது மற்றும் நிச்சயமாக தீங்கு விளைவிக்கும். இதனால் ஒரு சராசரி அமெரிக்க குடும்பத்தின் ஆண்டு செலவுகள் 1,200 டாலர் வரை அதிகரிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஆய்வாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

சார்லஸ் எலியட் பல்கலைக்கழக பேராசிரியரும் பொருளாதார ஆய்வாளருமான லாரன்ஸ் சம்மர்ஸ், கனடா மற்றும் மெக்சிகோவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆபத்தானது என்றும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் நம்புகிறார்.

சார்லஸ் எலியட் பல்கலைக்கழக பேராசிரியரும் பொருளாதார ஆய்வாளருமான லாரன்ஸ் சம்மர்ஸ், கனடா மற்றும் மெக்ஸிகோவுக்கு

இந்த நடவடிக்கை அமெரிக்க வணிக சமூகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க சோதனை. இது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வர்த்தக உத்தி அல்ல என்பதை அவர்கள் அறிவார்கள். வணிகத் தலைவர்கள் அதனைக் கூறுவதற்கு தைரியம் பெறுவார்கள் என நம்புகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மறுபுறம், சர்வதேச அவசர கால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (IEEPA) கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக சபையின் சர்வதேச தலைவரான ஜான் மர்பி, இந்த முடிவு அமெரிக்க குடும்பங்களுக்கு விலையை அதிகரிக்கும் என்று கூறினார்.

எங்களது எல்லைப் பிரச்னைகள் மற்றும் ஃபென்டனில் போன்ற முக்கிய பிரச்னைகளுக்கு அதிபர் தீர்வு காண்பது சரியானது தான், ஆனால் இந்தப் பிரச்னைகளுக்கு வரிகள் தீர்வாகாது' எனத் தெரிவித்துள்ளார்.

வரிகள், பொருட்களின் விலையை அதிகரித்து, அமெரிக்க குடும்பங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் விநியோகச் சங்கிலியை சீர்குலைக்கும். (14ம் பக்கம் பார்க்க)

CANADA HINDU MAAMANTRAM
கனடா இந்து மாமன்றம்

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. **ஏப்பிரல் 27, 2025ல்** நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ........................................

குடும்பப் பெயர்: ........................................

பிரிவு: ........................................

பிறந்த திகதி: ........................................

தொலைபேசி எண், email: ........................................

........................................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# கனடா - சீனா நாடுகளுக்கு எதிரான டிரம்பின் முடிவால் அமெரிக்காவுக்கு என்ன இழப்பு? நிபுணர்கள் கருத்து என்ன?


(12ம் பக்கத் தொடர்ச்சி) இந்த நடவடிக்கையினால் நாட்டிற்கும் வணிகத்திற்கும் ஏற்படும் பாதிப்புகளை, எங்கள் வர்த்தக சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து நாங்கள் விவாதிப்போம். இதனால் அமெரிக்க மக்களுக்கு ஏற்படும் பொருளாதாரச் சேதத்தை சமாளிக்க அடுத்தகட்ட நடவடிக்கை களை எடுக்க முடியும். ' என்று ஜான் மர்பி குறிப்பிட்டுள்ளார்.

### டிரம்பின் உத்தி

டிரம்பின் இந்த முடிவால் அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்ந்து வருவதாக ஆய்வாளர்கள் கூறி வரும் நிலையில், டிரம்ப் வரிகளிலும் சில குளறுபடிகளைச் செய்துள்ளார்.

கனடாவுக்கு 25 சதவீத வரி விதித்தாலும், கனடாவில் இருந்து வரும் எண்ணெய், இயற்கை எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றுக்கு 10 சதவீத வரி விதித்துள்ளனர். இந்த முடிவு குறித்தும், பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவது குறித்தும் டிரம்ப் பரிசீலித்து வருவதாக நம்பப்படுகிறது.

டிரம்ப், எரிசக்தி மீது 10 சதவீத வரி விதிப்பதன் மூலம், எரிவாயு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைவாக வைத்திருக்க விரும்புவதாகக் காட்டுகிறது. இதனால் சிக்கல்கள் குறையும். மறுபுறம், கனடாவில் இருந்து 800 டாலருக்கும் குறைவான மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, சுங்க வரி விதித்துள்ளார் டிரம்ப். ஆனால், இதற்கு முன்பு, அதே மதிப்புடைய பொருட்கள் சுங்க வரியின்றி அமெரிக்காவிற்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



டிரம்ப் விதித்துள்ள வரிகள் கனடா மீது சுமத்தப்படவில்லை, ஆனால் கனடாவில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் அமெரிக்க நுகர்வோர் மற்றும் வணிக நிறுவனங்கள் தான் அந்த வரிகளைச் செலுத்துவார்கள் என்று கனடாவின் பீபில்ஸ் பொலிடிகல் பவர் கட்சியின் தலைவரான மாக்ஸிம் பெர்னியர் பதிவிட்டுள்ளார்.

மேலும், 'அமெரிக்க மக்கள் எங்கள் தயாரிப்புகளை வாங்க வேண்டும் அல்லது வர்த்தகத்தைக் கை விட வேண்டும். ஏனெனில் அவர்கள் தான் முதலில் பாதிக்கப்படுவார்கள். ஒப்பந்தங்கள் மற்றும் விற்பனையில் ஏற்படும் பாதிப்பைக் கண்டு, கனடா நாட்டு ஏற்றுமதியாளர்களும் இதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அதனால் அவர்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டியிருக்கும். அதனைத் தொடர்ந்து, அதிக ஊழியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டியிருக்கும், அல்லது தங்களின் சந்தைப் பங்கைத் தக்க வைக்க அவற்றின் விலைகளை குறைக்க வேண்டும்' என்று விவரித்துள்ளார். பெர்னியர் தனது நீண்ட பதிவில், வர்த்தகப் போரை மோசமானது என்றும், அந்தப் போரில் கனடாவில் அமெரிக்காவை வெல்ல முடியாது என்றும் கூறியுள்ளார்.

மேலும், டிரம்புடன் மோதுவதற்குப் பதிலாக தனது பொருளாதாரத்தை வலுப்படுத்துமாறும் கனடாவை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

### சீனாவுக்கு என்ன வகையான இழப்பு ஏற்படும்?

வல்லரசு நாடான அமெரிக்கா தற்போது சீனாவிடம் இருந்து வலுவான சவாலை எதிர்கொண்டு வருகின்றது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது. இதற்குப் பதிலளித்துள்ள சீனாவின் வர்த்தக அமைச்சகம், அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று கூறியுள்ளது.

அதில், அமெரிக்காவின் 'தவறான நடவடிக்கைக்கு' எதிராக உலக வர்த்தக அமைப்பில் வழக்குத் தொடரப் போவதாகவும், 'தனது உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்க' பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் சீனா கூறியுள்ளது. அதன் தொடர்ச்சியாக, டொனால்ட் டிரம்பின் வரி விதிக்கும் நடவடிக்கைகளை, 'ஒரு கொடுமைப்படுத்தும் உத்தி' என்று லாரன்ஸ் சம்மர்ஸ் கூறியுள்ளார்.

கொடுமைப்படுத்துவதும் அச்சுறுத்துவதும் ஆடு களத்திலோ அல்லது சர்வதேச அரங்கிலோ வெற்றிக்கு வழிவகுக்காது. ஜின்பிங்கிற்கு எதிரானது என்று நினைத்து எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையானது, உண்மையில் அவருக்கு பரிசாகக் கிடைத்துள்ள உத்தியாகும்' என்று அவர் அதில் பகிர்ந்துள்ளார்.

பண வீக்கம், எண்ணெய், உணவு மற்றும் கார்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும். பின்னர் அதனால் அமெ ரிக்காவின் மத்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்களை உயர்த்தும்' என விவரித்துள்ளார் லாரன்ஸ் சம்மர்ஸ்.

நன்றி:- பிபிசி






# சேனாதி:-மார்டின் றோட்டுக்கும் நீதிமன்றத்துக்கும் இடையே தத்தளிக்கும் ஆவி?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



1965க்குப் பின்னரான காலகட்டம் என்பது இலங்கை முழுவதிலும் தீவிரமான அரசியல் நிலைப்பாடுகள் கருக்கொண்ட ஒரு கால கட்டம் ஆகும். சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்திற்கான கருக்கள் உற்பத்தியாகிய ஒரு கால கட்டம். இக்கால கட்டத்தில் அரசியலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் மாவை. இப்போதுள்ள தமிழரசு கட்சித் தலைவர்களில் நீண்ட காலம் சிறையிருந்தவர் மாவை தான்.

இப்படிப் பார்த்தால் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான மிதவாத அரசியல் ஆயுதப் போராட்ட காலகட்ட மிதவாத அரசியல், ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியல் ஆகிய மூன்று காலகட்டங்களின் ஊடாகவும் வந்தவர் மாவை.

அதனால் தான் ஆயுதப் போராளிகள் மத்தியில் அவருக்கு நண்பர்கள் இருந்தார்கள். தமிழ் மிதவாத தலைமைகளுக்கும் ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்த கால கட்டங்களிலும் மாவை ஆயுதப் போராட்டத்தால் அதிகம் அச்சுறுத்தப்படவில்லை. அதற்கு அவருடைய குண இயல்பே காரணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சியை கூட்டமைப்புக்குள் கொண்டு வர உழைத்தவர்களில் மாவை முக்கியமானவர். நோர்வேயின் அனுசரணையோடான சமாதான முயற்சிகள் நடந்த காலகட்டத்தில், வன்னியிலிருந்த கருநிலை அரசு, ஒப்பீட்டளவில் நம்பிக்கைக்கின்ற தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவராக மாவை காணப்பட்டார்.

உயரமானவர் பெருந்தேகி பொறுமைசாலி யாராலும் எளிதாக அணுகப்படக் கூடியவர்யாரையும் பகைக்க விரும்பாதவர். எல்லாவற்றையும் எல்லாரையும் சமாளித்துக் கொண்டு போகக்கூடியவர். அதுதான் - சமாளிப்பு - அவருடைய பலம். அதுதான் அவருடைய பலவீனமும்.

2009க்குப் பின்னரான தமிழ் அரசியல் என்பது ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான ஒரு மிதவாத அரசியல். அது ஆயுதப் போராட்டத்தில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய நிலைமைகளைக் கையாள்வதற்கான ஒரு புதிய பண்புருமாற்றத்தைக் (transformation) கோரி நின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது அவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட பண்புரு மாற்றத்தைப் பிரதிபலிப்பாகவும் இருந்தது. ஆனால் 2009 இற்குப் பின்னரான பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமை தாங்க சம்பந்தரால் முடியவில்லை. சேனாதி



யாலும் முடியவில்லை. சேனாதி அப்படித்தான் சம்பந்தர் அவரை அழைப்பார்.

ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளி விட்டது என்று சம்பந்தர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் பயத்தை, சந்தேகங்களை நீக்குவதன் மூலம்தான் ஒரு புதிய யாப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்றும் அவர் நம்பினார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர் கட்சிக்குள் புதியவர்களைக் கொண்டு வந்தார். தன்னுடைய வழிக்குக் குறுக்கே நின்றவர்களை அகற்றினார். அல்லது அவர்கள் அகன்று போகத் தேவையான நிலைமைகளை ஏற்படுத்தினார்.



ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியலைக் குறித்து சரியாகவோ அல்லது பிழையாகவோ சம்பந்தரிடம் ஒரு தீர்மானம் இருந்தது. சம்பந்தர் இழுத்த இழுப்புக்கெல்லாம் சேனாதி விட்டுக் கொடுத்தார். அதனால் சம்பந்தரின் தவறுகளுக்கு அவரும் பங்காளியானார்.

சம்பந்தர் கூட்டமைப்பின் தலைவராக தோல்வி அடைந்த பொழுது சேனாதி தமிழரசு கட்சியின் தலைவராக தோல்வியடைந்தார். சம்பந்தரிடம் நல்லதோ கெட்டதோ தலைமைத்துவ பண்பு இருந்தது. ஆனால் மாவை சேனாதி ராஜாவிடம் அது இருக்கவில்லை. சமாளிப்பதால் அவர் பெரும்பாலானவர்களுக்கு விருப்பமானவராக இருந்தார். ஆனால் கட்சியைக் கட்டிக் காக்க முடியவில்லை.

இறுதி நாட்களில் நினைவு தடுமாறிய பொழுதுகளில் அவர் தன்னுடைய மகனுக்கு கூறிய வசனங்களில் ஒன்று வழக்குக்குப் போக வேண்டும். ஃபைல்களை எடுத்து வை என்பது தான். ஒரு மூத்த மிதவாதி அவருடைய மரணத் தறுவாயில் நீதிமன்றம், வழக்கு என்று தத்தளிக்கும் மனதோடு உலகை விட்டுப் போயிருக்கிறார். மார்ட்டின் றோட்டுக்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் அவருடைய ஆவி தத்தளிக்குமா? இரண்டு அணிகளாகப் பிளவடைந்த ஒரு கட்சியை அவர் விட்டுப் போயிருக்கிறார். இப்பொழுது கூட்டமைப்பும் இல்லை தமிழரசுக் கட்சியும் ஒரு கட்டுக்கோப்பான நம்பிக்கையூட்டும் அமைப்பாக இல்லை.

கட்சியின் தலைவராக மாவை தன்னுடைய தலைமைத்துவத்தை நிரூபித்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

இன்னொரு விதமாகச் சொன்னால் அவரால் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவரிடம் ஆயுதப் போராட்டம் ஒன்றுக்குப் பின்னரான மிதவாத அரசியலை வழிநடத்தத் தேவையான தரிசனங்களும் இருக்கவில்லை கொள்ளவும் இருக்கவில்லை. சம்பந்தரிடமும் இருக்கவில்லை. இப்போது உள்ள பெரும்பாலான தலைவர்களிடமும் அது இல்லை.

மாவையின் தோல்வி என்பது தமிழ் மிதவாத அரசியலின் தோல்வியும் தான். ஏனென்றால், ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமை தாங்கத் தேவையான மிதவாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் போதிய அளவுக்கு எழுச்சி பெறவில்லை. ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான மிதவாத அரசியல் எனப்படுவது ஆயுதப் போராட்டத்திற்கு தலைகீழாக எழுச்சி பெற்றிருக்கிறது. ஆயுதப் போராட்டத்தில் அர்ப்பணிப்பும் தியாகமும்தான் அடிப்படைத் தகுதிகளாக இருந்தன. ஆனால் 2009க்குப் பின்னரான மிதவாத அரசியலானது பெருமளவுக்குப் பிழைப்பாக மாறி விட்டது. இந்தச் சீரழிவுக்கு மாவையும் பொறுப்பு.

கட்சிக்குள் துணிச்சலான முடிவுகளை அவர் எடுத்திருந்தால் தமிழரசுக் கட்சி இப்படி ஒரு சீரழிவுக்கு வந்திருக்காது. அவருடைய சமாளிக்கும் பண்பு கட்சியைச் சிதைத்தது மட்டுமல்ல, கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் அவரைத் தோற்கடித்து விட்டது. சில ஆண்டுகளுக்கு முன் கடைசியாக அவர் எனது வீட்டுக்கு வந்த போது அவரிடம் சொன்னேன் அண்ண ஒரு சன்நியாசி மாதிரி முடிவெடுங்கோ. இனி நாடாளுமன்றத்துக்கோ அல்லது மாகாண சபைக்கோ போறதில்ல என்று முடிவெடுங்கோ. அப்படிப்பட்ட ஆசைகள் இல்லையென்றால் நீங்கள் யாருக்கும் பணியவோ அல்லது யாரோடும் சுதாகரிக்கவோ வேண்டியிராது. ஆசைகளில்லாமல் ஒரு சந்நியாசி போல தமிழரசுக் கட்சியை கட்டியெழுப்புவது தான் ஒரே பணி என்று உழையுங்கோ. அப்படி உழைத்தால் கட்சியும் உருப்படும் உங்களுடைய பெயர் ஏன்றென்றும் மதிக்கப்படும் என்று.

பதில் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.அதற்குப்பின் அவர் என்னிடம் வருவதில்லை.


பொது வேட்பாளருக்காக 2019 ஆம் ஆண்டு அவரை நல்லூர் சின்மயா மிஷினில் சந்தித்த பொழுது அவர் பொது வேட்பாளரை ஆதரிக்கத் தயங்கினார். அவரோடு வந்த சிவிகே சிவஞானம் தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தார். ஆனால் கடந்த நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆண்டு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்குமாறு மாவையைக் கேட்டபோது அவர் சொன்னார். பொது வேட்பாளர் ஏன் தேவை என்பதற்கு நீங்கள் கூறக்கூடிய காரணங்களை விட 10 மேலதிக காரணங்களை நான் கூறுவேன்'' என்று. தேர்தல் பிரச்சாரத்தின் கடைசிக் கட்டத்தில் அவர் பொது வேட்பாளருக்கு ஆதரவாக, வெளிப்படையாகக் காணப்பட்டார். அது கடைசி நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு எனினும் சுமந்திரன் அணியை எதிர்த்து அவர் துணிச்சலாக வெளிப்படையாக எடுத்த முடிவு அது.

அவருக்கு நெருக்கமாக இருந்தவரும் பின்னர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவருமாகிய மன்னாரைச் சேர்ந்த சிவகரன் கூறுவது போல வழிப்போக்கர்கள் கட்சிக்குள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு விட்டார்களா? ஆனால் உண்மையான பொருளில் அவர்கள் வழிப்போக்கர்கள் அல்ல. அவர்களைச் சம்பந்தரே தனது வழியைப் பலப்படுத்துவதற்காகக் கட்சிக்குள் கொண்டு வந்தார்.

அவர்கள் மிக நீண்ட மிதவாதப் பாரம்பரியத்தைக் கொண்ட மாவையை அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே தோற்கடித்து விட்டார்கள். அவருடைய வயதில் அரை மடங்கு வயதை கொண்ட கட்சி உறுப்பினர்கள் அவரை அவமதித்தார்கள். ஆனால் அவருடைய உடலுக்கு பெரும்பாலும் எல்லாக் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் மதிப்பளித்தார்கள். சம்பந்தரைப் போலவே மாவையும் ஒரு தோல்வியுற்ற தலைவராகவே இறந்தார். ஆனால் சம்பந்தர் அளவுக்கு அவர் தமிழ்த் தேசிய ஆன்மாவுக்குத் தூரமானவர் அல்ல.

# கத்தி மேல் நடக்கும் பயணம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களை இலங்கை துறைமுகங்களுக்கு அனுமதிப்பது தொடர்பான நெறிமுறைகளை வகுப்பதற்கான செயல்முறை இன்னமும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது, வெளிநாட்டு ஆய்வு கப்பல்கள் இலங்கையின் பொருளாதார கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்த தடை கடந்த டிசம்பர் மாத இறுதியுடன் நீங்கியிருக்கின்ற சூழலில், என்.பி.பி. அரசாங்கம் வெளிநாட்டு ஆய்வு கப்பல்களை அனுமதிப்பது தொடர்பான ஒரு நிலையான நெறிமுறையை அறிவிக்கப் போவதாக கூறியிருந்தது. இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் அது அறிவிக்கப்படும் என்றும் அரசாங்கம் கூறி ஒரு மாதத்திற்கும் மேல் ஆகிவிட்டது.

இந்த தடை நீக்கப்பட்டு ஒரு மாதம் ஆகிவிட்ட நிலையிலும், ஆய்வுக் கப்பல்கள் தொடர்பான எந்த ஒரு நிலைப்பாடும் அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்படவில்லை. இப்போதைய சூழலில் வெளிநாட்டு ஆய்வு கப்பல் ஒன்று இலங்கை துறைமுகத்துக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரினால் அரசாங்கம் என்ன செய்யும் என்ற கேள்வி எழுகிறது.

முன்னர் இருந்த தடையை காரணம் காட்டி அனுமதி மறுக்கவும் முடியாது. அதேவேளை, இப்போது தடை இல்லை, புதிய நெறிமுறைகளை அறிவிக்க உள்ளதால் கப்பலை அனுமதித்தோம் என்று காரணம் கூறவும் முடியாது. இத்தகைய ஒரு சிக்கல் என்.பி.பி. அரசாங்கத்திற்கு வராத வரையே அதற்கு நல்ல காலம்.

ஆனால் ஏதாவது ஒரு நாட்டின் ஆய்வு கப்பல் இலங்கை துறைமுகத்தை அணுகுவதற்கு அனுமதி கோரினால் அது சிக்கலை ஏற்படுத்தும். வெளிநாட்டு ஆய்வு கப்பல்கள் தடை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த நாடுகள் இந்தியாவும் சீனாவும் தான் என்பதில் சந்தேகம் இல்லை. சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கை துறைமுகத்துக்கு வந்து செல்வதை, இலங்கையின் கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற்கொள்வதை இந்தியா விரும்பவில்லை.

அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் இந்தியாவின் கேந்திர நிலைகளையும், பாதுகாப்பு நலன்களையும் உளவு பார்க்கும் நோக்கிலேயே சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதாகவும் இந்தியா பலமுறை குற்றம் சாட்டியிருந்தது.

இந்தியாவின் இந்த குற்றச்சாட்டை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டு, இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகித்தது.

அதன் அடிப்படையில் தான், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், சீன ஆய்வு கப்பல்களுக்கு தனியாக தடை விதிக்க முடியாத நிலையில் எல்லா ஆய்வுக் கப்பல்களையும் தடை செய்வது என்ற தீர்மானத்திற்கு வந்தது. இதன் மூலமாக சீனாவை கோபப்படுத்தாமல், இந்தியாவை அமைதிப்படுத்தலாம் என ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கருதி இருந்தாலும், சீனா இந்த விடயத்தில் கடுமையான சீற்றம் அடைந்தது என்பது உண்மை.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள சில ஊடகவியலாளர்களை சந்தித்த சீன தூதுவர் கீ சென் ஹொங், சீன ஆய்வு கப்பல்களை இலங்கை துறைமுகத்துக்கு அனுமதிக்காமல் தடுத்த அரசாங்கத்தின் கொள்கை, தொடர்பாக கடுமையாக விமர்சித்திருந்தார்.

அருகில் உள்ள மாலைதீவு அரசாங்கம் சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கிய நிலையில், இலங்கை அரசாங்கம் அதற்கு தடை விதித்தமை குறித்து அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஆதிக்க போட்டியின் வெளிப்பாடாகவே அந்த தடை அமைந்திருந்தது என்பது வெளிப்படை. அதனை சீன தூதுவர் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்தியாவின் பெயரை குறிப்பிடாமல் அவர், மற்றொரு நாட்டின் அழுத்தங்கள் தலையீட்டினால் தான் இந்த தடை விதிக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார். சீன கப்பல்களின் பயணம் இந்தியாவுக்கு சினமூட்டுகிறது என தெரிந்திருந்தும் கூட, இலங்கையை நோக்கி தனது கப்பல்களை சீனா அனுப்பியதற்கும் உள்நோக்கம் இருந்தது.

இந்தியாவை கோபப்படுத்துவதும் இலங்கையை மையப்படுத்தி அதனுடன் போட்டியை ஏற்படுத்துவதும் சீனாவினால் கையாளப்படும் ஒரு மூலோபாயமாக மாறி இருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் இலங்கையில் ஆட்சிக்கு வந்துள்ள என்.பி.பி. அரசாங்கத்துடன், சீனா மிக நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், இந்தியாவுடனான தனது பூகோள அரசியல் போட்டியை முன்னிறுத்தியே அது தீர்மானங்களை எடுக்கக்கூடும்.

அப்படி ஒரு முடிவை எடுத்தால், அதன் பாதிப்பு சீனாவுக்கோ இந்தியாவுக்கோ அல்ல, அது முழுமையாக இலங்கைக்கே சிக்கலை ஏற்படுத்தும் என்.பி.பி. அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கம் சீனாவுக்கு இருந்தால், தற்போதைய சூழலில் கொழும்பை நோக்கி தனது ஆய்வுக் கப்பல்களை அனுப்பி வைக்க முயற்சிக்காது. ஏனென்றால் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் தொடர்பான ஒரு நிலையான நடைமுறையை வகுக்கும் செயல்முறையை இலங்கை அரசாங்கம் இன்னமும் பூர்த்தி செய்யவில்லை. இவ்வாறான சூழலில், இலங்கை அரசாஙகத்தை சிக்கலுக்குள் தள்ளும் வகையில் செயல்படுவதற்கு சீனா முயன்றால், அது வீண் குழப்பங்களை ஏற்படுத்தும் .அவ்வாறான குழப்பம் ஒன்றுக்கு சீனா வழி வகுக்காது என முற்றுமுழுதாக நம்ப முடியாது. அப்படி ஒரு சூழலை சீனா உருவாக்கினால், அதன் பாதிப்பு என்.பி.பி. அரசாங்கத்திற்கே அதிகமானதாக இருக்கும். அது சீன ஆய்வு கப்பல்கள் தொடர்பான விடயத்தில் என்.பி.பி. அரசாங்கம் தமது தற்போதைய நிலைப்பாட்டில் இருந்து மாற வேண்டிய சூழலை கூட ஏற்படுத்தலாம். என்.பி.பி, அரசாங்கம் ஒரே நேரத்தில் இரண்டு தோணிகளிலும் கால் வைக்க நினைக்கிறது. இந்தியாவுடன் அது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றை செய்து கொள்வதற்கு இணங்கி இருக்கிறது.

அந்த உடன்பாட்டை விரைவில் செய்து கொள்வதற்கு இந்திய பிரதமருடன் இணைந்து, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வெளியிட்ட கூட்டறிக்கையில் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல அவர் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், சீனாவுடன் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான திட்டம் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு தரப்புகளுடன் பாதுகாப்பு ரீதியாக ஒத்துழைப்பையும் உடன்பாட்டையும் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதி அளித்துள்ள சூழலில், எந்த ஒரு தரப்புக்கும் இடையூறையோ அச்சத்தையோ குழப்பத்தையோ ஏற்படுத்தாத வகையில், செயல்முறையை கொண்டு செல்ல வேண்டும் .

இது கத்தியின் மீது நடக்கின்ற பயணம். எந்த ஒரு தரப்பை சார்ந்து நின்றாலும் அது இலங் கையின் மீதே பாதிப்பை ஏற்படுத்தும். என்.பி.பி. அரசாங்கத்தை பொறுத்தவரையில், இந்த விவகாரத்தை சுமூகமாக அணுகுவதற்கான வழியை தேடுவது மிகமிக கடினம். ஏனென்றால், இரண்டு நாடுகளும் கொழும்பை நோக்கி செயல்படுவது என்பது கொழும்பின் நலனுக்காக அல்ல.

தங்களின் பாதுகாப்புக்காகவும் தங்களின் பிராந்திய ஆதிக்க நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவுமே கொழும்பை நோக்கி செயல்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில், கொழும்பின் மீது அழுத்தங்களை செலுத்துவதை தவிர்ப்பதற்கு, இந்த நாடுகள் முனையும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

அதேவேளை, வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களின் தொடர்பான, செயல்முறையை வகுப்பதற்கான காலத்தை இழுத்தடிப்பது கூட, என். பி.பி. அரசாங்கத்திற்கு பாதுகாப்பானது தான். சீனா தனது ஆய்வுக் கப்பல் ஒன்றை கொழும்புக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்காத வரையில் தான் அது பாதுகாப்பானதாக இருக்கும்.

வருகை ஒருவேளை, சீனா என். ஆய்வுக்கப்பலை அனுப்பும். தீர்மானத்தை எடுக்குமேயானால் அது பிராந்திய அதிகாரப் போட்டியை மேலும் கூர்மைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் அதிகம் இந்த சிக்கலான சூ ழலில் இருந்து பி.பி. அரசாங்கம் எதிர்பார்க்கின்ற ஒரு தீர்வை, இந்தியாவையும் சீனாவையும் பகைத்துக் கொள்ளாத வகையில், அவற்றுடன் முரண்படாத வகையில், நடைமுறைப்படுத்துவது இலகுவானதாக இருக்கப் போவதில்லை.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா “சங்கீத சங்கமம் 2025” 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் “வேர்களைத் தேடுங்கள்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார்.

கலைமாமணி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.

தொடர்புகளுக்கு 416 841 9600

# வேலையற்ற பட்டதாரிகளும் தமிழ்ச்சமூகமும்

வேலை தேடும் பட்டதாரிகள் ஜனாதிபதியின் வருகையையொட்டி, யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகே ஓர் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். போலீசார் அவர்களை கச்சேரியை நோக்கி வர விடவில்லை. அவர்களை கண்டி வீதியில் கச்சேரிக்கு அருகே அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய சூழலில் வைத்து மறித்து விட்டார்கள். அதே சமயம் ஜனாதிபதி அவர்களுடைய கண்ணில் படாமல் பழைய பூங்கா வீதி வழியாக வெளியேறிச் சென்று விட்டார். பட்டதாரிகள் தங்களுடைய முறைப்பாட்டை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் மட்டும் 3000த்துக்கும் குறையாத பட்டதாரிகள் நிரந்தர வேலையின்றி இருக்கிறார்கள். நாடு முழுவதும் சுமார் 30,000 பட்டதாரிகள் அவ்வாறு உண்டு என்று ஒரு பட்டதாரி சொன்னார். இவர்களில் 80 வீதத்திற்கும் குறையாதவர்கள் எங்கேயோ ஒரு தனியார் துறையில் ஏதோ ஒரு வேலையைச் செய்கிறார்கள். சிலர் நல்ல சம்பளத்துக்கும் வேலை செய்கிறார்கள். வேலை தேடும் பட்டதாரிகளின் ஒன்றுகூடல்களில் ஒரு விடயத்தைக் கவனிக்கலாம். அங்கே முப்பது வயதைக் கடந்தவர்களும் உண்டு. அதாவது பல ஆண்டுகளாக அவர்கள் போராடி வருகிறார்கள் என்று பொருள். அவர்களுக்கும் வயது ஏறிக் கொண்டு போகிறது. வேலை தேடித் தேடி வயதுகள் வீணாகி விட்டன.

ஆனால் அவர்கள் எந்த வேலையைத் தேடுகிறார்கள்? அரச உயர் அதிகாரியான எனது நண்பர் ஒருவர் சொல்வார், அவர்களை வேலையற்ற பட்டதாரிகள் என்று அழைக்கக் கூடாது. அரச வேலையற்ற பட்டதார்கள் என்றுதான் அழைக்க வேண்டும் என்று. ஏனென்றால் அவர்கள் அரச வேலைக்காகத்தான் போராடுகிறார்கள். தனியார் துறையில் வேலை செய்வதற்கோ அல்லது தாமாக ஒரு தொழில் துறையை தொடங்குவதற்கோ தயாரில்லை என்றும் அவர் கூறுவார்.

அவர்கள் ஏன் அரச வேலையை நாடுகிறார்கள் என்று கேட்டால் அதற்கும் அவர் பதில் சொல்வார். ஏனென்றால் அது சுகமானது. கஷ்டப்படத் தேவையில்லை. தடைதாண்டல் பரீட்சைகளின் மூலம் பதவி உயர்வுகளைப் பெறலாம். கஷ்டப்பட்டு வேலை செய்து பதவி உயர்வுகளைப் பெற வேண்டிய தேவை இல்லை. பணி நேரத்தில் ஓய்வாக இருக்கலாம். ஓய்வு ஊதியம் கிடைக்கும். அரசு ஊழியர் என்ற சலுகைகள் கிடைக்கும். எனவே ஒப்பீட்டளவில் ரிஸ்க் இல்லாத, கஷ்டப்படுத்த தேவையில்லாத, பாதுகாப்பான பிற்காலத்தைக் கொண்ட ஒரு தொழில், என்பதனால் பெரும்பாலானவர்கள் அரச ஊழியத்தை நாடுகிறார்கள் என்று எனது நண்பர் சொல்வார்.

ஆனால் அரசு ஊழியத்தின் தொடக்க காலம் அப்படியொன்றும் செழிப்பானதோ மகிழ்வானதோ அல்ல. யாழ்ப்பாணத்தில் ஓர் அரசு ஊழியருக்கு முதலில் கிடைக்கும் நியமனம் பெரும்பாலும் தூரப் பிரதேசங்களுக்கே கிடைக்கும். தூர மாவட்டங்களுக்குத்தான் கிடைக்கும். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் அங்கே அவர் சேவை புரிய வேண்டும். அரசியல் செல்வாக்கு இருந்தால் தீவுப் பகுதிக்கோ அல்லது பளைப் பிரதேசத்துக்கோ நியமனத்தை எடுக்கலாம். ஆனால் அது எல்லாருக்கும் கிடைப்பதில்லை. இவ்வாறு 8 ஆண்டுகள் கட்டாயமாக கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்யவேண்டி வரும்பொழுது, அது முதல் நியமன அனுபவத்தை துன்பகரமானதாக மாற்றுவதுண்டு.




தூர மாவட்டத்தில் அங்குள்ள அரச ஊழியருக்கான விடுதியில் தங்கினால் அது வேறு விடயம். அதல்லாமல் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து வேலைக்குப் போய் மாலையில் வருவது என்று சொன்னால் அது மிகத் துன்பம்.வேலை வெறுக்கும் அளவுக்குத் துன்பம். அதிகாலையில் எழ வேண்டும். எழுந்தால் தான் அரச ஊழியர்களுக்கான பஸ்ஸைப் பிடிக்கலாம். வேலை முடிந்து வீடு திரும்பும் போது கிட்டத்தட்ட நான்கு மணிக்கு மேல் ஆகிவிடும். அது நியமனம் கிடைத்த இடத்தின் தூரத்தைப் பொறுத்த விடயம்.

இவ்வாறு நியமனம் கிடைத்த அதே காலப்பகுதியில ˙தான் பெரும்பாலும் திருமணமும் நடக்கும். திருமணம் செய்த நபரும் முதல் நியமனம் பெறும் அரசு ஊழியர் என்றால் தேனிலவுக் காலம் பயணத்திலேயே கழியும். காலையில் எழுந்து பரக்கப்பரக்க ஓட வேண்டும். காலையில் எழுவதற்காக இரவு முன்கூட்டியே நித்திரைக்குப் போக வேண்டும். புதுமணத் தம்பதிகள் உல்லாசமாகத் திரிவதற்கு கிடைக்கும் நேரம் மிகச் சில மணித்தியாலங்கள் தான். அதற்குள் பிள்ளையைப் பெற்றால் அது அடுத்த துன்பம். பிள்ளையைப் பராமரிக்க அம்மம்மா, அப்பம்மா யாராவது இல்லையென்றால், அதற்கு வேலைக்கு ஆள் தேட வேண்டும். அநேகமாக ஆட்கள் கிடையாது. வேலை நேரத்தில் பிள்ளையின் முகம் அல்லது துணையின் முகம் கண்ணுக்கு முன் வரும். அது வேலை செய்யவிடாது. இப்படித்தான் 8 ஆண்டுகளும் கழியும்.

பொதுவாக திருமணத்தை உடனடுத்து வரும் காலப் பகுதியானது வாழ்வில் மகிழ்ச்சியாக ,.·ப்ரீயாகக் கழிக்க வேண்டிய ஒரு காலம். ஆனால் முதல் நியமனம் பெறும் நகரப் பகுதி அரசு ஊழியர்களுக்கு அதுதான் துன்பகரமான, வெறுப்பான ஒரு காலமாகவும் அமைவதுண்டு. குடும்பத்தைப் பிரிந்து பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டும். எந்தக் கால கட்டத்தில் வாழ்க்கையை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டுமோ அதே காலகட்டம் பயணத்தில் கழிந்து போகும்.அந்த அரசு ஊழியர் மகிழ்ச்சியான அரசு ஊழியராகவும் இருக்கப் போவதில்லைமகிழ்ச்சியான குடும்பத் தலைவராகவோ தலைவியாகவோ இருக்கப் போவதும் இல்லை.

படிப்பு எதற்கு? பட்டம் எதற்கு? தொழில் எதற்கு? மகிழ்ச்சியாக இருப்பதற்குத்தானே? ஒரு தம்பதி மகிழ்ச்சியாக உல்லாசமாகக் கழிக்க வேண்டிய காலத்தில் பெரும் பகுதியை பயணத்தில் கழிப்பது என்பது வாழ்க்கையின் பொருளை, கல்வியின் பொருளைக் கேள்விக்கு உள்ளாக்கும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து முதல் நியமனம் பெறும் பெரும்பாலான அரசு ஊழியர்களின் வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. அந்த எட்டு ஆண்டுகளையும் பல்லைக் கடித்துக்கொண்டு கடந்து விட்டால் அதன் பின் ரிலாக்ஸாக இருக்கலாம் என்று பலரும் கருதுகிறார்கள்.

இவ்வாறாக அரச ஊழியத்துக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளின் தொகை ஆயிரக்கணக்கில் வந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆனால் யாரும் அவர்களைக் கண்டு கொள்வதில்லை. குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் புதிய நியமனங்கள் ஒத்தி வைக்கப்பட்டு கொண்டே போகின்றன.

இது ஒரு காட்சி. இதற்கு நேர் எதிரான மற்றொரு காட்சி உண்டு. 3000த்துக்கும் அதிகமான பட்டதாரிகள் வேலை கேட்டு போராடும் ஒரு நாட்டில் கூலி வேலைக்கு ஆட்கள் இல்லை.

நான் வாழும் கிராமத்தில் படித்தவர்கள், பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உண்டு. ஆனால் இங்கு கூலி வேலைக்கு ஆள் கிடையாது. முன்பு ஒரு முதியவர் இருந்தார். அவர் மன நலம் பாதிக்கப்பட்டவர். ஒரு கோவில் தாழ்வாரத்தில் உறங்குவார். அவரை வேலைக்கு பிடிப்பதே கஸ்ரம். வேலைக்கு வந்தாலும் அவருக்கு விருப்பமான நேரம் தான் வருவார். விரும்பின வேலையைத் தான் செய்வார். அதிகம் சாப்பிடமாட்டார். அவரும் ஒரு கடுமையான மழை நாளில், கோவில் தாழ்வாரத்தில் இறந்து விட்டார். இப்பொழுது வேலைக்கு ஆட்கள் இல்லை. கூலி வேலைக்கும் துப்புரவு வேலைகளுக்கும் தேங்காய் பிடுங்குவதற்கும் ஆட்கள் இல்லை.தேங்காய் பிடுங்குவதற்கு முன்பு கேட்கப்பட்ட கூலி சில தேங்காய்கள். இப்பொழுது ஒரு மரத்துக்கு 300 ரூபாய். அது பரவாயில்லை. ஏனென்றால் ஒரு பெரிய தேங்காய் 200 ரூபாய்க்கு மேல் போகிறது.

ஒருபுறம் ஆயிரக்கணக்கான பட்டப் பட்டதாரிகள் வேலை கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம், கூலி வேலைகளுக்கு, சாதாரண சிறிய வேலைகளுக்கு ஆட்கள் இல்லை. முதியவர்களைப் பராமரிக்க, இயலாதவர்களைப் பராமரிக்க, சமைக்க, வீட்டு வேலைகளைச் செய்ய, பிள்ளை பெற்ற பெண்ணைப் பராமரிக்க, ஆட்கள் இல்லை.

இதற்கு அரசாங்கம் மட்டும் பொறுப்பல்ல. தொழில் தொடர்பாக தொழில் ஸ்தலத்தில் மகிழ்ச்சியாக இருப்பது தொடர்பாக, தொழில் பாதுகாப்பு தொடர்பாக, தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் அளவுகோள்களும் நம்பிக்கைகளும் கூட இதற்குக் காரணம் தான். அவ்வாறு அரசு ஊழியத்துக்காக காத்திருக்கும் பட்டதாரிகளைத் தயார்ப் படுத்திய கல்வி முறையும் பல்கலைக்கழகங்களும் காரணம்தான்.அரச தொழில்துறைக்கு வெளியே தாமே சுயமாக தொழில் துறைகளை தொடங்கத் தேவையான தொழில் முனைவோர்களை நமது கல்விமுறை உற்பத்தி செய்ய தவறி விட்டதா?

ஒருபுறம் சாதி சார்ந்த தொழில் பிரிவுகள். இன்னொரு புறம் தொழில் முனைவோரை உருவாக்காத கல்வி.யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் மீனவ சமூகங்கள் மத்தியில் இருந்து வரும் பட்டதாரிகள் கடற்தொழிலை திரும்பிப் பார்ப்பதில்லை. அதுபோல வலிகாமத்தின் மையப் பகுதிகளில் விவசாயக் குடும்பங்களில் இருந்து வந்த பட்டதாரிகள் விவசாயத்தைத் திரும்பிப் பார்ப்பதில்லை. ஆனால் வன்னியில் பெரும்பாலான பட்டதாரிகள் விவசாயத்தை ஒரு உப தொழிலாக மேற்கொள்வார்கள்.

முதலீட்டுத் துறையைச் சேர்ந்த ஒரு விற்பனர் ஒருமுறை என்னிடம் கேட்டார், ஒரு வாகனம் திருத்துபவரின் மகன் முகாமைத்துவப் பட்டதாரியாக வந்தபின் தன்னுடைய தகப்பனின் சிறிய வாகனம் திருத்தும் கடையை பெரிய அளவில் விஸ்தரித்து முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சிப்பதில்லை. அவர் தன் தகப்பனின் தொழிலைத் திரும்பிப் பார்க்காத ஒரு நிலைமை தான் உண்டு.

ஒரு புறம் சாதி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக ஒரு புதிய தலைமுறை தமது பரம்பரை தொழிலை கை விடுகின்றது. அதில் ஒரு நியாயம் உண்டு. அதே சமயம் அந்த தொழில்களை நவீனமாக்கி எந்திரமயப்படுத்துவதன் மூலம் அவற்றின் சாதி அடையாளங்களை அகற்றலாம். ஆனால் கல்விமுறை அதற்கு வேண்டிய தொழில் தரிசனங்களைக் கொடுக்கவில்லை.

புலம் பெயர்ந்த தமிழர்கள் அனுப்பும் காசும் இந்த விடயத்தில் இளையவர்களைக் கெடுக்கிறது என்று ஒரு மதகுரு சொன்னார். ஆனால் 2009க்கு உடனடுத்த ஆண்டுகளில் அவ்வாறு உதவிய பலரும் இப்பொழுது உதவுவதில்லை. அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரின் நிதி உதவிகளை வைத்துத் தொழில் முனைவோராக மேலெழுந்த பலர் உண்டு. இங்கு பிரச்சனை என்னவென்றால், இவை எவையும் ஒரு மையத்தில் இருந்த திட்டமிடப்படாத உதிரிச் செயற்பாடுகளே. இப்பொழுது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் படித்தவர்கள், பட்டதாரிகள், நல்ல தொழில் பார்த்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். (22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08121149** (F)
28yrs, 5'4" , Single , Chithirai , 3 Sevai , Bachelors.. , Senior Finance.. , Canada

**ID08121145** (F)
33yrs, 5'6" , Divorced , , Sevai , Bachelors.. , Businesswoman , Netherlands

**ID08121131** (F)
35yrs, 5'4" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Project Coordinator , Canada

**ID08121130** (F)
33yrs, 5'7" , Single , Punarpoosam , 5 Sevai , Bachelors.. , Data , Canada

**ID08121125** (F)
26yrs, 5'3" , Single , Punarpoosam , 1 Sevai , High School , Admin Clerk.. , Canada

**ID08121122** (F)
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08120754** (F)
24yrs, 5'1" , Single , Bharani , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121119** (F)
46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai Bachelors.. , Law Clerk , Canada

**ID08121122** (F)
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08120752** (F)
38yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Senior finance.. , Sri Lanka

**ID08121116** (F)
30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India

**ID08121115** (F)
24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada

**ID08120744** (F)
39yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Own Business.. , Sri Lanka

**ID08121111** (F)
37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121110** (F)
33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada

**ID08121107** (F)
28yrs, 5'4" , Single , , Sevai , Bachelors.. , IT , Switzerland

**ID08120728** (F)
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727** (F)
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121109** (F)
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Counselor , Canada

**ID08120722** (F)
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08121106** (F)
21yrs, 5'4" , Single , Mrigasheersham , 7 Sevai , Diploma , Beautify Parlour , Sri Lanka

**ID08121100** (F)
26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka

**ID08120721** (F)
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718** (F)
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121099** (F)
21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada

**ID08120695** (F)
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08121095** (F)
30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India

**ID08121089** (F)
24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai , Masters Degree , Admin , Canada

**ID08121083** (F)
50yrs, 5'4" , Seperated , Pooram , N/A Sevai , Postgraduate.. , Sociial Worker , Canada

**ID08121072** (F)
21yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Studying , Sri Lanka



## மணமகன்

**ID08121146** (M)
41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada

**ID08121144** (M)
29yrs, 6' , Single , Poorattathi , Sevai , Ph.D , Researcher , United States

**ID08121143** (M)
27yrs, 5'6" , Single , Poosam , N/A Sevai , Masters Degree , IT Specialist , Canada

**ID08121142** (M)
32yrs, 5'4" , Single , Kettai , 3 Sevai , High School , Printers , Sri Lanka

**ID08121140** (M)
38yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Canada

**ID08121136** (M)
41yrs, 5'7" , Single , Rohini , N/A Sevai , Diploma , Accountant , Sri Lanka

**ID08121134** (M)
29yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , Bachelors.. , Marketing , Canada

**ID08121127** (M)
28yrs, 5'5" , Single , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Tims , Canada

**ID08121124** (M)
29yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Management.. , Sri Lanka

**ID08121120** (M)
32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka

**ID08121118** (M)
35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Sri Lanka

**ID08121105** (M)
34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08121104** (M)
35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada

**ID08121102** (M)
22yrs, 5'5" , Single , Aswini , Sevai , Bachelors.. , Customer Service.. , Sri Lanka

**ID08121101** (M)
36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08121098** (M)
39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High \School , Transportatio.. , Canada

**ID08120739** (M)
30yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineer , Sri Lanka

**ID08121097** (M)
33yrs, 5'6" , Single , Mrigasheersham , 6 Sevai , Bachelors.. , Technician , Canada

**ID08120737** (M)
28yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Testing , Sri Lanka

**ID08121094** (M)
27yrs, 5'7" , Single , Kettai , 11 Sevai , Ph.D , Scientist , Canada

**ID08121093** (M)
34yrs, 5'7" , Single , Moolam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada

**ID08121092** (M)
31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08120734** (M)
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120733** (M)
27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08121090** (M)
39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Ware house.. , Canada

**ID08120730** (M)
29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka

**ID08121088** (M)
35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka

**ID08121086** (M)
28yrs, 5'7" , Single , Uthirattathi , 2 Sevai , High School , Chef , Canada

**ID08120716** (M)
18yrs, 4' , Divorced Not Specified , N/A Sevai , None , Hrhsehsh , Canada

**ID08121077** (M)
32yrs, 5'9" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Business Owner , Canada

# அதிகாரிகளும் தமிழ் தலைவர்களும் மடங்கினர்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தென்னிலங்கை அரசியற் களத்தைக் கலக்கும் NPPயும் அநுர குமார திசநாயக்கவும் வடக்கில் தமிழ்த்தரப்பையும் தடுமாற வைக்கும் உபாயத்தில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது.

பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் பெற்ற வெற்றி NPPக்கும் அநுர குமாரவுக்கும் வடக்கில் தமக்கான அரசியல் அடித்தளத்தைப் பலப்படுத்துவதற்கான ஊக்கத்தை அளித்துள்ளது. இதற்கான தந்திரோபாய நடவடிக்கையில் அநுர ஈடுபடுகிறார். அதனுடைய வெளிப்பாடுகளே, அவருடைய அண்மைய யாழ்ப்பாண விஜயமாகும்.

யாழ்ப்பாண விஜயத்தில் அநுர சில வெற்றிகளை உடனடியாகவே பெற்றுள்ளார்.

1.யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் அநுரவைச் சுற்றித் திரண்ட மக்கள். இதன் மூலம் தமிழ் மக்களின் பேராதரவு தனக்கும் NPPக்கும் உண்டென்று காட்டியுள்ளார். குறிப்பாக தனக்குள்ள ஜனவசியத்தை உலகுக்கும் தமிழ்த் தரப்புகளுக்கும் தன்னுடைய கட்சிக்கும் காட்டியிருக்கிறார்.

அதிலும் தமிழ் மக்களின் பேரதரவைப் பெற்ற ஒரே சிங்களத் தலைவர் ஜனாதிபதி தானே என்பதைக் காட்டுவதற்கு அநுரவுக்கு இது வாய்த்துள்ளது. இன்னும் இதை ஆழமாகச் சொன்னால், இன்றுள்ள தமிழ்த் தலைவர்களை விடவும் அநுரவுக்கு தமிழ் மக்களிடம் பேராதரவுண்டு என்பதை நிரூபித்திருக்கிறார்.

2.வடக்கின் அபிவிருத்திக்காக அனுப்பப்படும் பணம் திருப்பி அனுப்பப்படுவது ஏன்? என்று யாழ்ப்பாணத்தில் வைத்துப் பகிரங்கமாகக் கேள்வி எழுப்பி, பலரையும் மடக்கி விட்டார் அநுர குமார. இந்தக் கேள்விக்கு உரிய பதிலைச் சொல்ல முடியாமல் அதிகாரிகள் தடுமாறினார்கள் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதிகாரிகள் மட்டுமல்ல, அங்கே பிரசன்னமாகியிருந்த தமிழ்த்தேசியவாதப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைதி காத்தனர் என்பதை நாம் கவனிக்க வேண்டும். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சிவஞானம் சிறிதரனும் இதற்குப் பதிலளிக்காமல் மௌனமாகவே இருந்துள்ளனர். ஆகவே இங்கும் அநுரவுக்கும் NPP க்கும் வெற்றி கிட்டியுள்ளது.

3.தமிழ் அரசியற் தரப்பினர் உங்களை (மக்களை) ஏமாற்றுகின்றனர். உங்களுக்குரிய தேவைகளைப் பற்றியோ, உங்களுடைய பிரச்சினைகளைப் பற்றியோ இவர்கள் சரியாக சீரியஸாகச் சிந்திப்பதேயில்லை. சும்மா படங் காட்டுவதற்காக வாயடிப்பது தான் இவர்களுடைய வேலை. இல்லையென்றால், அரசாங்கம் ஒதுக்கும் நிதியைக் கூட ஒழுங்காகச் செலவழிக்க முடியாமலிருப்பதைப் பற்றி இவர்கள் அக்கறையில்லாமல் இருந்திருப்பார்களா? பாருங்கள், அதைக் கூட அங்கிருந்து (தெற்கிலேயிருந்து) நாம் வந்து தான் பேச வேண்டியுள்ளது. இந்தளவுக்குத் தான் உங்களுடைய தலைவர்களாக இருந்தவர்களும் இருக்க நினைப்போரும் உள்ளனர் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் அநுர.

அதாவது, தெற்கிலே பொறுப்பில்லாமல் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தி, மக்கள் ஒதுக்கித் தள்ளுவதற்குப் பயன்படுத்திய உத்தியை, இங்கும் தமிழ் அரசியல்வாதிகளை ஒதுக்குவதற்குப் பயன்படுத்துகிறார். இதிலும் அநுரவுக்கு முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது.

4.யாழ்ப்பாணத்தில் அநுரவுக்குக் கிடைத்த வரவேற்பு எதிர்காலத்தில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் ஒரு தூண்டுதலாக அமையும். இதையும் விடத் தாம் இன்னும்



பெரிய வரவேற்பைக் கொடுக்க வேண்டும் என்று மக்களைச் சிந்திக்கத் தூண்டும். அதுதான் நடக்கவும் போகிறது. அப்படியே, கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையிலும் அது வளர்ச்சியடையும். அங்கே (திருகோணமலை, அம்பாறையில்) சிங்கள மக்களும் வாழ்வதால், இது இன்னும் உச்சமடையும்.

இதனால், அரசியற் தீர்வைப் பற்றிய உரையாடல்களில் தேசிய மக்கள் சக்தியின் பக்கமே மக்கள் நிற்பதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் தமிழரின் அரசியலிலும் NPP யின் அரசியலிலும் முக்கியமானவை. ஏனென்றால், அடுத்து வரவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலிலும் மாகாணசபைகளுக்கான தேர்தல்களிலும் NPP வடக்குக் கிழக்கில் செல்வாக்கைப் பெறுவதற்கான சாத்தியங்களை இது உண்டாக்குகிறது. அதேவேளை தமிழ்த் தேசியத் தரப்புகளுக்கு ஆணி அடிக்கும் காரியமாகவும் இது அமையக் கூடும்.

முக்கியமாக வடக்கிற்கு அனுப்பப்படும் நிதியைப் பயன்படுத்தாமல் ஏன் திருப்பி அனுப்புகிறீர்கள் என்று யாழ்ப்பாணச் செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி பகிரங்கமாவே கேட்டதும் அதற்கான பதிலை அதிகாரிகளும் தமிழ் அரசியற் தரப்பினரும் சொல்ல முடியாமல் தடுமாறியதும் தன்னை, தம்மை, வலுப்படுத்திக் கொள்வதற்கான உபாயமாகும். இதை அநுர திட்டமிட்டே செய்திருக்கிறார்.

இதற்கு யாராவது மறுப்புச் சொல்லியிருந்தால் அதற்கான பதிலை அவர் நிச்சயமாக அளித்திருப்பார். அதற்கான தயாரிப்புடன் தான் தகவல் திரட்டுடன் தான் அவர் இதைச் சொன்னார். என்றபடியால் தான் சிறிதரனும் கஜேந்திரகுமாரும் வாயைத் திறக்காமல் அமைதியாக இருந்தனர். ஆகவே, பகிரங்க வெளியில் தமிழ்த்தேசியத் தரப்பைத் தோற்கடித்துத் தன்னை — NPP யை நிறுவியிருக்கிறார்.

ஜனாதிபதி இந்தச் சேதியைச் சொல்வதற்கு இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு —முன்பே, வடக்குக்கு அனுப்பப்படும் நிதி பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது என்று பல தடவை, பல தரப்பினராலும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக வடக்கு மாகாண சபையை தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஆட்சி செய்த விக்னேஸ்வரன், முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் பெருமளவு நிதி செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இப்படிக் குற்றஞ் சாட்டப்பட்ட விடயத்தைக் குறித்து இதுவரையிலும் கஜேந்திரகுமார், சிறிதரன் தரப்புகள் உள்பட எவரும் விசாரித்ததும் இல்லை. உண்மையைக் கண்டறிந்ததும் இல்லை. பதிலாக அரசாங்கம் வடக்கைப் புறக்கணிக்கிறது. பாரபட்சம் காட்டுகிறது என்றே புறணி சொல்லி, பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்தே வந்திருக்கிறார்கள்.

கடந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளிலும் உள நிலையிலும் பாரபட்சங்களும் புறக்கணிப்புகளும் இருந்தது உண்மைதான். அதேவேளை அரசாங்கத்தினால் வடக்குக்கு அனுப்பப்பட்ட



நிதி முறையாகச் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதும் உண்டு. என்பதால்தான் இதைப் பகிரங்கமாக முகத்துக்கு முன்பாக ஜனாதிபதி போட்டுடைக்க வேண்டி வந்தது.

இதற்குப் பிறகு கூட இந்த விடயத்தைக் குறித்து உண்மையைக் கண்டறிவதற்கு சிறிதரனோ, கஜேந்திரகுமாரோ அல்லது ஏனைய தமிழ்த் தரப்பினரோ முயற்சிக்கவில்லை. குறைந்த பட்சம் இது தொடர்பாக நாம் உண்மையைக் கண்டறிந்து உங்களுக்கும் (அரசாங்கத்துக்கும்) மக்களுக்கும் விளக்குவோம் என்று கூட இது வரை (இந்தக் கட்டுரையை எழுதும் வரை) இவர்களிடமிருந்து எந்தவிதமான பதில்களும் வரவில்லை.

ஆனால், வடக்கிலுள்ள அதிகாரிகளும் வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்த, செய்யும் அரசியற் தரப்பினரும் இதற்கான பதிலைச் சொல்ல வேண்டும். குறிப்பாக முன்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்களாக இருந்த விக்னேஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் என்ற சந்திரகாந்தன், சிவமோகன், கலையரசன், மாவை சேனாதிராஜா உள்ளிட்ட அனைவரும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள்.

கூடவே முன்பு அதிகாரிகளாக இருந்தோரும் முன்னர் அரசியல் அதிகாரத்திலிருந்தோரும் பதிலளிக்க வேண்டிய பொறுப்புடையோராவர்.

ஏனென்றால் போரினால் மிக மோசமான அழிவைச் சந்தித்த பிரதேசம் வடக்காகும். உள ரீதியான பாதிப்பு. உடல் ரீதியான பாதிப்பு. வளரீதியான பாதிப்பு. தொழில் ரீதியான பாதிப்பு. புவியியல் மற்றும் சூழலியல் சார்ந்த பாதிப்பு. பொருளாதார ரீதியான பாதிப்பு. பண்பாட்டு ரீதியான பாதிப்பு எனப் பல வகையான பாதிப்பைச் சந்தித்தது வடக்கு.

அவ்வாறு பல முகப் பாதிப்புகளைச் சந்தித்த பிரதேசத்தை மீள்நிலைப்படுத்துவதற்கு பல வழிகளில் பல விதமான உதவிகளும் நிவாரணங்களும் ஆதரவும் நிதியும் தேவையாக இருந்தது. அதில் ஒன்றே அரச உதவியும் நிதி ஒதுக்கீடுமாகும். அதையே முறையாகப் பயன்படுத்தவில்லை என்பதும் அந்த நிதியைத் திருப்பி அனுப்புவது என்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வடக்குப் பிரதேசத்துக்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும். இதனை யாரும் மறுக்க முடியாது.

இங்கே இன்னொரு விடயத்தையும் நாம் ஆழமாகக் கவனிக்க வேண்டும். வடக்கிலே உள்ள அதிகாரிகளும் சரி, அரசியல்வாதிகளும் சரி, அனைவரும் தமிழர்கள் அல்லது தமிழ்பேசும் சமூகத்தினரேயாகும். சில காலங்களில் மட்டும் ஆளுநராகப் பதவி வகித்தோர், சிங்களவர்களாக இருந்துள்ளனர். மற்றும்படி அநேகமாக அனைவரும் தமிழ்த்தரப்பினராக இருந்தபடியால், இனரீதியாகப் பாரபட்சம் காட்டி நிதியைச் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பியதாக யாரும் கதை (விட) சொல்ல முடியாது.

இப்போதுள்ள கேள்வி என்னவென்றால்,



ஒவ்வோராண்டும் திருப்பி அனுப்பப்பட்ட நிதியின் விவரமும் அந்த நிதி எந்த ஒதுக்கீட்டிற்கானது, எந்தத் திணைக்களத்திற்கானது என்ற விவரமும் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதைப் புதிய அரசாங்கம் வெளிப்படுத்துமா? என்பதேயாகும். அதைப் புதிய அரசாங்கம் வெளிப்படுத்துமாக இருந்தால், சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டேயாக வேண்டும்.

இந்த இடத்திலே இன்னொரு விடயத்தையும் நாம் குறிப்பிட வேண்டியுள்ளது. அண்மைக்காலத்தில் வடக்கு மாகாண ஆளுநர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் , அதிகாரிகள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. அப்படி மக்களுக்குப் பொறுப்பாக வேலை செய்ய முடியாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது அவர்கள் தமது கதிரையை விட்டு வெளியேற வேண்டும் என்ற குற்றச்சாட்டைப் பகிரங்கமாகவும் சற்றுக் காட்டமாகவும் முன்வைத்து வருகிறார்.

ஆளுநரின் கூற்றும் ஜனாதிபதியின் கூற்றும் (26ம் பக்கம் பார்க்க)

# பிரிந்திருந்த திருடர்கள் ஒன்று கூடி விட்டனர்! வல்வெட்டித்துறையில் ஜனாதிபதியின் உரை!

யாழிற்கு விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி வல்வெட்டித்துறை பிரதேசத்தில் 31 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை நண்பகல் சிநேகபூர்வ சந்திப்புக்களில் பங்கேற்றார்

மக்களை பிரிப்பதற்கு பதிலாக மக்களை இணைக்கும் அரசியலை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தமது அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பிவ்



கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டார் அதன்படி அவர் ஆற்றிய உரையில்,

கடந்த பொதுத் தேர்தலில் எம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாக்குகள் என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைப்பதற்கான வாக்குகளாக மட்டும் கருதப்படவில்லை. இந்த வாக்குகள் என்பன அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதற்கான வாக்குகளாகவே நாம் பார்க்கிறோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மலையகம் என அனைத்து மக்களின் அங்கீகாரத்தையும் பெற்ற இலங்கையின் முதலாவது அரசாங்கமாக எமது அரசாங்கம் தான் காணப்படுகிறது. கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள், வடக்குக்கு தனியான அரசியலையும், கிழக்கு தனியானதொரு அரசியலையும் தெற்கிற்கு தனியானதொரு அரசியலையும் தான் செய்தார்கள்.

இவர்கள் நாட்டு மக்களை பிரிக்கும் அரசியலில் தான் ஈடுபட்டார்கள். எவ்வளவு தூரத்திற்கு இவர்கள் மக்களை பிரித்தார்கள் என்றால், யுத்தமொன்று ஏற்படும் வரை பிரித்தார்கள். இதனால் தான் எமது பரம்பரை யுத்தம் செய்தது.

சந்தேகம், முரண்பாடுகளுடன் தான் அந்தப் பரம்பரை வாழ்ந்தது. இந்த நிலைமை மீண்டும் வேண்டுமா? நாம் பிரிய வேண்டுமா?

மக்களை பிரிப்பதற்கு பதிலாக மக்களை இணைக்கும் அரசியலை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நாம் மேற்கொண்டுள்ளோம். இதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்திற்கு ஜனாதிபதி உள்ளிட்ட எந்தவொரு அரசியல் தலைவரும் வருகைத் தந்துள்ளார்களா? — இல்லை.

நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதால் தான், வல்வெட்டித்துறைக்கு வருகைத் தந்துள்ளோம். நாம் இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்த வேண்டும்.

நான் இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் புதியதொரு விடயத்தை கொண்டுவரவுள்ளேன். ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.ஆனால், அனைத்து மக்களும் கொண்டாடும் ஒரு பண்டிகை எமக்கு வேண்டாமா? அதற்காகத் தான் அனைத்து மக்களின் கலாசாரம், உணவு, உடை, பண்பாட்டை பரிமாற்றிக் கொள்ள ஒரு விசேட தினத்தை ஒக்டோபரில் நடத்த தீர்மானித்துள்ளோம்.

நாம் பிரிந்திருந்தாலும் எமது பிள்ளைகள் பிரிந்து வாழ இடமளிக்க முடியாது. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக சாதாரண மக்களின் அரசாங்கமொன்று அமைந்துள்ளது. இதற்கு முன்னர் எல்லாம் பிரபுக்கள் தான் ஜனாதிபதியாகியுள்ளார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட இரண்டு ஜனாதிபதிகளின் மகன்கள் வேட்பாளர்களாக களமிறங்கினார்கள். எனினும், நாட்டு மக்களோ பிரபுக்களிடம் இருந்த அதிகாரத்தை சாதாரண மக்களிடம் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானித்தார்கள்.

நாம் யாரும் அரசியல் பின்புலத்தினால் இங்கு வந்தவர்கள் அல்ல. இது உங்களுக்கான அரசாங்கம். எமது அரசாங்கம். இதனால் தான் எமக்கு சவால்கள் பல உள்ளன. முதலில் கிராமிய மட்டத்தில் உள்ள வறுமையை இல்லாதொழிக்க வேண்டும்.

நாம் படிப்படியாக இந்தப் பிரச்சினைகளை தீர்க்க தயாராக உள்ளோம். கிராமிய மட்டத்திலான வறுமையை கல்வியே சிறந்தொரு ஆயுதமாகும். எனவே, அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வியை வழங்க வேண்டிய பொறுப்பு



அரசாங்கிற்கு உள்ளது. மேலும், அனைத்து பாடசாலைகளினதும் ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மாவட்ட செயலாளருக்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகள் தொடர்பாக அறியப்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, யாழ்., பொது நூலகத்திற்காகவும் வரவு- செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளோம். 300 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளில் உள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும், பாடசாலை உபகரங்களை பெற்றுக் கொள்ள 6 ஆயிரம் ரூபாயை வழங்கவுள்ளோம்.

அத்தோடு, 250 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை காலணியை பெற்றுக் கொள்ள 3 ஆயிரம் ரூபாயை வழங்கவுள்ளோம். பாடசாலையில் இலவசமாக உணவு வழங்க ஒதுக்கப்பட்டிருந்த 60 ரூபாயை 100 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சீனா அரசாங்கம் அடுத்த வருடத்திற்குமான பாடசாலை சீருடையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. இவ்வாறு கல்விக் கட்டமைப்பை பலப்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும்.

மேலும், காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளத்தில் 3 தொழிற்பேட்டைகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதில் முதலீடு செய்ய வருமாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். இதிலிருந்து தொழில் பிரச்சினையும் இங்கு தீர்க்கப்படும். இவ்வருடத்திலிருந்து அரச துறையிலுள்ள வெற்றிடங்களையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

விசேடமாக எமது பொலிஸ் துறையில் தமிழ் மொழி பேசக்கூடிய அதிகாரிகள் மிகவும் குறைவாகவே உள்ளார்கள். இந்த வருடத்தில் 2000 ஆயிரம் பேரை புதிதாக பொலிஸில் இணைக்க எதிர்ப்பார்த்துள்ளோம். எனவே, தமிழ் இளைஞர்கள் இதில் இணையுமாறு நான் அழைப்பு விடுக்கிறேன்.

தற்போது இங்கே போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமையை நான் அறிவேன். இளைய சமூகம் இதற்கு அடிமையாகியுள்ளனர். இதனை நிறுத்த நாம் சக்தி வாய்ந்த நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளோம். இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் தேவையாகும்.

வடக்கில் காணிப் பிரச்சினை நீண்டகாலமாக நீடித்து வருகிறது. எமது கொள்கையே மக்களின் காணிகள் மக்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பது தான். பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் காணியை எடுத்துக் கொள்ளும் உரிமை அரசாங்கத்திற்கு இருந்தாலும், தேவையில்லாமல் காணியை வைத்துக் கொள்ளும் உரிமை யாருக்கும் கிடையாது.

1500இற்கும் மேற்பட்ட நபர்கள் இன்னமும் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு விரைவிலேயே நாம் வீட்டு வசதிகளை செய்ய நடவடிக்கை எடுப்போம். அதேநேரம், வடக்கில் மீனவர்களது பிரச்சினையும் நீண்ட காலமாக நீடித்து வருகிறது. எல்லைத்தாண்டிய மீன்பிடி நடவடிக்கையினால் எமது மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எமது கடற் வளம் அழிவடைவதோடு, எமது மீனவர்களுக்கு கடலுக்கே செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. இது தொடர்பாக நாம் இந்திய அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். கடற்படையினரிடமும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கூறியுள்ளோம்.

இது உங்களுடைய கடல். உங்களுக்குத் தான் இங்கே மீன் பிடிக்க உரிமையுள்ளது. இந்தப் பிரச்சினையை தீர்க்க சில காலம் சென்றாலும், இது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை நாம் அறிவோம். சட்டவிரோதமான டொலர் படகுகளைப் பயன்படுத்தி, எமது கடல் வளம் அழிக்கப்படுது நிறுத்தப்பட வேண்டும். இதனை நாம் நிச்சயமாக செய்வோம்.

எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது தான் கடந்த தேர்தல்களில் மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது. மக்களின் வரிப்பணத்தை கொள்ளையடித்தார்கள். இதனை நாம் தான் நிறுத்தியுள்ளோம்.

காங்கேசன்துறை பகுதியில் ஜனாதிபதி மாளிகையொன்று உள்ளது. இங்கே ஒரு ஜனாதிபதி மாளிகை தேவையா? எனக்கு இந்த மாளிகை தேவையில்லை. இது தொடர்பாக நான் ஆளுநரிடமும் மாவட்ட செயலாளருக்கும் ஒரு விடயத்தை நான் கூறினேன். இந்த மாளிகையை எப்படி பயன்படுத்தலாம் என்பது தொடர்பான திட்டத்தை வழங்குமாறு அவர்களிடம் கோரியுள்ளேன்.

அங்கு பல்கலைக்கழகமொன்று வேண்டுமென்றால் அதற்கு அனுமதி வழங்கத் தயார். கலாசார மையம் ஒன்று தேவையென்றால் அதற்கும் அனுமதி வழங்கத் தயார். இங்கு மட்டுமல்ல, நுவரெலிய, அநுராதபுரம், மஹியங்கனை, கதிர்காமத்தல் உள்ள அனைத்து ஜனாதிபதி மாளிகைகளுக்கும் இதே தான் நிலைமை. இது மக்களின் பணம். மக்களின் பணத்தை வீணாக்கக்கூடாது. இந்தப் பணத்தை தேவையில்லாமல் செலவு செய்யக்கூடாது.

இது வறுமையான நாடாகும். இங்குள்ள மக்கள் வறுமையானவர்கள். ஆனால், மக்களை ஆளும் தலைவர்களோ சுகபோக வாழ்க்கையைத் தான் அனுபவித்து வருகிறார்கள். இந்த அரசியலை நாம் மாற்றியுள்ளோம். இதுதான் எமக்கு இன்று தேவை.

நாட்டை அபிவிருத்தி செய்யும் பணிகளை நாம் ஆரம்பித்துள்ளோம். விசேடமாக வடக்கை பிரதானமாகக் கொண்டு பல திட்டங்களை கொண்டு வரவுள்ளோம். இதற்கான நிதியை இவ்வருட வரவு- செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளோம்.

இங்குள்ள விவசாயிகள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வினை வழங்குவோம். எமது அடிப்படை பிரச்சினைகள், ஏன் யுத்தத்தின் பின்னணியில்கூட பொருளாதாரப் பிரச்சினை தான் காணப்படுகிறது. எனவே, இதற்கு தீர்வினைக் கண்டாலே, பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

மொழி ரீதியான பிரிவினையை இல்லாது செய்ய வேண்டும். தமிழ் மொழிலான அரசஅதிகாரிகள் எமக்கு தேவைப்படுகிறார்கள். (22ம்பக்கம் பார்க்க)

# மாவையும் மட்டக்களப்பும்

- அழகு குணசீலன் -

தமிழ்த்தேசிய சாத்வீக போராட்ட வரலாறு, ஆயுதபோராட்டமாக பரிண மித்த அரசியல் நிலைமாறு காலத்தை பதிவு செய்பவர்கள் எவரும் அன்றைய மூன்று இளம் தமிழ் தேசிய செயற் பாட்டாளர்களை மறந்தும் கடந்து





செல்லமுடியாது. அவர்கள் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா.

இவர்களில் காசி ஆனந்தனும், மாவை சேனாதிராஜாவும் தமிழ்த்தேசிய அரசி யல் களத்தில் நிலைத்து நின்றனர். அவர்களில் ஒருவரான மாவையின் மூச்சு 29.01.2025 அன்று நின்று போன தால் அவரும் ஈழப்போராட்ட வரலாற் றில் இறந்த காலமாகி விட்டார்.

வடக்கின் எந்த தலைவருக்கும் இல் லாத தமிழ்த்தேசிய அரசியல் உறவு கிழக்கில் மட்டக்களப்பில் மாவை சேனாதிராஜாவுக்கு உண்டு. 1970 களில் இருந்து இந்த போராட்டம் தமிழ் இளைஞர்களால் ஆயதப் போரா ட்ட சிந்தனையுடன் சமாந்தரமாக எடுத்துச் செல்லப்பட்டதிலும், அகி ம்சை போராட்டங்களுக்கு பாராளு மன்ற அரசியலுக்குள்ளும், வெளியிலும் வலுச் சேர்ப்பதிலும் இவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த இரண்டு கோடுகளும் ஒரு புள்ளியில் சந்திக்கின்ற வாய்ப்பு உண்மையான விடுதலை நோக்கில் நேர்மையான அரசியலை கொண்டிருக்கவில்லை என்பது கவலைக்குரியது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தமிழ்த் தேசிய அரசியலோடு சேர்ந்து பயணித்த தமிழ் இளைஞர் பேரவை யின் செயற்பாட்டு அரசியல் மட்டக் களப்பு இளைஞர்களுடனான தொடர்பை யும், மட்டக்களப்பு கிராமங்களின் தொடர்பையும் மட்டக்களப்பு, அம் பாறை மாவட்டங்களில் மாவைக்கு அதிகரித்தது. அந்த இளைஞர்களில் மூத்தவர்களில் பலர் இன்று எம்மத்தி யில் இல்லை. சிலர் இன்னும் இருக் கிறார்கள். இன்றைய தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல்வாதிகள் பலரு க்கு இது தெரிந்திருக்க வாய்ப் பில்லை. கிழக்கின் இன்றைய பாராளு மன்ற, அல்லது முன்னாள் பாராளு மன்ற அரசியல்வாதிகளில் — இன்றிருப் பவர்களில் பெருந்தலைவர் செ.இராச துரையும், கி.துரைராசசிங்கமும் மட்டுமே இதை நினைவுகூரக்கூடும்.

மாவையின் அரசியல் தொடர்பு அம் பாறை மாவட்டத்தில் அறப்போராட்ட குழு தலைவர் அரியநாயகம் முதல், பாண்டிருப்பு வேல்முருகு மாஸ்டர் வரை ஆழமான தளத்தை கொண் டது. தமிழர் கூட்டணி என்ற பெய ரைச் சூட்டியவரே அரியநாயகம் தான். தமிழர் மகாசபை ஊடாகவும், பாண்டி யூரான், செங்கதிரோன் கோபாலகிருஷ் ணன் ஊடாகவும், பொன்.வேணுதாஸ், பன்னீர்ச்செல்வம்.....போன்ற இளைஞர் களின் ஊடாகவும் நிலைத்த அரசியல் உறவு.

இந்த பிரதேசத்தில் மாவையுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்களாக வும், தமிழ்தேசிய வளர்ச்சிக்கு பங் காற்றியவர்களுமாக திரு.சிந்தாத்துரை, திரு.அரசரெத்தினம், வண.சிவநேசக் குருக்கள் போன்றவர்களும் குறிப்பிட த்தக்கவர்கள். மட்டக்களப்பு -பட்டிரு ப்பில் சி.மூ. இராசமாணிக்கத்தின் 1970 தேர்தல் தோல்விக்கு பின்னரும், மரணத்தின் பின்னரும் மண்டூர் வேலாயுதபிள்ளை மாஸ்டர், பழுகாமம் முத்துப்பிள்ளை மாஸ்டர், செட்டி பாளையம் லிங்கநாதன் மாஸ்டர், களுவாஞ்சிக்குடி பாக்கியராசா போன்ற வர்கள் ஊடாகவும் மாவை சேனாதி ராஜாவின் செயற்பாட்டு அரசியல் வலுப்பட்டது. 1970களில் தமிழ் இளை ஞர் பேரவையூடாக மண்டூர் மகேந் திரன், கல்லாறு நடேசானந்தம், கொக் கட்டிச்சோலை பகுதியில் இன்பராசா, தம்பிராசா, அரசரெத்தினம் (கப்டன் டேவிட்) போன்றவர்களால் தமிழ்த் தேசிய மக்கள் மயயப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டது. இதனால் மட்டக்களப்பு மண்ணில் கிராமங் களையும், அதன் வாழ்வியலையும், அவற்றின் அரசியல் தேவைகளையும் அறிந்திருந்த ஒரு வடக்கு தமிழ் தேசிய தலைமையை மாவைக்கு நிகராக அடையாளம் காண்பது கஷ்டம்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அன்றைய மட்டக் களப்பு அரசினர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை பெற்றதும், அவருக்கு ஆசிரியையாக பட்டிருப்பு முன்னாள் எம்.பி.யின் பாரியார் முத்துலட்சுமி கணேசலிங்கம் பாடம் எடுத்ததும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழக தலை வர் உமாமகேஸ்வரன் நில அளவை யாளராக பழுகாமத்தில் தங்கியிருந்து கடமையாற்றியதும் ஆயுதப்போராட்ட வீறுக்கு முந்திய காலங்கள்.

தமிழ்த்தேசிய பாராளுமன்ற மூத்த தலைமைகளுள் ஒருவரான மட்டக் களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் செல்லையா இராசதுரை, இளை ஞர் பேரவையின் அன்றைய தலைவர் அன்ரன் மற்றும் வாசதேவா, நிமலன் சௌவுந்தரநாயகம், வாகரை பிரான்ஸ் சிஸ் உள்ளிட்ட இளைஞர்கள் பல ரும் மாவைக்கு அறிமுகமாகி இருந் தார்கள்.

இதில் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் பெரும் பங்குண்டு. இந்த வழமைக்கு மாறான ஒரு நெருக்கமான உறவு தமிழ்த்தேசிய அரசியலோடு பிற்காலத் தில் முரண்பட்டு நின்றவர்களையும் கூட மாவையின் தொடர்பில் இருந்து பிரித்து வைக்கவில்லை. அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் இரு தரப்பும் இந்த உறவை இறப்பு வரை பேணினார் என்பது தமிழ்த் தேசிய அரசியலில் வழமைக்கு மாறான பாணி. இவற்றிற்கும் அப்பால் மாவையை மட்டக்களப்போடு கட்டிப் போட்ட சில விடயங்களை குறிப் பிட்டேயாக வேண்டும்.

மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி நீக்கப்பட்டு பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக பிரகடனம் செய்யப்பட்டது.

இராசதுரை -காசி ஆனந்தன் அரசி யல் மோதலில் மாவை சேனாதிராஜா வின் நிலைப்பாடு.

அ.அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் படுகொலைக்கு பின்னரான அரசியல் விபத்தில் மாவையின் பாராளுமன்ற பிரவேசம், தேசிய பட்டியல் பாராளு மன்ற உறுப்பினராக அவர் செயற்பட்ட விதம்.

1989, 1994 இல் வடக்கிலும், கிழக்கி லும் மாவை சந்தித்த பாராளுமன்ற தேர்தல் தோல்விகள்.

கடந்த கால ஆயுத அரசியல் கலாச் சாரத்தில் மாவை கொண்டிருந்த வெறுப்பும், காலப்போக்கில் புலிகளின் தலைமையுடனான உறவில் அதிகரித்த இடைவெளியும்.

பாராளுமன்ற அரசியல் வாதியாக மாவையின் அரசியல் அணுகுமுறை யும், செயற்பாடுகளும்.

பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதி உருவாக்கப்பட்ட போது ஏற்கெனவே அம்பாறை தமிழர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டிருந்த மாவை சேனாதிராஜா 1977 தேர்தலில் அங்கு போட்டியிட விரும்பினார்.(?). அல்லது தமிழர்விடுதலைக் கூட்டணி யின் அன்றைய செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தின் விருப்பமாகவும் அது இருந்து இருக்க முடியும்.(?). இந்த நிலைப்பாடு மாவையின் நெரு க்கத்தை இங்கு அதிகரித்தது. ஆனால் இராசதுரை -காசிஆனந்தன் முரண் பாடு அதிகரித்த நிலையில் அது மாவைக்கும் , அமிர்தலிங்கத்திற்கும் குறுக்கே வந்து நின்றது.

இந்த நிலையில் , இராசதுரை -காசி ஆனந்தன் மோதலை விரும்பாதவர்கள் காசி ஆனந்தனை ஏன்? பொத்துவிலில் நிறுத்தக்கூடாது என்ற கேள்வியை எழுப்பினர். இந்த நியாயமான கேள்வி க்கு பதிலளிப்பது அமிர்தலிங்கம் தலைமையிலான வேட்பாளர் நியமனக் குழுவுக்கு சிக்கலானது. புதிய தொகுதியில் மாவையை இலகுவாக வெற்றி பெற வைக்க முடியும் என்ப தற்கு பதிலாக நிலைமை எதிர்மாறாக

மோசமானது. வடக்கில் இருந்து ஒருவர் இறக்குமதி செய்யப்படுவது குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன.

பல அங்கத்தவர் தொகுதிகளில் வெற்றி பெறுவது ஒப்பீட்டளவில் இலகு வானது. கொழும்பு மத்தி, நுவரெலியா -மஸ்கெலிய மூன்று அங்கத்தவர் தொகுதிகளில் இது வெளிப்பட்டது. சிறிமாவோ பண்டாரநாயக்கா மகன் அநுராவை வெற்றி பெறவைப்பதற் காகவே நுவரெலியா -மஸ்கெலிய தொகுதியை மூன்று அங்கத்தவர் தொகுதியாக்கினார். சௌ.தொண்ட மான், காமினி திசாநாயக்க, அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் வெற்றி பெற்றனர். கொழும்பு மத்தியிலும் இதே நிலைதான். பிரேமதாச, செல்லச்சாமி யோடு முஸ்லிம் பிரதிநிதி ஒன்று வெற்றிபெறுவது வழமை. சி.டபிள்யு .சி, யு.என்பி, எஸ்.எல்.எப்.பி மூன்று கட்சிகளும், மூவினமக்களும் பிரதிநிதி த்துவம் பெற்றனர்.

இந்த இலக்கிலேயே மாவைக்கு பொத்துவில் குறி வைக்கப்பட்டது. இதை மட்டக்களப்பில் சாணைக்குறி'' என்பது மட்டக்களப்பு தமிழின் அழகு. பிறந்த பச்சைக் குழந்தை ஒன்றை போர்த்திக்கொள்ளும் துணியை சாணைச்சீலை என்பது வழக்கம். இந்த குறியீட்டின் அர்த்தம் உறவு முறைக்குள் பிறந்த குழந்தைகளை இன்னார்க்கு இன்னர் என்று ஊர், உறவுகள் பேசுவது. இதே போன்று தான் பொத்துவில் தொகுதியின் பிறப்பு மாவைக்கு சாணைக்குறி போட்டு கட்டி வைக்கப்பட்டது எனலாம்.


அதேவேளை இதையும் மீறி மாவையை பொத்துவிலில் இறக்கி னால் அதன் தாக்கம் மட்டக்களப்பில் காசி ஆனந்தனின் தேர்தல் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் மாவையை பொத்துவிலில் நிறுத்தும் முடிவு கைவிடப்பட்டு, அவசர அவசரமாக எம்.சி. கனகரெத்தினம் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். சூழ்நிலையை விளங்கிக் கொண்ட மாவை அமிர்தலிங்கத்தின் முடிவை ஏற்றுக் கொண்டார். மாவையை பொத்துவிலில் வெற்றி பெற வைப் பதை விடவும் இராசதுரையை தோற் கடிப்பது அமிர்தலிங்கத்தின் பிரதான நோக்காக இருந்தது. அன்று மாவை, காசி ஆகியோர் அமிர்தலிங்கத்தின் தடத்திலேயே சற்றும் விலகாது பயணி த்தனர். அவர் கீறிய கோட்டை தாண்ட மாட்டார்கள்.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் செ.இராசதுரைக்கும், காசிஆனந்தனுக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்ட நிலையில் உதயசூரியன், வீட்டு சின்னங்களில் இவர்கள் போட்டியிட்டனர். அப்போது தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கியஸ்தர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் இருவரில் எவருக்கும் ஆதரவாக பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கட்சி முடிவு செய்திருந்தது.


ஆனால் இந்த முடிவை மீறி கோவை மகேசன், ஈழவேந்தன், சிவபாலன் போன் றோர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து காசி ஆனந்தனுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை இதைக்கண்டு கொள்ளவில்லை. ஆனால் மாவை சேனாதிராஜா இந்த விடயத்தில் நடுநிலைமை வகித்தார். இதுவும் மட்டக்களப்பு மக்கள் மாவையை மானசீகமாக நேசிக்க காரணமாக அமைந்தது.

1989 விகிதாசார ரீதியான முதல் பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப் பில் அ.அமிர்தலிங்கம் போட்டியிட்டு தோல்வியுற்றார். ஆனால் வடக்கு கிழக் கில் கிடைத்த மொத்தவாக்குகளால் அவர் (25ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.




சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பணவரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்யம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## பிரிந்திருந்த திருடர்கள் ஒன்று கூடி விட்டனர்

(20ம் பக்கத் தொடர்ச்சி) எமது நாட்டின் மீண்டும் ஒரு மத ரீதியிலான, இனரீதியிலான முரண்பாடுகள் எழ நாம் அனுமதிக்கப் போவதில்லை. இனவாதத்துடன் செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவோம்.

மீண்டும் முரண்பாடுகளை செய்துக் கொண்டு எமது பிள்ளைகளின் எதிர் காலத்தையும் அழிக்கப் போகிறோமா?

தனியானதொரு நாட்டை பெற்றுக் கொடுப்போம் என்றுக் கூறி தேர்தலில் களமிறங்கியவர்கள், குடும்ப அதிகாரத்தால் தேர்தலில் களமிறங்கியவர்கள் என அனைவரையும் யாழ் மக்கள் நிராகரித்துள்ளார்கள்.

இதிலிருந்தே நீங்கள் பிரிவினையை விரும்பாதவர்கள் என்பது புலப்படுகிறது. அரசியல்வாதிகள் தான் பிரிவினை வாதத்தையும் இனவாதத்தையும் தூண்டி விடுகிறார்கள்.

தென்பகுதியில் இப்போதும் கூட சில அரசியல்வாதிகள் தங்களின் இருப்புக்காக இனவாதத்தை தூண்ட முற்படுகிறார்கள். இந்த அரசியல்வாதிகளுக்கு இனவாதிகள் தேவையாக இருக்கலாம். ஆனால், மக்களுக்கு தேவையில்லை.

நாம் ஐக்கியமாக வேண்டும். இங்கே உள்ள வல்வெட்டித்துறை வாழ் குடும்பங்களைப் போன்றதொரு குடும்பத்திலிருந்து தான் நாம் இங்கு வந்துள்ளோம். நாமும் உங்களைப் போல சாதாரண மக்கள் தான். எனவே, உங்களின் இந்த நம்பிக்கையை நாம் சீர்குலைக்க மாட்டோம்.

மக்களின் பணத்தை திருடியவர்களுக்கு தண்டனைக் கொடுக்க வேண்டுமா? இல்லையா?

இவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தண்டனைக் கிடைக்கும். பிரிந்திருந்த திருடர்கள் அனைவரும் நேற்று ஒரு கூட்டத்தை நடத்தி, ஒன்றிணைவது தொடர்பாக ஆராய்ந்துள்ளார்கள்

இந்தக் கூட்டத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் தெரியுமா? ஒருவர் மத்திய வங்கியை கொள்ளையடித்தவர். இன்னொருவர் அவுஸ்ரேலியாவில் வெள்ளையர் ஒருவரை ஏமாற்றியவர். இன்னொருவர் எரிபொருளில் ஊழல் செய்தவர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தப்பித்துக் கொள்ள முற்படுகிறார்கள்.

இவர்களுக்கு எதிரான விசாரணைகளை நிறுத்தவே இவர்கள் முற்படுகிறார்கள். ஆனால், மக்கள் எம்முடன் தான் இணைந்துள்ளார்கள். எனவே, இவர்களுக்கு எதிரான நடவடிக்கையை ஒருபோதும் நிறுத்த முடியாது. மீண்டும் இந்த நாட்டை குற்றவாளிகளுக்கோ, மோசடிக்காரர்களுக்கோ, திருடர்களுக்கோ கொடுக்க முடியாது.

## வேலையற்ற பட்டதாரிகளும் தமிழ்ச் சமூகமும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) இவர்களில் ஒரு பகுதியினர் திரும்பி வருகிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் வெளியேறத் துடிக்கும் அனைவரும் வாழ்க்கை இங்கு கடினமானது, மகிழ்ச்சியற்றது என்று கருதுகிறார்கள் என்பது மட்டும் உண்மை. அல்லது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வாழ்க்கை ஒப்பீட்டளவில் வசதியானது, பாதுகாப்பானது என்று நம்புகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

தமிழ்த் தேசியவாத கட்சிகளிடம் இது தொடர்பான பொருத்தமான பொருளாதாரத் தரிசனங்கள் இல்லை. அவர்களுக்கு தேசியவாத அரசியல் என்றாலே என்ன என்று தெரியவில்லை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பொருளாதாரம் ஆகும். ஆனால் தமிழ்க் கட்சிகளில் யாரிடமாவது பொருத்தமான பொருளாதாரத் தரிசனங்கள் உண்டா? இல்லை. ஒருபுறம் நல்ல பதவிகளை வகிக்கும் பட்டதாரிகள் புலம் பெயர்கிறார்கள். இன்னொரு புறம், வேலை கேட்டுப் போராடும் பட்டதாரிகள். அதே சமயம் கூலி வேலைக்கு ஆள் இல்லாமல், முதியோரை, இயலாதவர்களைப் பராமரிப்பதற்கு ஆள் இல்லாமல், சமைப்பதற்கு ஆள் இல்லாமல் தவிக்கும் நடுத்தர வர்க்கக் குடும்பங்கள்.ஒரு தேசமாகத் தமிழ் மக்கள் தமது பொதுப் பொருளாதாரத்தை எப்படிக் கட்டியெழுப்பப் போகிறார்கள்?

## தையிட்டி காணி விவகாரத்தில் ஜனாதிபதியை...

(24ம் பக்கத் தொடர்ச்சி) எழுப்பியிருக்கலாம். மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களின் சார்பாக தான் வாதிடவேண்டும்,மக்களின் உண்மை பிரச்சினையை எழுப்பியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அரசபக்கம் நின்று செயலாற்றுவது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது.

அர்ச்சுனா இராமநாதன் இந்த விடயத்தை திசை திருப்பியதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் வாய்திறக்காமல் விட்டதும் மிகப்பெரிய பிழையாகும். இந்த விடயத்தை நீங்கள் ஒரு கட்சி பிரச்சினையாக பார்க்ககூடாது. அரசியல்வாதியென்பவர் மக்களிற்கானவர். மக்களுக்காக அரசியல்வாதியொருவர் அந்த இடத்தில் வந்து நிற்க்கும்போது அதனை அரசியல் என தெரிவிப்பதை நான் எந்த இடத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

## தமிழர் அரசியலிலும் ஒரு முறைமை மாற்றம் தேவை

(7ம் பக்கத் தொடர்ச்சி) அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காது பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளோ 13 ஆவது திருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்வதற்கு முனைப்புக்காட்டப் போவதில்லை.

புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப் பிரச்சனைக்கான தீர்வு கிட்டும் என்ற எதிர்பார்ப்பு வெறுமனே கானல் நீர் ஆகும். தலைவர்கள் எனப்படுவோர் சரியான திசையில் செல்லவில்லையாயின் மக்கள் தாமாகவே அப்பொறுப்பைக் கையிலெடுக்க வேண்டும். தமிழர்களுடைய அரசியலிலும் ஒரு ‘முறைமை மாற்றம்’ தேவை.

## ஜனாதிபதி அநுராவின் யாழ்ப்பாண விஜயமும்.....

(27ம் பக்கம் பார்க்க) முடிவு வரை நடைமுறைப்படுத்தியதில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை வலுவான ஒரு நிலைக்கு கொண்டு வருவதற்காக தற்போதைய அரசாங்கம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உறுதிப்பாட்டுடன் இருக்கிறது போன்று தெரிகிறது. இனமோதல் விடயத்தில் அரசியல் தீர்வைக் காண்பதற்காக பல யோசனைகள் முன் வைக்கப்பட்டன. ஆனால் முன்னோக்கிச் செயற்பட்டு நிலைபேறான தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கான பலத்தை அல்லது நம்பிக்கை எந்த அரசாங்கமும் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் அந்த பலமும் நம்பிக்கையும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# தையிட்டி காணி விவகாரத்தில் ஜனாதிபதியை பதிலளிக்க விடாது குழப்பியவர் அர்ச்சுனா என காணி உரிமையாளர் விசனம்

ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க தலைமையில் இடம் பெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தையிட்டி விகாரை விவகாரம் குறித்து ஜனாதிபதி பதிலளிக்கவிருந்த சந்தர்ப்பத்தில் அர்ச்சுனா இராமநாதன் இந்த விடயத்தை திசை திருப்பியதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் வாய் திறக்காமல் விட்டதும் மிகப் பெரிய பிழையாகும் என தையிட்டி காணி உரிமையாளர்களில் ஒருவரான சுகுமாரி சாருஜன் தெரிவித்துள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த பிரச்சினையை எழுப்பிய போது கட்டாயமாக அவருக்கு பக்கபலமாக கதைத்திருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போராட்டம் கடந்த இரண்டு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் நடந்து வருகின்றது. நானும் அதில் இணைந்து கொண்டுள்ளேன். இதுவரைக்கும் எந்த தீர்வும் எட்டப்படவில்லை. பாராளுமன்ற தேர்தலிற்கு முன்னர் எமக்கான ஒரு சாதகமான சமிக்ஞை கிடைக்கும் என நாங்கள் எதிர்பார்த்தோம் - கிடைக்கவில்லை.

இம்முறை ஜனாதிபதி அபிவிருத்தி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வரும ்போது ஏதாவது சாதகமான சமிக்ஞை வெளியாகும் என எதிர்பார்த்திருந்தோம். இது குறித்து நாங்கள் பல தரப்புடனும் பேசியிருந்தோம். ஆளுநரிடம் முறையிட்டிருந்தோம், ஆளுநர் எங்களை சந்தித்து பேசியவேளை சாதகமான விதத்திலேயே பதில் சொல்லியிருந்தார். தீர்க்கப்பட வேண்டிய விடயம் என தெரிவித்திருந்தார்.

போனமுறை கூட்டத்தில் கூட திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எங்களின் பிரதிநிதியாக எங்களின் பிரச்சினையை அந்த இடத்திற்கு கொண்டு சென்றிருந்தார். அதேபோல சந்திரசேகரன் கூட இது தவறான கட்டிடம் அகற்றப்படவேண்டும் என தெரிவித்திருந்தார். அந்த அடிப்படையில் இந்தமுறை கூட்டத்திற்கு




ஜனாதிபதி வருகை தந்திருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த பிரச்சினையை ஜனாதிபதியை நோக்கி மிகவும் தாழ்மையான முறையில் முன்வைத்தார்.

அதனை ஒரு பொருத்தமான சந்தர்ப்பமாகவே நாங்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தோம். அந்த சந்திப்பில் பிரதேச செயலர் -ஆளுநர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டிய மிக முக்கியமான நபரான ஜனாதிபதியிருந்தார், எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவ தளபதிகள் என அனைவரும் அங்கு கூடியிருந்தனர் அந்த இடத்தில் ஜனாதிபதி விரும்பியோ விரும்பாமலோ ஒரு தீர்வை அல்லது பதிலை முன்வைக்க வேண்டிய இக்கட்டான நிலையை நெருங்கிக் கொண்டிருந்த போது, அதில் திடீரென குறுக்கே புகுந்த இராமநாதன் அர்ச்சுனா, இந்த பிரச்சினையை நஷ்டஈடு வழங்கி தீர்த்துக் கொள்ளலாம் ,இவர்களின் அரசியல் செல்லுபடியாகாது என தெரிவித்தமையானது, மிகுந்த மனவேதனையை தருகின்றது.

மக்களின் பிரதிநிதியாகிய நீங்கள் மக்களின் பிரச்சினையை ஒரு பொது வெளியில் கதைக்கின்றீர்கள் என்றால், பாதிக்கப்பட்ட மக்களுடன் தொடர்பாடியிருக்க வேண்டும், கதைத்திருக்க வேண்டும்.

எம்முடன் அவர் எந்த வித தொடர்பையும் பேணவில்லை பாதிக்கப்பட்ட மக்களுடன் எந்த தொடர்பையும் பேணவில்லை, அவர்களை தொடர்பு கொள்ளவில்லை, மேலும் ஜனாதிபதி கருத்து கூற முற்பட்டவேளை அதில் குறுக்கிட்டு திட்டடமிட்டு திசை திருப்பியாகவே நான் கருதுகின்றேன். அந்த இடத்தில் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் மீதும் மிகுந்த விரக்தி ஏற்படுகின்றது ஏனென்றால் நாங்கள் தனித்தனியாக எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கின்றோம் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்திருக்கின்றோம் இராணுவ அதிகாரிகளையும் சந்தித்திருக்கின்றோம்.

அனைவரும் எங்களை தனித்தனியாக சந்திக்கும்போது இது உங்களிற்கு நடந்த மிகப்பெரிய அநீதி என தெரிவித்தார்கள், பௌத்த மதகுருமார்களையும் சந்தித்திருக்கின்றோம் அவர்களும் இது உங்களிற்கு நடந்த மிகப்பெரிய அநீதி என தெரிவித்துள்ளார்கள். பௌத்த மதத்தை முறையாக பின்பற்றும் எவரும் இந்த அநீதியை முன்னெடுக்க முடியாது, இது தீர்க்கப்படவேண்டிய விடயம் ,நாங்கள் ஜனாதிபதியிடம் இது குறித்து அழுத்தங்களை பிரயோகிப்போம் என தனித்தனியாக தெரிவித்திருந்தார்கள்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட இது தீர்க்கப்படவேண்டிய விடயமே எனகூறியவர்கள்,ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த பிரச்சினையை எழுப்பிய போது கட்டாயமாக அவருக்கு பக்கபலமாக கதைத்திருக்க வேண்டும்.

அர்ச்சுனா இராமநாதன் குறுக்கிட்ட போது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களிற்கான தீர்வு அவசியம் என்ற விடயத்தை ஒருமித்த குரலாக முன்வைத்திருந்தால், ஜனாதிபதியின் வாயிலிருந்து உறுதிமொழியோ தீர்வுதிட்டமோ வெளியாகியிருக்கும் நாங்கள் அடுத்த கட்டத்திற்கு சென்றிருக்கலாம்.

ஆளுநரும் ஜனாதிபதிக்கு சந்தர்ப்பமொன்றை கொடுத்திருக்கலாம், இந்த பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப் போகின்றீர்கள் என்ற கேள்வியை தானும் (22ம் பக்கம் பார்க்க)



# மாவையும் மட்டக்களப்பும்

(21ம்பக்கத் தொடர்ச்சி) தேசிய பட்டியல் எம்.பி.யாக பாராளுமன்றம் செல்ல முடிந்தது. 1989 யூலை 13 இல் புலிகள் அமிர்தலிங்கத்தை படுகொலை செய்ததை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு மாவை நியமிக்கப்பட்டார். அதே தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிட்ட மாவை வெறும் 2,820 விருப்பு வாக்குகளை மட்டுமே பெற்று ஈரோஸிடம் படு தோல்வியடைந்தார். இதுவே அரசியல் விபத்து ஒன்றின் மூலமான மாவையின் பாராளுமன்ற அரசியலின் ஆரம்பம். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசிய பட்டியல் பிரதிநிதித்துவத்திற்கு கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் கிடைத்த வாக்குகள் பெரும் பங்களிப்பு செய்தன.

மேலும் மாவையின் பொத்துவில் தொகுதிக்கு எம்.பி.யாவது என்ற எண்ணம் தொடர்ந்தும் வலுப் பெற்று வந்தது. இதற்கு வடக்கில் வாய்ப்பு இல்லை என்று அவர் நினைத்திருக்கவும், பொத்துவிலில் இலகுவாக வெற்றி பெற முடியும் என்று நினைத்திருக்கவும் கூடும். இதனால் 1994 இல் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு தனது நீண்ட நாள் அரசியல் ஆசையை நிறைவேற்றினார்.

ஆனாலும் அவர் தோல்வியடைந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள் பலர் அவரின் நண்பர்களாக இருந்த போதும் மாவை அங்கு போட்டியிடுவதை விரும்பவில்லை. அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபையும், அதன் முக்கியஸ்தர்களும் சுயேட்சை குழு ஒன்றை களமிறக்கியதன் மூலம் மாவை தோற்கடிக்கப்பட்டார். இது அவரின் எதிர்கால பாராளுமன்ற அரசியலுக்கு சில படிப்பினைகளை வழங்கி. யிருக்க வாய்ப்புண்டு.

பின்னர் புலிகளின் மற்றொரு படுகொலை அவருக்கு மீண்டும் ஒரு விபத்து வாய்ப்பை வழங்கியது. நீலன் திருச்செல்வத்தின் கொலைக்கு பின்னர் ஏற்பட்ட தேசிய பட்டியல் வெற்றிடத்திற்கு மீண்டும் மாவை நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் அவருக்கு அம்பாறை தமிழர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற குற்ற உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதனால் மட்டக்களப்பு மண்ணுடனான தொடர்பு மேலும் அதிகரிக்க மாவைக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

தற்போது தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியையும் அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கி அபிவிருத்தி நடவடிக்கைகளும், வேலை வாய்ப்புக்களையும் வழங்கினார். தேசிய பட்டியல் எம்.பி.யான மாவை அம்பாறை மாவட்ட எம்.பி. போன்றே செயற்பட்டார். குறிப்பாக பெரிய நீலாவணை வைத்திய சாலை இவரின் முயற்சியாலும், நிதி ஒதுக்கிட்டாலும் அமைக்கப்பட்டது. 1989, 1994 இல் இவர் சந்தித்த தேர்தல் தோல்விகளும், தேசியப்பட்டியல் எம்.பி. பதவியும் மட்டக்களப்போடு அவரின் தொடர்பை அதிகரிக்க உதவின.

மாவை சேனாதிராஜா பொதுவாக முஸ்லீம் சமூகத்துடன் ஒரு நல்லிணக்க நிலைப்பாட்டை எப்போதும் கொண்டிருந்தார். இந்த உறவு அஷ்ரப் காலத்திற்கு முந்திய மன்சூர் மௌலானா காலத்து உறவு. இதனால் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மத்தியிலும் மாவைக்கு நற்பெயர் இருந்தது. என்றாலும் கல்முனை தமிழ் பிரதேச விவகாரத்திற்கு அவராலும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தீர்வு காண முடியவில்லை. ஆனால் மாவை தமிழ் — முஸ்லிம் இனவாத அரசியல் செய்யவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது, கிழக்கில் புலிகளால் மேற் கொள்ளப்பட்ட முஸ்லிம்கள் மீதான படுகொலைகளுடன் அவருக்கு உடன்பாடு இருக்கவில்லை.

இதற்கு பின்னரான 2000 ,2001,2004, 2010,2015 ஆகிய ஐந்து தேர்தல்களிலும் அவர் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றார். 2020 இலும், 2024 இலும் தேசிய பட்டியலுக்கு முயற்சி செய்தார் முதலாவதில் செயலாளர் கி.துரைராசசிங்கம் விரைந்து செயற்பட்டதில் கலையரசன் எம்.பி.ஆனார். 2024 இல் அவரது முதுமை முக்கிய தடையாக காரணமாக குறிப்பிடப் பட்டது.

2020 இல் கலையரசனுக்கு பதிலாக அவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அம்பாறை தமிழர்களுக்கு எம்.பி. இல்லாத நிலையில் தனது சேவையை அம்பாறை தமிழர்களுக்கே வழங்கியிருப்பார் என்று நம்பலாம்.

மட்டக்களப்பில் இடம் பெற்ற பிரச்சினை ஒன்றுக்கு மாவையூடாக தீர்வு காண முற்பட்ட சம்பவம் ஒன்றை மூத்த தமிழ்த்தேசிய நண்பர் ஒருவர் சொல்ல கேட்டிருந்தேன். மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள முன்னணிப் பாடசாலைகள் அனைத்தும் கிறிஸ்தவ பாரம்பரியத்தைக் கொண்டவை. ஒரு பாடசாலை மட்டுமே இந்துமத பாரம்பரியம் கொண்டது. அன்று இதன் அபிவிருத்தியில் பாரபட்சம் காட்டப்படுவதாக ஒரு கருத்து இருந்தது. இது மத ரீதியான முரண்பாட்டு பிரச்சினையா? தனி நபர்களுக்கு இடையிலானதா? அல்லது கட்சி அரசியல் காழ்ப்புணர்ச்சியா என்பதில் தெளிவில்லை. ஆனால் புறக்கணிப்பு என்று அபிவிருத்தி அக்கறை கொண்ட ஒரு பகுதியினர் கருதினர் .

மட்டக்களப்பில் தமிழ்த்தேசிய அரசியலில் பிரபலமான அந்த எம்.பி. குறிப்பிட்ட பாடசாலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யாததால் பாடசாலை அபிவிருத்தி அக்கறையாளர்கள் ஒரு திட்டம் போட்டனர். மட்டக்களப்பின் மூத்த தமிழ்த்தேசிய அரசியல் வாதியூடாக மாவை சேனாதிராஜாவையுடன் குறிப்பிட்ட எம்.பி.யையும் பாடசாலை நிகழ்வொன்றுக்கு அதிதியாக அழைக்க முடிவு செய்தனர்.

இதற்கு முன்னர் பல தடவைகள் அழைத்தும் எம்.பி. அதை தட்டிக் கழித்து வந்ததால் இந்த முடிவு. இந்த முறை மாவையும் வருவதால் அழைப்பை ஏற்க வேண்டிய கட்டாயம் ஒத்துக் கொண்டார். ஆனால் மாவை நிகழ்ச்சிக்காக யாழ்ப்பாணம் இருந்து வந்திறங்கிய போது, இறுதி நேரத்தில் தனக்கு கொழும்பு அமெரிக்க தூதரகத்தில் முக்கிய சந்திப்பு ஒன்று இருப்பதாக கூறி எம்.பி. கொழும்பு சென்று விட்டார் என்று சொன்னார் அவர். மட்டக்களப்பு பிரச்சினை ஒன்றுக்கு மாவையூடாக தீர்வைத் தேடும் அளவுக்கு அவருக்கு மட்டக்களப்பில் அரசியல் உறவும், அவர் மீதான நம்பிக்கையும் இருந்தது என்பது தான் இங்கு முக்கியமானது.



இயக்க மோதல்கள், தனிநபர்கள் மீதான அரசியல் படுகொலைகளை மாவை விரும்பவில்லை. மு.ஆலாலசுந்தரம், வி.தர்மலிங்கம் ஆகியோரை ரெலோ படுகொலை செய்ததில் இருந்து இது வெளியிடப்பட்டது. காலப் போக்கில் அமிர்தலிங்கம் உள்ளிட்ட அனைத்து கொலைகளையும் சிலர் தமிழ்த் தேசியத்தின் பெயரில் நியாயப்படுத்தியிருந்த போதும், மாவை நியாயப் படுத்தவில்லை அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டபோது அந்த சந்தர்ப்பத்தில் மாவையும் அமிரோடு இருந்திருந்தால் இன்றைய இறுதிச்சடங்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருக்கும் என்பதை மறுதலிப்பது கஷ்டம்.

மாவையோடு மிகவும் நெருக்கமாக அரசியல் செயற்பாட்டாளர்களாக இயங்கிய பலரதும் கொலைகள் அவரை பாதித்து இருந்தது. இதனால் புலிகளின் தலைமைக்கும் மாவைக்கும் இடையிலான உறவில் இடைவெளி அதிகரித்தது. சகோதர இயக்கங்களின் கொலைகளை அவர் துரோகிகள் என்ற பையில் போட்டு கட்டவில்லை.

கிழக்கில் மட்டக்களப்பில் மாவை சேனாதிராஜாவுடன் மிக நெருங்கிய அரசியல் உறவைக் கொண்ட வேல் முருகுமாஸ்டர், நிமலன் சவுந்தரநாயகம், கிங்ஸ்லி இராசநாயகம், அ.தங்கத்துரை, சி.சம்பந்தமூர்த்தி, சாம் . தம்பிமுத்து, கலாமாணிக்கம் கொலைககளும் அவரை பாதித்திருந்தன. அ.அமிர்தலிங்கம், வி.யோகேஸ்வரன் உள்ளிட்ட மற்றைய சகல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளாலும் மாவை பாதிக்கப்பட்டிருந்தார். மற்றும் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களும் ஒரு காலத்தில் அவரோடு செயற்பாட்டில் இருந்தவர்கள். இயற்கை மரணம் எய்திய மண்டூர் மகேந்திரனின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக தனது ஆரோக்கியமற்ற உடல் நிலையிலும் அவர் மட்டக்களப்பு வந்திருந்தார். அப்போது மாவை பல விடயங்களை நம்பிக்கைக்குரியவர்களுடன் மனம் விட்டு பேசியிருக்கிறார்.

மாவையின் பாராளுமன்ற அரசியல் பிரவேசம் அவரை விடுதலைப் போராளி என்ற நிலையில் இருந்து ஒரு வழக்கமான பாராளுமன்ற அரசியல்வாதியாக மாற்றி விட்டது. காலப்போக்கில் அவர் அதிலே மூழ்கி விட்டார். தேர்தல் அரசியல் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். எனினும் மாவை ஒப்பீட்டளவில் ஒரு நாகரிகமான பாராளுமன்ற அரசியல் வாதியாக இருந்தார்.

மோட்டு சிங்களவன்,..... போன்ற காழ்ப்புணர்ச்சி இனவாத வார்த்தைகளை அவர் எப்போதும் தவிர்த்து வந்தார். உட்கட்சி பிரச்சினைகளை பேசித் தீர்க்க விரும்பினார் எனினும் அது அவரின் கைகளில் மட்டும் சார்ந்து இருக்கவில்லை.

மாவை அவரின் உருவத்திற்கும், உயரத்திற்கும் ஏற்ற உறுதியான ஆளுமையோ, தலைமைத்துவப் பண்புகளையோ கொண்ட கட்சியின் கட்டளைத் தளபதி அல்ல.

அதனால் சுமார் இரு சகாப்தங்களாக தமிழ்த்தேசிய அரசியலுக்கு செயலாளராகவும், தலைவராகவும் அவரால் சரியான தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை. இந்த பலவீனம் தமிழ்த் தேசிய பாராளுமன்ற அரசியல் காய் நகர்வுகளும், இராஜதந்திர செயற்பாடுகளும் தோல்வியடைய காரணமாக அமைந்திருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. அவருடைய தலைமைத்துவ மெத்தன போக்கு தமிழரசுக் கட்சியை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளது. மாவையின் அறுபது ஆண்டுகளுக்கு மேலான தமிழ்த்தேசிய அரசியல் அனுபவம் இறுதியில் திக்கு தெரியாத ஒரு காட்டில் தமிழ் மக்களையும், கட்சியையும் கொண்டு போய் விட்டுள்ளது என்பது துரதிஷ்டம். என்றாலும் இந்த நிலைக்கான ஒட்டு மொத்த பொறுப்பையும் யாரும் மாவையின் தலையில் மட்டும் கட்டிவிடமுடியாது.

சமகால அரசியலில் அவரின் தலைமைத்துவ பலவீனம் பல குத்து வெட்டுகளுக்கும், குழி பறிப்புக்களுக்கும் காரணமான ஒரு பதவி வெறியாக எல்லாத் தரப்பிலும் மாறி விட்டது. வெளுத்ததெல்லாம் வெள்ளை என்று நம்பிய மாவையின் இந்த நிலைக்கு அவரது பலவீனத்திற்கும் பாதிப் பங்குண்டு.

தமிழ்த்தேசிய அரசியல் வரலாற்றில் மாவை எப்போதும் பதிவு செய்யப்பட வேண்டிய ஒருவர். ஆகக்குறைந்தது இந்த கொடூரமான தமிழ்த்தேசிய அரசியல் சூழலிலும் ஒப்பீட்டளவில் மாவையை ஒரு மானிட நேயம் கொண்டவராக அனைத்து விமர்சனங்களுக்கும் அப்பால் மட்டக்களப்பு அடையாளம் காணமுடியும்.



# அதிகாரிகளும் தமிழ் தலைவர்களும் மடங்கினர்!



(19ம் பக்கத் தொடர்ச்சி) ஏறக்குறைய ஒன்றாகவே உள்ளன. அதாவது அதிகாரிகளின் அசிரத்தையே பெரும்பாலான தவறுகளுக்கும் குறைபாடுகளுக்கும் காரணம் என்பதை இவை நிரூபிக்கின்றன.

இதேவேளை இவற்றோடு இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. திட்டமிடலிலும் அதற்கான தரவுகளைச் சேகரிப்பதிலும் கூட வடக்கு மிகப் பின்தங்கியதாகவும் பல வீனமுடையதாகவுமே உள்ளது. வடக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் குறைபாடுகளை நாம் தெளிவாகவே காண முடியும்.

குறிப்பாக வடக்கு மாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் மேற் கொள்ளப்பட்ட பல வேலைத்திட்டங்களும் அபிவிருத்திகளும் தோல்வியையே கண்டுள்ளன. பல கட்டிடங்கள் செயற்பட முடியாத நிலையில் பாழடைந்து கொண்டிருக்கின்றன. வாழ்வாதார உதவிகளுக்கென மேற் கொள்ளப்பட்ட பல உதவிகளும் நிவாரணங்களும் எந்த வகையிலும் குறித்த தரப்பினரின் வாழ்வை மேம்படுத்தவேயில்லை. அவ்வாறே சிறு தொழில் வளர்ச்சி, கூட்டுறவுத்துறை மேம்பாட்டுக்கான உதவிகள் போன்ற. வையும் வெற்றியைப் பெறாமல் படுத்து விட்டன.

இவையெல்லாம் சரியாகத் திட்டமிடப் படாமையின் வெளிப்பாடுகளே விளைவுகளேயாகும். அல்லது இவற்றைத் தொடர்ந்து கண்காணித்து, குறைகளை நிவர்த்தி செய்து மேம்படுத்தி, வெற்றியடையச் செய்திருக்க வேண்டும். அதுவும் திட்டமிடலில் ஒரு பகுதியேயாகும். அது செய்யப் படவேயில்லை.

ஆகவே பொறுப்பான அதிகாரிகள் (திட்டமிடற் பிரிவினர் உள்பட அதற்கு மேலுள்ள நிறைவேற்று அதிகாரிகள் வரையில்) இதற்குப் பொறுப்புடையோகின்றனர். இந்தப் பொறுப்பு வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்த செய்கின்ற அரசியற் கட்சிகளுக்கும் அரசியற் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் உண்டு.

அப்படியென்றால், இந்தக் கூட்டுத் தவறு ஏன் நிகழ்ந்திருக்கிறது? மக்கள் மீது இவர்களுக்கெல்லாம் அக்கறையே இல்லையா? என்ற கேள்விகள் உங்களுக்கு எழலாம்.

இதற்குப் பிரதான காரணம், பொறுப்பின்மையாகும். இரண்டாவது ஆற்றலின்மை. மூன்றாவது, அச்சம். நான்காவது, அரசியல்.

பொறுப்பின்மை என்பது அதிகாரிகள் மட்டத்தில் மட்டுமல்ல, சாதாரண ஊழியர்கள் மட்டுத்திலும் அரசியல் வாதிகளிடத்திலும் வளர்ச்சியடைந்துள்ள ஒரு தீவிர நோயாகும். தட்டிக் கழித்தலும் சாட்டுச் சொல்லுதலும் தமிழ்ச்சமூகத்தில் வலுத்து விட்டது. இதைத் தட்டிக் கேட்போரும் சுட்டிக் காட்டுவோரும் எதிராளிகளாக நோக்கப் படும் அளவுக்கு இந்த நோய் வலுத்துள்ளது.

இந்தப் பொறுப்பின்மை போருடன் சேர்ந்து வளர்ந்ததாகும். ஒரு கால கட்டத்தில் மிக அர்ப்பணிப்போடு பணியாற்றிய அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பின்னர் ஏனோ தானோ என்ற நிலைக்கு ஆளாகி விட்டனர். இதற்குக் காரணம், போர்க் காலத்தில் பொறுப்புச் சொல்வது சுலபம். போர்ச் சூழலில் நாம் இப்படித் தான் செயற் படக் கூடியதாக இருந்தது என்று சொல்லிக் கொள்ளலாம். அங்கே முழுமையான நிர்வாக விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. சூழலும் இல்லை. அப்படியாக இருந்தாலும் அதற்கான பொறுப்பை ஏதோ ஒரு தரப்பின் தலையில் விட்டு விடலாம்.

இப்போது (போருக்குப் பிந்திய சூழலில்) அப்படிச் செய்ய முடியாது. இப்பொழுது நிர்வாக விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்ய வேண்டும். பொறுப்புச் சொல்ல வேண்டும். அதற்குப் பழக்கப்படாத அதிகாரிகளே பலரும். இதை மூத்த அதிகாரிகளே ஒப்புக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம், பெரும்பாலான அதிகாரிகள் நீண்டகாலமாக அல்லது தமது பணிக் காலம் முழுவதுமே வடக்கிலேயே குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறாளர்கள். பிற இடங்களில் வேலை செய்யும் போது கிடைக்கின்ற அனுபவத்தைப் பெறாதவர்கள்.

ஆகவே ஒரு மந்த நிலை, ஆற்றலின்மை இவர்களிடத்திலே உருவாகியிருக்கிறது. இது பொறுப்பின்மையை வளர்த்திருக்கிறது.

அடுத்தது, அச்சமாகும். இது கூட வடக்கிற்குள் முடங்கியிருந்ததால் ஏற்பட்டது எனலாம். தாம் சுயாதீனமாகவும் தற்துணிவோடும் சில வேலைத்திட்டங்களை, தீர்மானங்களை முன்னெடுத்தால், அதற்காகப் பழிவாங்கப் படுவோமோ? அரசாங்கத்தின் ஆட்களாகக் கருதப்பட்டு விடுவோமோ? என்ற அச்சம்.

கூடவே அரசாங்கத் தரப்பு எதிர்த் தரப்பு என்ற பிரிகோட்டுக்குள் சிக்க வேண்டியிருக்கும் என்ற காரணத்தினால், தட்டாமல், முட்டாமல் ஏதோ இருக்கும் காலம் வரையிலும் கதிரையைக் காப்பாற்றிக் கொள்வோம் என்று நடந்து கொள்வது.

இதனால், தேவையான திட்டங்களை உருவாக்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் தயக்கம் காட்டுகின்றனர். உதாரணமாக, யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்த்திட்டம் இரணைமடு மருதங்கேணி பாலியாறு என மூன்று திசைகளில் இழுபடுகிறது. இதை துணிச்சலோடு அதிகாரிகள் அதற்கான அடிப் படையில் வாதிட்டு முன்னெடுத்திருக்க முடியும். அப்படிச் செய்யவில்லை.

நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வடிகாலமைப்புச் சபை ஆகிய இரண்டு தரப்பு அதிகாரிகளின் தயக்கங்களே இந்தத் திட்டம் இன்னும் இழுபறியில் இருப்பதற்கும் சர்ச்சையோடு நீடிப்பதற்கும் காரணமாகும். அதிகாரிகளிடத்தில் நீடிக்கின்ற தயக்கமே அரசியற் தரப்பினரிடத்திலும் உள்ளது.

ஆக கூட்டு மந்தத் தனமே இங்கே நிலவுகிறது. இறுதியான காரணம், அரசியலாகும். ஏற்கனவே சொல்லப் பட்டுள்ளதைப் போல அரசியல் சிக்கல்களுக்குள் தாம் உள்ளாக வேண்டி வந்து விடும் என்ற முன்னெச்சரிக்கையோடு தணிந்து பணிந்து மந்தமாகிப் போவதோடு, அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்று காட்டுவதற்கான பழியை அரசின் தலையில் கட்டி விடும் விதமாகவும் இந்தக் குறைபாடு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் புறக்கணிக்கிறது. எங்களுடைய கோரிக்கையை ஏற்கவில்லை என்று சுலபமாகப் பழியைச் சுமத்தி விடுவதற்கு இதை ஒரு கருவியாகவும் வாய்ப்பாகவும் பயன்படுத்தியுள்ளனர். இதை தமிழ் அரசியல்வாதிகள் தாராளமாக ஆதரித்துள்ளனர். அவர்களுடைய அரசியலுக்கு இது தேவையான கருப்புப்பொருள் அல்லவா!

இதனால் தான் ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படுவதைப் பற்றி இவர்கள் கேள்வி எழுப்பவேயில்லை. இனியும் கேட்கப் போவதில்லை. இப்படியான ஒரு நெருக்கடிச் சூழல் ஏற்படும் போது அது அதிகாரிகளின் குறைபாடு, தவறு, குற்றம் என அவர்களுடைய தலையிற் கட்டிவிடவே முயற்சிக்கின்றனர். அப்படியானால், எதற்காக இவர்கள் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்குச் செல்கின்றனர்? ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் போய்க் குந்தியிருக்கின்றனர்?

இப்போது NPPயும் அநுரவும் எல்லோருக்கும் சோதனையை சவாலை உருவாக்கியுள்ளனர். யதார்த்தத்துக்கு உண்மைக்கு நெருக்கமாக வர முடியாத வர விரும்பாத தரப்புகளுக்கு இனி அரசியல் எதிர்காலம் இல்லை என்பதை NPPயும் அநுரவும் சொல்ல விரும்புவதாகத் தெரிகிறது. அதற்கான NPPயோ அநுரவோ ஒன்றும் தேவதூதர்களோ, தேவ கட்டமைப்போ இல்லை. ஆனால், முடிந்தளவுக்கு எளிமையாகவும் இயல்பாகவும் சனங்களின் மீதான கரிசனையோடும் இயங்குவதை அவதானிக்க முடிகிறது.

புதிய அரசாங்கம், புதிய ஆட்சி புதிய தலைமை பல மாற்றத்தை உண்டாக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது. அதனுடைய அடையாளமே இந்த மணியடிப்பாகும். பார்ப்போம், இனி யாவது மாற்றங்கள், முன்னேற்றங்கள் நிகழ்கிறதா? என்று.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.**

**இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார்.**

**கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600**

# ஜனாதிபதி அநுராவின் யாழ்ப்பாண விஜயமும் அதன் தாக்கங்களும்!

கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- கலாநிதி ஜெகான் பெரேரா -

பாரம்பரியமாக நாட்டை ஆட்சி செய்தவர்கள் செயற்பட்ட பழைய வழிமுறைகளுக்கு சவால் விடுப்பதன் மூலமாக தனிப்பட்ட ஒருவரினால் கொண்டு வரக்ககூடிய நல்ல மாற்றத்தை ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்க காண்பித்துக் கொண்டிருக்கிறார். செய்தி ஊடகங்கள் மூலமும் யாழ்ப்பாணத்தில் உள்ள நம்பகமான கருத்துரையாளர்கள் மூலமும் அறியக்கூடியதாக இருந்த தகவல்களின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான ஜனாதிபதியின் கடந்த வாரத்தைய விஜயம் நாட்டின் இன ஐக்கியத்துக்கு மிகப்பெரிய ஒரு வெற்றியாக அமைந்திருக்கிறது.

ஏப்ரல் மாதம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி தேர்தல்களின் பின்புலத்தில் நோக்கும் போது பொருத்தமான ஒரு நேரத்திலேயே வடக்கிற்கான தனது விஜயத்தை அவர் மேற்கொண்டார் என்று தோன்றுகிறது.

தமிழ் மக்களின் நாகரிகத்தின் அமைவிடமாக யாழ்ப்பாணம் வகிக்கும் முதன்மை இடம் காரணமாக ஜனாதிபதியின் விஜயத்தின் கவனக் குவிப்பு பாழ்ப்பாணம் மீதே இருந்தது. யாழ்ப்பாணத்துக்கு என்று ஒதுக்கிய நேரத்தை ஜனாதிபதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு பயன்படுத்திக் கொண்டார்.

சேனாதிராஜா பிராந்திய சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சமத்துவ உரிமைகளுக்கான தமிழர்களின் போராட்டத்தில் பல தசாப்தங்களாக முன்னரங்கத்தில் நின்றவர்.

விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு சென்று பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துமளவுக்கு ஜனாதிபதி நம்பிக்கையுடன் செயற்பட்டிருக்கிறார்

வழமையாக ஜனாதிபதிகள் விஜயம் செய்யும் பகுதிகளின் கேந்திர இடங்களில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணம் நோக்கிய வீதிகளிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும். அந்த வழமையான பாதுகாப்பு ஏற்பாடு எதையும் ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயத்தின் போது காணமுடியவில்லை. கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது பாதுகாப்பு மிகவும் குறைவாக இருந்ததை யாழ்ப்பாண வாசிகள் அவதானித்தார்கள். கடந்த காலத்தில் ஜனாதிபதிகளின் விஜயங்களின் போது வீதிகள் மூடப்பட்டிருக்கும் என்பதுடன் குடியிருப்பு பகுதிகளின் வீதிகளில் 24 மணிநேரமும் பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர்.

குறைந்த மட்டத்திலான பாதுகாப்பு மக்களின் நல்லெண்ணத்தில் ஜனாதிபதிக்கு இருந்த நம்பிக்கையை வெளிக்காட்டியது. மக்களுடன் நெருக்கமாக கலந்து அவர்களைக் கட்டியணைத்து போட்டோக்களையும் அவர் எடுத்துக் கொண்டார்.

## அன்றாட கவனம்

மக்கள் மத்தியில் உரையாற்றியபோது யாழ்ப்பாணத்துக்கு அபிவிருத்தியைக் கொண்டு வருவதாக ஜனாதிபதி உறுதியளித்தார். வீடுகளையும் தொழிற்சாலைகளையும் நிர்மூலம் செய்த கடுமையான மோதல்கள் யாழ்ப்பாணத்தில் தொடங்குவதற்கு முன்னதாக அங்கு ஒரு சில தொழிற்சாலைகளே இருந்தன. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

இந்த தொழிற்சாலைகளை மீளக் கட்டியெழுப்புவதாக உறுதியளித்த ஜனாதிபதி வேலை வாய்ப்புக்களையும் பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்கு பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் புதிய கைத்தொழில் வலயங்களை நிறுவப் போவதாகவும் அறிவித்தார். போர் காரணமாக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த இலங்கையர்களை இந்த செயற்திட்டங்களில் முதலீடு செய்யுமாறும் அவர் அழைப்பு விடுத்தார். நாடு அனுபவித்த இனமோதலுக்கான காரணங்கள் தொடர்பான ஆய்வொன்றை முன் வைப்பதற்கும் வடக்கிற்கான தனது விஜயத்தை ஜனாதிபதி பயன்படுத்திக் கொண்டார். முன்னைய தலைமுறை அரசியல்வாதிகள் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு இனத்துவ தேசியவாதத்தைப் பயன்படுத்தியதன் விளைவாக மக்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டு சமூகங்கள் ஒன்றை மற்றது அவநம்பிக்கையுடன் பார்க்கும் நிலை தோன்றியது என்று அவர் கூறினார்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டு வந்த கடந்த பொதுத்தேர்தலில் உயர்வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த பாரம்பரிய அரசியல் தலைவர்களை மக்கள் நிராகரித்தனர். பதிலாக, இன, மத, பிராந்திய வேறுபாடுகளைக் கடந்து அவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். இது ஒரு புதிய நிகழ்வுப் போக்கு என்று ஜனாதிபதி தனதுரை



ரயில் சுட்டிக்காட்டினார். கடந்த நவம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. இந்த இரு மாகாணங்களிலும் மக்கள் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளைக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுக்கே பாரம்பரியமாக வாக்களித்து வந்திருக்கிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் சுயாட்சியும் தமிழர்களுக்கு சமத்துவமும் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே அந்த தமிழ்க்கட்சிகள் தேர்தல்களில் பிரசாரங்களைச் செய்து மக்களிடம் வாக்கு கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்தன.

ஆனால், தேர்தல்களில் பெற்ற ஆணையை அந்த கட்சிகளினால் ஒருபோதுமே நிறைவேற்றக் கூடியதாக இருந்ததில்லை. அந்த நாட்களில் சில தமிழ்க் கட்சிகள் ஆளும் கட்சிகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. ஆனால், பெரும்பாலும் அவை அரசாங்கங்களினால் ஏமாற்றப்பட்டதே வரலாறு. மக்களின் அன்றாட பிரச்சினைகளின் மீது ஜனாதிபதி செலுத்திய கவனம் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதற்கு மக்களைத் தூண்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும்.

## ஜெனிவா தீர்மானம்

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் ஆழ்ந்திருந்த தமிழ்த் தேசியவாதம் மற்றும் சுயாட்சிப் பிரச்சினைகளை ஜனாதிபதி திசாநாயக்க கையாளவில்லை என்ற போதிலும் கூட, யாழ்ப்பாண மக்கள் மீது நேர்மறையான ஒரு தாக்கத்தை அவர் ஏற்படுத்தினார் எனாபது மிகவும் கவனிக்கத்தக்கது. எதிர்வரும் தேர்தல்களும் உள்ளூராட்சி மட்டத்திலானவை என்பதால் அவற்றில் தேசியப் பிரச்சினைகளின் முக்கியத்துவம் குறைவாகவே இருக்கும். உலகம் பூராவும் உள்ளூராட்சி தேர்தல்களில் உள்ளூர் மட்டப் பிரச்சினைகள் பற்றியதாகவே இருக்கும்.

அரச நிறுவனங்களில் நிலவும் 30,000 ஆயிரம் வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளைகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் நிரப்புவது குறித்து ஜனாதிபதி தனது பொதுக் கூட்ட உரைகளில் பேசினார். தமிழ்பேசும் பொலிசாரை நியமிப்பது குறித்தும் அவர் குறிப்பிட்டார். நாட்டில் குழாய் மூலமான குடிநீர்ப் பாவனையைப் பொறுத்தவரை வடபகுதி மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதை அவதானித்த ஜனாதிபதி நீர்விநியோகத் திட்டங்களை மேம்படுத்துவது பற்றியும் பேசினார்.

தமிழ்த் தேசியவாதத்துக்கு எந்த சலுகைகளைச் செய்தாலும் அதை சிங்களத் தேசியவாதத்தை தூண்டி விடுவதற்கு தெற்கில் உள்ள தனது அரசியல் எதிரகள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை ஜனாதிபதி அறிவார். ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் ஆளும் கட்சிகள் ஒன்றுடன் மற்றது ஒத்துழைத்துச் செயற்படுவதன் மூலம் மீட்சி பெறுவதில் நாட்டம் காட்டுகின்றன.

சுயநல வேட்கை கொண்ட பாரம்பரிய உயர்வர்க்க அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த இனிமேலும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் முன்னைய ஊழலுககாக அவர்கள் சட்டத்தின் முன்னால் பொறுப்புக்கூற வைக்கப்படுவார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி செய்த அறிவிப்புக்களினால் முன்னைய ஆளும் கட்சிகளுக்கு தற்போதைய அரசியல் நிகழ்வுப் போக்குகள் பற்றிய அக்கறை அதிகரித்திருக்கும்.

தேர்தல்களில் ஆதரவைப் பெறுவதற்கு போட்டி அரசியல் கட்சிகள் இனத்துவ தேசியவாதத்தை பயன்படுத்தின என்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கூறியது மிகவும் சரியானதே. ஆனால், அதிகாரத்துக்கு வருவதற்கு இனத்துவ தேசியவாத அரசியல்வாதிகள் பயன்படுத்திய அடிப்படைப் பிரச்சினைகள் சகல சமூகங்களும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையில் கையாளப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இலங்கையில் தற்போது போர் இல்லை என்றாலும் போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியிலலேயே இன்னமும் நாடு இருக்கிறது. ஆனால், காணாமல் போனோர், நீண்டகாலச் சிறைக்கைதிகள், இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் தனியார் காணிகள், வடக்கு, கிழக்கில் தொடரும் இராணுவத்தின் பெரியளவிலான பிரசன்னம் ஆகியவற்றின் வடிவில் போருக்கான காரணங்களும் போரின் விளைவுகளும் தீர்க்கப்படாமல் இன்னமும் தொடருகின்றன.

இலங்கை போரின் முடிவுக்கு பினானரான ஒரு சமூகமாக இப்போது மாறவேண்டியது அவசியமாகும். அதற்கு தீர்க்கப்படாமல் தொடரும் போரின் விளைவான பிரச்சினைகளுக்கு தாமதமின்றி தீர்வுகளைக் காண வேண்டும். அதைப் பற்றியே ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உலிமைகள் பேரவையின் தொடர்ச்சியான தீர்மானங்கள் அமைந்திருக்கின்றன. கடந்த காலத்தில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன 16 உடன்படிக்கைகளைச் செய்திருக்கிறது. ஆனால், எந்தவொரு அரசாங்கமும் அந்த உடன்படிக்கைகளை(22ம் பக்கம் பார்க்க)

# நினைவஞ்சலிக் கூட்டம்





இடம்: Easttown Banquet Hall,
2648 Eglinton Ave E, Scarborough,
ON M1X 2S3

நேரம் : 3 மணிக்கு
காலம் : 09.02.2025

கனடா தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களின் ஒருங்கமைப்பில்

தமிழ்த்தேசியத்தின் மூத்த போராளி

## அமரர் மாவை சோ.சேனாதிராஜா அவர்களின்

கடந்த அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ்மக்கள் இன மொழி -மண் விடுதலைக்காக ஆட்சியுரிமைக்காகத் தன் உயிரையும் துச்ச மென மதித்து எத்தியாகத்திற்கும் தன்னை அர்ப்பணித்து அடக்கு முறையாளர்களின் பல்வேறு சிறைவாசம், சித்திரைவதை கொடுமைகளை அனுபவித்து விடுதலை வேட்கையும் தமிழரசு தாகத்துடனும் இறுதி வரை கொள்கைப்பற்றுடன் தமிழ் தேசியத்தின் வழிநின்று வாழ்ந்து மடிந்திட்ட சிறைமீண்ட செம்மலுக்கு - தமிழினத்தின் மூத்த போராளிக்கு -அஞ்சலி செலுத்த அணி அணியாகத் திரண்டு வாரீர் என அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழரின் தாகம் தமிழரசே!**

தொடர்புகளுக்கு :

திரு. சச்சிதானந்தன் – (647)202-3234 திரு. வீரசுப்பிரமணியம் – (416) 282-0947

திரு.துரைராஜா – (647) 829-4044 திரு. சோதி (647) 409-8966

திரு.அகிலன் – (647) 833-5131

## தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் – கனடா

## தடைகளை வெல்லும் தமிழ்த்தேசியம்

# காணிகளைப் படிப்படியாக விடுவிக்கும் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்கிறார் வடக்கு ஆளுநர்

இடம்பெயர்ந்த மக்களின் வலி வேதனை எனக்குத் தெரியும். காணி என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் உணர்வுபூர்வமான விடயம். மீள்குடியமர்வுக்கான நடவடிக்கைகளை தொடர்பில் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றேன். அரசாங்கமும் அந்த விடயத்தில் நேரான சிந்தனையில்தான் உள்ளது. படிப்படியாக காணிகளை விடுவிக்க என்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பினருக்கும் (PARL) இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் 95 பெப் 2025 மாலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் காணி தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

வலி. வடக்கில் முன்னைய ஜனாதிபதியின் காலத்தில் 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணியை விவசாயக் காணி என்று தவறாக அடையாளப்படுத்துகின்றனர். அது மக்களின் குடியிருப்புக் காணி. அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாமும் இன்னமும் அகற்றப்படவில்லை. மக்கள் குடியிருக்கவும் அனுமதிக்கப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் வலி. வடக்கில் இன்னமும் மீள்குடியமர வேண்டியவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது.

எமது காணிகளில் பாதுகாப்புத் தரப்பினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இப்போதும் எமது காணிகளுக்குள் பாதுகாப்புத் தரப்பினர் புதிய கட்டடங்களை அமைக்கின்றனர்.

பலாலி வீதியில், இன்னமும் மூன்று கிலோ மீற்றர்கள் விடுவிக்கப்பட்டாலே மக்களுக்கு முழுமையான நன்மை கிடைக்கும். விமான நிலையத்துக்கு மேலதிகமாக காணிகள் சுவீகரிக்கப்படத் தேவையில்லை. ஏற்கனவே சுவீகரித்த காணிகளே போதுமானது என ஆளுநருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

அதேபோன்று தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதக் கட்டடம் எனவும் விகாரைக்கு உரியதான காணியை மாற்றுக் காணியாக வழங்கினாலும் அது தொடர்பிலும் சந்தேகம் இருப்பதாகவும் காணி உரிமையாளர்கள் இந்தச் சந்திப்பில் தெரிவித்தனர்.

மாற்றுக்காணியின் உறுதியில் சிக்கல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமது காணிகளை விடுவித்துத் தர வேண்டும் என்று கோரினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர், காணி உரிமையாளர்களின் கோரிக்கைக்கு மாறாக நான் நடந்து கொள்ள மாட்டேன். காணி உரிமையாளர்கள் விரும்பாத எந்தவொரு தீர்வையும் திணிப்பதற்கும் நான் தயாரில்லை எனக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் இரணைதீவில் கடற்படையினர் இப்போதும் பாஸ் நடைமுறையைப் பேணுகின்றனர் என்றும் பாதுகாப்புத் தரப்பினரால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று மன்னார் மாவட்டத்திலும் சிறப்பு அதிரடிப்படையினராலும் காணிகள் அபகரிக்கப்பட்டுள்



என என ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டதுடன், கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ள என்றும் காணி விடுவிப்பின் அவசியத்தை முல்லைத்தீவு மாவட்டப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் காணியற்ற 114 குடும்பங்கள் மருதங்கேணியில் குடியமர்வதற்கு இணக்கம் வெளியிட்டபோதும் அவர்களுக்கு காணிகள் இதுவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் அரச காணிகள் பகிர்ந்தளிப்பில் நிலவும் சிக்கல் தொடர்பில் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. அவை தொடர்பில் கவனமெடுப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அதிகாரிகளும் சில இடங்களில் தவறிழைத்துள்ளனர் எனத் தெரிவித்ததுடன் வவுனியா மாவட்டத்தில் விரைவில் நடமாடும் சேவை நடத்தி தீர்க்கக் கூடிய காணிப் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்.

மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதியினது நிலைப்பாடு எனவும் அந்த நிலைப்பாட்டையே நானும் வலியுறுத்துகின்றேன் எனக் குறிப்பிட்ட ஆளுநர், மாவட்டச் செயலர்களாக 4 மாவட்டங்களில் பதவி வகித்தவன் என்ற அடிப்படையில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகள் தொடர்பான விவரங்கள் தெரியும் என்றும் அதனடிப்படையில் இது தொடர்பில் ஏற்கனவே பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சு நடத்தி வருவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

# ஜனாதிபதியும் சி.ஐ.டியினரும் முட்டாள்கள்! பிள்ளையான் கடும் சீற்றம்! வாய் திறந்த கோத்தா!

ஆசாத் மௌலானவை நாட்டிற்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம். சிஐடியினருக்கு ஒத்துழைப்பு வழங்கி ஆசாத் மௌலானவை கைது செய்ய உதவுவேன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து முன்னாள் செயலாளர் ஆசாத் மௌலானா வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து ஊடகமொன்றுக்கு பிள்ளையான் இதனை தெரிவித்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் என தெரிவித்து வெளிநாட்டில் நிரந்தர வதிவிடத்தை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஆசாத் மௌலானா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் ஆறு வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்றது. ஏன் அவர் அந்தவேளை அது குறித்த விபரங்களை அம்பலப்படுத்தாமல், நான்கு வருடங்கள் காத்திருந்த பின்னர் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவைக்கும் சனல் 4ற்க்கும் சென்றார்?



ஜனாதிபதியும் சிஜடியினரும் முட்டாள்கள். அவர்களிற்கு ஆயுதங்களை கைவிட்டவர்களிற்கும், ஐஎஸ் மற்றும் முஸ்லீம் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளிற்கும் இடையிலான வித்தியாசத்தை புரிந்து கொள்ள முடியாதா?

நான் ஆயுதப்போராட்டத்தை விரும்பாததால் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து முதலமைச்சரானேன். 2015 முதல் 2020 வரை சிறையிலிருந்த ஒருவரால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பேரழிவு தாக்குதலை எவ்வாறு திட்டமிட முடியும்.

ஆசாத் மௌலானவை நாட்டிற்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம். சிஜடியினருக்கு ஒத்துழைப்பு வழங்கி ஆசாத் மௌலானவை கைது செய்ய உதவுவேன் என தெரிவித்துள்ளார்.

### எனக்கு எதுவும் தெரியாது கோத்தா தெரிவிப்பு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்த சதி செய்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீது அசாத் மவுலானா முன்வைத்த குற்றச் சாட்டுகளுக்கு பதிலளித்த கோட்டாபய ராஜபக்ச இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துள்ளார்.

தயவு செய்து ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையை படியுங்கள், குற்றப் புலனாய்வு அதிகாரிகள் வழங்கியுள்ள சாட்சியங்கள் உட்பட.. குறித்த அறிக்கையில் உள்ளதைத் தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச டெய்லி மிரர் நாளிதழுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.







# Canada Shri Muththumaari Amman Temple

## அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

### நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக

### பெருஞ்சாந்தி விழா

**10-02-2025 திங்கட்கிழமை காலை 8 மணி**

ஐந்துகரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடிபோற்றுகின்றேனே

மணியே மணியினொளியே ஒளிருமணிபுனைந்த
அணியே அணியுமணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்குமருந்தே அமரர்பெருவிருந்தே
பணியேனொருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்ன

முருகனே செந்திமுதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியேநின் தண்டைக் காலெப்பொழுது
நம்பியே கைதொழுவேன் யான்

### கிரியைகள் ஆரம்பம்

வெள்ளிக்கிழமை காலை 5:30 மணி கணபதி
ஹோமத்துடன் தொடங்கும்

### எண்ணெய்க்காப்பு

08.02.2025 சனிக்கிழமை
காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை

### ஸ்தூபி அபிஷேகம்

10.02.2025 திங்கட்கிழமை
காலை 7:00 மணி

### மூல மூர்த்திகள் கும்பாபிஷேகம்

10-02-2025 திங்கட்கிழமை
காலை 8 மணி

மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மாலை 05:00மணியளவில் சிறப்பு பூசையைத்
தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரி அம்பாள், ஸ்ரீ விநாயகர், வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர் சுவாமிகளுக்கும் விஷேச வசந்தமண்ட
பூஜையுடன் திருவீதி உலாவும் நடைபெறும்.கும்பாபிசேக தினத்தை தொடர்ந்து 48 நாட்கள் நடைபெறும் மண்டலாபிஷேக பூஜையில்
உபயதாரர்களாக பங்குபெற விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்து அன்னையின் அருள் பெற வேண்டுகிறோம்.
மண்டலாபிஷேக பூர்த்தியன்று சிறப்பு பூசைகளுடன் மஹா அபிஷேகத்துடன் கூடிய 1008 சங்காபிசேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.
அனைத்து பூசைகளிலும் பக்தர்கள் அனைவரும் குடும்ப சகிதமாய் கலந்து கொண்டு
அன்னை ஸ்ரீமுத்துமாரியம்மனின் அருளை பெற்றிட வேண்டுகிறோம்

இங்ஙனம்
அன்னையின் இறைபணியில்
ஆலய நிர்வாகத்தினர்
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

www.shrimuththumaari.com

**Tel: 416-213-0110 | 104 Rivalda Rd., North York, ON M9M 2M8**

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 14 நவீன கட்டில்கள் அன்பளிப்பு

யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதிக்கு சிவபூமி அறக்கட்டளையினால் நேற்று 14 நவீன கட்டில்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் இந்த கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டன.





# யாழ்.மக்கள் தவறுதலாக தேசிய மக்கள் சக்தியின் 3 கத்தரித்தோட்ட வெருளிகளைத் தெரிவு செய்து விட்டார்கள்! அர்ச்சுனா பாராளுமன்றத்தில் அலம்பல்! புலம்பல்!



யாழ் மக்கள் தவறுதலாக தேசிய மக்கள் சக்தியின் மூன்று கத்தரித் தோட்ட வெருளிகளை யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்து விட்டார்கள் இந்த மூன்று கத்தரித் தோட்ட வெருளிகளினால் யாழ்ப்பாணத்தில் ஏதாவது நடந்திருக்கின்றதா என்றால் இல்லை.

யாழ்ப்பாணத்தில் பிறக்காத அமைச்சர் சந்திரசேகர் தான் சண்டித்தனம் செய்து என்னை ஏதாவது செய்யலாமா என்று சிந்திக்கலாம் 44 ஆயிரம் போராளிகள் உயிர் கொடுத்த எங்களின் தேசியத்தலைவரின் வழியில் நின்ற என்னை அச்சுறுத்தலாம் என நினைப்பது மிகவும் நகைச்சுவையானது என யாழ் மாவட்ட சுயேட்சை உறுப்பினர் இராமநாதன் அச்சுனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 06 பெப் 2025 வியாழக்கிழமை நடைபெற்ற புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

நான் உரையாற்றும் போது அமைச்சர் சந்திரசேகர் சபையில் இருப்பார் என நினைத்தேன். அவருக்கு தெளிவாக ஒன்றை சொல்கின்றேன். நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். தேசியத் தலைவன் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையை பார்த்து வளர்ந்தவன். நாங்கள் சர்க்கஸ் கூடாரம் வைத்தாலும் அங்கு கழுதைகள், குதிரைகள் வந்த நின்றாலும் அவற்றுடன் சேர்ந்து படம் எடுப்பதற்கும் தயாராகத் தான் இருக்கின்றோம். ஆனால் அவ்வாறான கழுதைகளை எங்களின் தலைவராக ஏற்றுகொள்ள யாழ் மண்ணில் பிறந்த எந்த தமிழரும் தயாரில்லை.

யாழ்ப்பாணத்தில் பிறக்காத அமைச்சர் சந்திரசேகர் சண்டித்தனம் செய்து என்னை ஏதாவது செய்யலாமா என யோசிக்கலாம். 44 ஆயிரம் போராளிகள் உயிர்கொடுத்த எங்களின் தேசியத்தலைவரின் வழியில் நின்ற என்னை வெருட்டலாம், அச்சுறுத்தலாம் என நினைப்பது மிகவும் நகைச்சுவையானது.

எமது இனத்தை காத்த ஆனந்த சுதாகரனின் விடுதலைக்காக இன்று வரை போராடிக் கொண்டிருக்கின்றோம். அவரின் குழந்தைக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த அரசு கூட அவரை விடுதலை செய்யவில்லை. முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக படுகொலை செய்த இராணுவத்தை பாதுகாக்கும் நிலைமிக்குத்தான் தேசிய மக்கள் சக்தி அரசு போயுள்ளது. படுகொலைகளுக்கான எந்த பொறுப்புக் கூறல்களும் இல்லை. யாழ்ப்பாணத்தில் 3000 வேலையில்லாத பட்டதாரிகள் இருக்கின்றார்கள். அவர்களுக்க உங்களினால் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க முடியுமா?

எமது மக்கள் தவறுதலாக இந்த அரசின் 3 கத்தரித்தோட்ட வெருளிகளை தேர்வு செய்து விட்டார்கள் இந்த 3 கத்தரித்தோட்ட வெருளிகளினால் யாழ்ப்பாணத்தில் ஏதாவது நடந்திருக்கின்றதா என்றால் இல்லை. மனம் போன போக்கில் இவர்கள் உள்ளார்கள்.

கடற்புலி படை, நிலப்படை,கரும் புலிப்படை, வான்படை என வைத்திருந்தது தான் எமது தமிழீழம் .எமது தேசியத்தலைவர் பிறந்த வல்வெட்டித்துறைக்கும் எனக்கு உங்களிலும் விட அதி கூடிய வாக்குகளை வழங்கிய சாவகச்சேரிக்கும் ஜனாதிபதி போய் சர்க்கஸ் கூடாரத்தில் நின்று ஆடுவதற்கான தேவையை யாழ் மண் உங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாதையோர வியாபாரிகள், பஸ் நிலையம் என பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றீர்கள். நான் உங்களுக்கு ஆதரவாக இருந்தவன். ஆனால் ஒருங்கிணைப்புக் குழு கட்டத்தில் என்னை பங்கேற்க விடக்கூடாது என்பதற்காக 23 ஆம் திகதி நடந்த சம்பவத்திற்காக 29 ஆம் திகதி கைது செய்தீர்கள். முடிந்தால் அமைச்சர் சந்திரசேகரை வரச் சொல்லுங்கள் என்றார்.

யுத்தத்திற்குப் பின் மனநலம் பாதிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர்

# சபையை விட்டு வெளியேற்ற நேரிடும்! அச்சுனாவை எச்சரித்த பிரதி சபாநாயகர்! அமைதியாக அடங்கிப் போனார் அர்ச்சுனா!



சபையில் அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனை படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி கடுமையாக எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் 06 பெப் 2025 வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமரிடத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது, சபாபீடத்தை அவமதிக்கும் வகையில் அவர் வசனமொன்றை வெளியிட்டதால் ஏற்பட்ட சர்ச்சையின் போது அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்து கொண்டமையினால் சபாநாயகர் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதி சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் போது, புதன்கிழமை பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பியினால் சபாநாயகரை பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக் காட்டியும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். அதேபோன்று நேற்று எம்.பியொருவர் இந்த ஆசனத்தை பார்த்து 'ஷேம்' என்று கூறி அவமதித்துள்ளார். நான் அவ்வேளையில் இந்த ஆசனத்தில் இருந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார்.

இவ்வேளையில் அர்ச்சுனா எம்.பி அது தொடர்பில் ஏதோ கருத்து தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்து கொண்டார். இதன் போது ஆசனத்தில் அமருமாறும் சபையின் ஒழுக்கத்தை பேணுமாறும் பிரதி சபாநாயகர் அவரை கேட்டுக் கொண்டார். ஆனால் தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களை கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார். இதனை தொடர்பில் அர்ச்சுனா எம்பி அடங்கிப் போய் அமைதியாக இருந்தார்.

## அர்ச்சுனா எம்.பி மோசடியாக சம்பளம் பெறுகிறாரா?

நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இராமநாதன் தனது அண்ணாவின் மகனை தனக்கு கீழ் பணிக்கு அமர்த்தி அண்ணனின் மகனின் சம்பளத்தையும் முழுதாக தானே கொள்வதாக சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ள நிலையில் அது தொடர்பில் பலரும் விமர்சங்களை முன் வைத்து வருகின்றனர். ஊழலுக்கு எதிராக தன்னை முன்னிலைப்படுத்தும் அருச்சுனா இராமநாதன் அண்ணன் மகனை வேலைக்கு அமர்த்தி , அவரின் சம்பளத்தையும் மோசடியாக தானே பெற்றுக் கொள்வது சரியா என கேள்வி எழுப்பி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தனது செலவு விபரங்களை பட்டியலிடுகையில், தனக்கான சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் என்பன தனது செலவீனங்களுக்குப் போதுமானதாக இல்லை இதனால் தனக்கு கீழ் நியமிக்க வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற சலுகையில், ஆய்வு அலுவலராக தனது அண்ணன் மகன் இராமநாதன் அறிவன்பன் என்பவரை நியமித்து, அவருக்கு பாராளுமன்றத்தினால் கொடுப்பனவாக வழங்கப்படும் 56,000 ரூபாவை பணத்தை முழுமையாக அவரிடம் இருந்து பெற்றே தனது செலவீனங்களை ஈடுசெய்வதாக தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை தனது மகனின் பாடசாலை கல்வி செலவு கொழும்பில் உள்ள வீட்டின் வாடகை செலவு என்பன உட்பட தனது ஆடைகளுக்காகவே 70 ஆயிரத்திற்கு மேல் செலவு உள்ளதாகவும். அதனால் தான் தனக்கு கீழ் நியமிக்கப்பட கூடிய ஆளணியில் அண்ணாவின் மகனை நியமித்து அந்த சம்பளத்தை முழுமையாக பெற்றுக் கொண்டாலும் தனது வாழ்க்கை செலவினை ஈடு செய்யமுடியாது திண்டாடி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளமை தொடர்பில் பலரும் கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு உளவியல் பிரச்சினை உள்ளது. ஆகவே அவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இங்கே சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் கிடையாது. இங்கே சிறுபான்மை என்று நாங்கள் எவரையும் கதைப்பதில்லை. பெரும்பான்மை என்று எவரும் செயற்படுவதில்லை.

இவ்வாறான கருத்துக்களுக்கும், செயற்பாடுகளுக்கும் சபையில் இடமளிக்க வேண்டாம். இவருக்கு தலையில் பிரச்சினை உள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள் என்று வலியுறுத்துகிறேன் என்றார்.